பக்கங்கள்: இருபத்து எட்டு + 2

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 2 வெள்ளிக்கிழமை (18.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 357



தமிழர் கலாசாரத்தை சீரழிக்கும் சுற்றுலாக்கள் 15



உரிய விளக்கம் அளிக்குக 21



இந்தியா இன்னிங்ஸ் வெற்றி 25

## சேகுவரா உயிருடன் இருந்திருந்தால் தமிழர் போராட்டத்தை ஆதரித்திருப்பார்

### சென்னையில் ஆணித்தரமாகத் தெரிவித்தார் லத்தீன் அமெரிக்க எழுத்தாளர் றொன்

சென்னை, நவ.18


புரட்சியின் அடையாள வீரராகப் போற்றப்படுபவரான சேகுவரா தற்போது உயிருடன் இருந்திருந்தால், தமிழர் போராட்டத்திற்கு அவர் தனது ஆதரவை வழங்கியிருப்பார் என்று குறிப்பிட்டார் லத்தீன் அமெரிக்க எழுத்தாளரான றொன்.

சென்னையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பேசியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். நிகழ்வில் றொன் எழுதிய 'சிறிலங்காவில் தமிழர் தேசம்' என்ற நூல் வெளியிடப்பட்டது.

இலங்கை பிளவுபடுதல், தனித் தமிழ் தாய்நாடு உருவாதல் ஆகியவற்றிற்கான மிகப் பலமான நிலைப்பாட்டை உருவாக்குதல் தொடர்பாக எந்தவொரு எதிர்க் கருத்துக்களும் இல்லை என்றும் இடதுசாரி எழுத்தாளரான றொன் றைடினோர் (Ron Ridenour) கூறினார்.

ஆர்ஜென்ரீனா நாட்டில் பிறந்தவரான சேகுவேரா, கியூபப் புரட்சியின்போது பிடல் காஸ்ரோவுடன் சேர்ந்து போராடியவர்.

பக் 25



## அதிகாரப் பகிர்வு குறித்த பேச்சு வெறும் கண்துடைப்பு

### ஏமாறப்போகிறது தமிழ்க் கூட்டமைப்பு என்று கூறுகிறார் மேதானந்த தேரர்

கொழும்பு, நவம்பர் 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கண்ணாம்மூச்சி காட்டுவதற்கே அரசு அதிகாரப்பகிர்வு குறித்து பேசத் தயார் என்று கூட்டமைப்பினரிடம் கூறியிருக்கிறது. போர் இடம்பெற்ற காலத்திலும்கூட நாட்டை இரண்டாகப் பிரித்தலுக்கும் அதிகாரப் பரவலாக்கலுக்கும் இடமளிக்காத அரசு, எதிர்காலத்திலும் அதற்குச் சம்மதிக்காது. அதிகாரப்பகிர்வு வழங்கியதன் பின்னர் கூட்டமைப்பினர் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைப்பர்.

இப்படித் தெரிவிக்கிறார் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏற்கமுடியாத எதிர்பார்ப்பான தனிநாட்டுக் கோரிக்கை மற்றும் புலிகளின் நோக்கத்தை வெளிப்புலத் தமிழ் மக்களிடையே தமிழ்க்கூட்டமைப்பு விற்பனைசெய்து அரசியல் செய்வதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டப் பேச்சுக்களின் 13 ஆம் கட்ட சந்திப்பு நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் இடம்பெற்றது.

அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேச்சு நடத்தத் தயார் என இந்தச் சந்திப்பின்போது கூட்டமைப்பிடம் அரச தரப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் எல்லாவல மேதானந்த தேரரிடம் கருத்துக் கேட்டபோது அவர் கூறியவை வருமாறு:

பக் 27

## ஆணைக்குழு அறிக்கை பற்றி ஐ.தே.க. எச்சரிக்கை

கொழும்பு, நவ.18

ஐ.நாவின் கேள்விகளுக்கு உரிய பதில் இருக்கும் பட்சத்திலேயே நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சாதகமாக அமையும் என அறிக்கை வெளியாகவுள்ள நிலையில், ஐ.தே.க. கருத்து வெளியிட்டுள்ளது.

முழுமையான அறிக்கையை ஆராய்ந்த பின்னரே அதன் குறைநிறைகளைக் கூறமுடியும். அத்துடன், உத்தியோகபூர்வமான கருத்துகளையும் முன்வைக்கமுடியும் என்றும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 20ஆம் திகதி கையேற்கின்றார். அதன் பின்னர் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாகக் கருத்துக் கேட்கும்போதே அந்

பக் 27

## தெற்காசியப் பிராந்தியத்திலேயே நீதித்துறை முன்னோடி இலங்கை

### சிறுவர் நீதிமன்றைத் திறந்து வைத்த நீதியமைச்சர் பெருமிதம்

யாழ்ப்பாணம், நவ.18

தெற்காசியப் பிராந்தியத்திலேயே நீதித்துறையில் முன்னோடியாக இலங்கை திகழ்கிறது என்று யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தெரிவித்தார் நீதித்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம். "நீதித்துறையைப் பொறுத்தவரையில் இந்தப் பிராந்தி

பக் 25



நேற்று யாழ்ப்பாணத்தில் நீதிமன்றங்களை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் திறந்து வைத்த போது...

## தமிழக மீனவர்களை மீண்டும் தாக்கியது இலங்கை கடற்படை

சென்னை, நவ.18

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடத்திய தாக்குதலில் இரு மீனவர்கள் காயமடைந்துள்ளனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தி பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதிய நிலையில் மீண்டும் இந்தத் தாக்குதல் அரங்கேறியுள்ளது.

பக் 27

## நிதானம் தவறிச்செயற்படின் கூட்டமைப்பை தமிழ் மக்கள் புறக்கணிக்கத் தொடங்குவர்

### எந்த அறிக்கையும் வரலாம், பேச்சுகள் நடக்கலாம்; அடிப்படைக் கொள்கைகளில் ஆட்டங்காண இடமளிக்காதீர் என்கிறார் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன்

கொழும்பு, நவ.18

எந்த அறிக்கையும் வரலாம்; போகலாம். எந்தப் பேச்சுகளும் நடைபெறலாம். ஆனால், எமது அடிப்படைக் கொள்கைகளில் பற்றுறுதியுடன் இருந்து ஸ்திரத்தன்மையுடன் கூட்டமைப்பினர் அரசுடன் பேச வேண்டும். அதைத்தான் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக நிதானத்துடனும், முன்னெச்சரிக்கையுடனும் நடந்துகொள்ளாவிட்டால் மக்கள் அதனைப் புறக்கணிக்கத் தொடங்கிவிடுவார்கள். தமிழ் மக்களின் ஒற்றுமையும் சீர்குலைந்துவிடும்.

- இவ்வாறு நேற்று 'உதயனிடம் கருத்து வெளியிட்டார் உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்

பக் 27



## ஜெயலலிதாவின் கொக்கரிப்புக்கு இலங்கை அஞ்சாதாம்

கொழும்பு, நவ.18

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதை கைகட்டி வேடிக்கை பார்க்கமுடியாது எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ள தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் தமிழக முதல்வரின் கொக்கரிப்புக்கு இலங்கை அஞ்சப்போவதில்லை என்றும் சீறிப் பாய்ந்துள்ளது.

பக் 26

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/பக்கங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழைக்கான சாத்தியமுண்டு.

## ஒத்திவைப்பு

வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் நாளை நடைபெறவிருந்த காலங்கடந்த பிறப்பு மற்றும் ஆவணப்படுத்தல் தொடர்பான நடமாடும் சேவை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதென பிரதேச சபை அறிவித்துள்ளது.

# பொலிஸாரினாலோ, இராணுவத்தினராலோ கோப்பாயில் பிரச்சினைகள் எதுவுமில்லை

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.18

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இராணுவதினராலோ, பொலிஸாரினாலோ பொது மக்களுக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லையாம்.

511 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் கொஸ்த்தா அந்தப்பகுதி மக்களின் தெய்வமாம்.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டத்திலேயே இவ்வாறு கூறப்பட்டது.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்

மக்கள் பாதுகாப்பு, பொலிஸ் திணைக்களம், மனித உரிமைகள் நிலையம், மத்தியஸ்தர் சபை, சிறுவர் பாதுகாப்பு என ஒவ்வொரு விடயமாகப் பரிசீலனை செய்யப்பட்டது.

இவ்வேளையில் பிரிகேடியர் கொஸ்த்தா இந்தப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்புத் தொடர்பாகவும், மக்களின்அபிவிருத்திக்கு இராணுவத்தினரின் பங்களிப்புத் தொடர்பாகவும் விளக்கினார்.

அதேபோன்று கோப்பாய் மற்றும் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் தமது செயற்பாடுகளைத் தெரிவித்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் இராணுவத்தினரும், பொலிஸாரும் தமது தரப்புத் தொடர்பாகக் கூறிவிட்டனர். பொதுமக்கள் என்ற வகையில் இராணுவத்தினராலும், பொலிஸாராலும் உங்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் கூறுங்கள் என்று மக்களிடம் கேட்டார்.

பிரிகேடியர் கொஸ்த்தாவும் தனது பங்கிற்கு நீங்கள் பயப்படாமல் கூறலாம், எங்கள் மீது முறைப்பாடுகள் இருந்தாலும் தெரிவிக்கலாம் - என்றார்.

பொதுமக்கள் எவ்விதமான கருத்தையும் கூறாமல் அமைதியாக இருந்தனர். இதனை அவதானித்த நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் பிரச்சினைகளே இல்லையா? அல்லது அமைதியாக இருக்கின்றீர்களா? என்றார்.

பொதுமக்கள் பகுதியில் இருந்து ஒருவர் மெதுவாக வாய் திறந்தார். கொஸ்த்தா ஐயா எங்கள் காவல் தெய்வம். இப்பொழுது எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கூறிவிட்டு அமர்ந்தார். (த-2)

# எல்லை நிர்ணயம் தொடர்பாக வலி கிழக்கு பிரதேச சபையின் தீர்மானத்தை ஏற்க முடியாது

### நாடாளுமன்ற உறுப்பினர் அலென்ரின் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.18

எல்லை மீள் நிர்ணயம் தொடர்பாக வலி.கிழக்குப் பிரதேச சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது. இது தொடர்பாக பிரதேச செயலகத்துக்கு மக்களை அழைத்து தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு ஈ.பி.டி.பியின் நடாளுமன்ற உறுப்பினரும், வலி.கிழக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான சில்வெஸ்திரி அலென்ரின் தெரிவித்தார்.

வலி.கிழக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இருபாலை தெற்கு ஜே/257, கல்வியங்காடு ஜே/259 ஆகிய இரு கிராம சேவகர் பிரிவுகளையும் நல்லூர் பிரதேச செயலகத்துடனும் உரும்பிராய் வடக்கு ஜே/264, ஊரெழு ஜே/267 ஆகிய இரு கிராம சேவகர் பிரிவுகளையும் உடுவில் பிரதேச செயலகத்துடனும் இணைக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

இதே வேளை வலி. கிழக்குப் பிரதேச சபையில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட எந்தவொரு பகுதியும் வேறு பிரதேச செயலகத்துடன் இணைக்கக் கூடாது என்ற தீர்மானம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் அலென்ரின், பிரதேச சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஒரு கட்சி சார்பானதே. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. பிறிதொரு தினத்தில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மக்களை அழைத்து கலந்துரையாடல் மேற்கொண்டு முடிவு எடுக்கப்படும்-என்றார்.(த-15)

# பங்குச் சந்தை சற்று உயர்வு

யாழ்ப்பாணம், நவ.18

தொடர்ந்து சரிவுநிலையில் இயங்கிவந்த கொழும்பு பங்குச்சந்தை நேற்று உயர்வடைந்து காணப்பட்டது.

நேற்றைய தினம் அனைத்துப் பங்குவிலைச் சுட்டெண் 69.68 வீத உயர்வால் 1.16 வீதத்தை வெளிப்படுத்தியது. அதேபோல் மிலங்கா விலைச் சுட்டெண் 37.86வீத உயர்வால் 0.72 வீதத்தை வெளிப்படுத்தியிருந்தது.

நேற்றைய வியாபார புரள்வாக 827 மில்லியன் ரூபா பதிவாகியது. அதிகூடிய பங்குகளாக 1 மில்லியன் பங்குகளை 2.80 ரூபா விலை வீழ்ச்சியில் ஜோன்கீல்ஸ் பரிமாற்றிக்கொண்டது.

இதுபோல் கொமர்ஷியல் வங்கி தனது பங்குகளை 2.90 ரூபா உயர்வில் பரிமாறிக் கொண்டது.

(த-10)

# கடாபி கொலைக்கு மௌனம்; இலங்கை விடயத்தில் தீவிரம்

### வெளிநாடுகளைச் சாடுகிறார் அமைச்சர் டியூ

''லிபிய ஜனாதிபதி கடாபி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக வாய்திறக்காமல் மௌனியாகவிருக்கும் மேற்குலக நாடுகள் இலங்கைப் பிரச்சினையைப் பெரிதுபடுத்துவதிலிருந்தே அந்தநாடுகளின் வெளிநாட்டுக்கொள்கை என்னவென்பது தெளிவாகப் புரிகின்றது'' என சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

அமைச்சர் டியூ குணசேகர மேலும் கூறியவை வருமாறு:-

''பழைய விடயங்களைத் தூக்கிப்பிடித்து நோர்வே அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது. அது மட்டுமின்றி, நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை தரம் வாய்ந்ததாக இருக்கவேண்டும் என அமெரிக்கா கூறியுள்ளது.

அமெரிக்காவில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தயாரிக்கவில்லை. எனவே, அமெரிக்காவின் உபதேசம் எமக்குத் தேவையில்லை என்றே நான் கருதுகின்றேன்.

- என்றார் அவர். (ங-சி)

# பட்ஜெட்டில் நிவாரணம் இல்லையேல் நாடுமுழுதும் போராட்டம் வெடிக்கும்

### ஜே.வி.பி. முழக்கம்

கொழும்பு, நவ.18

வரவு - செலவுத் திட்டத்தில் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கப்படாவிட்டால், நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் வெடிக்கும் என ஜே.வி.பி. எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜே.வி.பியின் கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில், ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், அந்தத் திட்டத்தில் பொதுமக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படாவிட்டால், எதிர்வரும் 24ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 6ஆம் திகதிவரை ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவுள்ளது என கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி அநுராதபுரத்திலும், 25ஆம் திகதி கொழும்பில் சில இடங்களிலும் தொடர்ந்து 28ஆம் திகதி அம்பாந்தோட்டையிலும், நவம்பர் 30ஆம் திகதி இளைஞர் கழகங்களை இணைத்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும், டிசம்பர் 4ஆம் திகதி கிரிபத்கொடையிலும், டிசம்பர் 5ஆம் திகதி மாத்தறையிலும் மற்றும் ஊவா மாகாணத்தின் பதுளையிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவோம் என அவர் தெரிவித்தார். (த-சி)

# துமிந்தவின் விவகாரத்தில் சட்டப்படியே அரசு செயற்படும்

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவைக் கைதுசெய்வது தொடர்பில் அரசு நாட்டின் சட்டதிட்டத்திற்கு ஏற்ப செயற்படும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மேலதிக சிகிச்சைக்காக வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அவரை அழைத்துச் சென்றது அரசு அல்ல. அவரது உறவினர்கள்தான். அவரைக் கைதுசெய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு ஒன்றையும் பிறப்பித்துள்ளது. இது தொடர்பில் நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு ஏற்ப அரசு செயற்படும் என்றார்.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த பாரத லக்ஷ்மனின் கொலை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவைக் கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதிவான் பொலிஸாருக்குத் தெரிவித்திருந்தார்.

துமிந்தவைக் கைது செய்வது தொடர்பில் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோன் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, துமிந்தவைக் கைதுசெய்ய இலங்கை அரசு சர்வதேச பொலிஸான இன்டர்போலின் உதவியை நாடவுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நிகழ்வுகள் இன்று

**சீருடை வழங்கல்**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளை முன்னிட்டு மானிப்பாய் தொகுதியைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு தமிழ் பௌத்த சங்கம் சீருடைகளையும் அதற்கான தையல் கூலியையும் வழங்கவுள்ளது. சங்கத்தின் தலைவர் அருள்நேசரத்தினம் ரவிக்குமார் இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்.நாகவிகாரையின் குரு ஸ்ரீவிமல ரட்ணதேரர் ஆசியுடன் காலை 8.30 மணிக்கு இவை வழங்கப்படவுள்ளன. (ம-7)

**கருத்தரங்கு**

அரச இணையங்கள் சந்தையில் பொது மக்களின் முதலீடு சம்பந்தமான செக்குறிட்டீஸ் லிமிடெட் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து நடத்தும் முதலீட்டாளர் கருத்தரங்கு காலை 9.30 மணிக்கு யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**சொற்பொழிவு**

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டு வரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'தேவிபாகவதம்' என்னும் தலைப்பிலான தொடர் சொற்பொழிவு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (த-236)

# வெள்ளைக்கொடி வழக்கின் தீர்ப்பு இன்று

கொழும்பு, நவ.18

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படவுள்ள நிலையில், இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான சர்ச்சைக்குரிய வெள்ளைக்கொடி வழக்கின் தீர்ப்பை கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று அறிவிக்கவுள்ளது.



இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வெள்ளைக்கொடிகளுடன் சரணடைய வந்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர் என்று யுத்த காலத்திலிருந்து ஊடகவியலாளர் ஒருவர் தன்னிடம் தெரிவித்ததாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறினார் என்று 'சண்டே லீடர்' பத்திரிகையில் வெளிவந்த செய்திக்கமைய கடந்த 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெள்ளைக்கொடி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கமைய இவ்வழக்கு டிரயல்-எட்-பார் முறையில் கொழும்பு மேல் நீதிமன்றில் நீதியரசர் தீபாலி விஜேசுந்தர தலைமையில் நீதியரசர்களான வராவெவ, சர்பிக் ரஷீக் ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வந்தது.

இவ்வழக்கு பிரதிவாதியான சரத் பொன்சேகா சார்பில் சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டியும், 'சண்டே லீடர்' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் பிரட்றிகா ஜோன்ஸ் சார்பில் பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் புவனேக அலுவிஹாரவும் வழக்காடினர்.

செய்தி ஆசிரியர் பிரட்றிகா ஜோன்ஸ் சார்பாக பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் வசந்த நவரட்ண பண்டார ஆரம்பத்தில் வழக்காடினார். எனினும், அவருக்குப் பதிலாக வழக்காடும்படி பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் புவனேக அலுவிஹார இடையில் நியமிக்கப்பட்டார்.

சர்ச்சைக்குரிய இவ்வழக்கில் சரத் பொன்சேகா இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலகி, ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கி மேற்கொண்ட மேடைப் பேச்சுகள் மேலும் சர்ச்சையை தோற்றுவித்திருந்தன.

அதாவது, இறுதி யுத்தம் தொடர்பாக தான் கூறிய கருத்துகள் திரிபுபடுத்துப்பட்டு - செம்மை செய்யப்பட்டு, தொலைக்காட்சி செய்திகளில் ஒளிபரப்பப்பட்டது என்ற குற்றச்சாட்டை சரத் பொன்சேகா முன்வைத்திருந்தார். அதற்கமைய அந்த ஒளிபரப்பப்பட்ட செய்திகளை பரிசீலனை செய்ய இணங்கிய நீதிமன்றம், அதனையும் வழக்கில் இணைத்துக்கொண்டது. நீதிமன்றிலும் அவை வழக்கு விசாரணையின்போது ஒளிபரப்பு செய்யப்பட்டன.

இதேவேளை, பேட்டியின் போது சரணடைய வந்த புலி உறுப்பினர்களை இராணுவம் சுட்டுக்கொன்றது என சரத் பொன்சேகா தெரிவித்தார் எனப் பிரட்றிகா ஜோன்ஸ் விசாரணைகளின்போது கூறிவந்தார். எனினும், "பேட்டியின்போது அவ்வாறு கூறவில்லை. பேட்டி முடிந்த பின்னரே மூன்றாவது தரப்பிடமிருந்து கிடைத்த தகவலையே கூறினேன்'' என சரத் பொன்சேகா தெரிவித்துவந்தார்.

இந்த வழக்கு விசாரணைகளில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, ஜே.வி.பியின் எம்.பி. அநுர குமார திஸாநாயக்க உள்ளிட்ட பலர் நீதிமன்றில் சாட்சியளித்தனர்.

இந்த வழக்கில் இறுதி சாட்சியளிப்பதற்கான சந்தர்ப்பம் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டது. இதில் அவர் நீண்ட சாட்சிய அறிக்கை ஒன்றை நீதிமன்றில் மூன்று தினங்களாக வாசித்தார்.

சரத் பொன்சேகாவுக்கு சிறையில் வசதிகள் குறைவு என வழக்கு விசாரணை நேரங்களில் பல தடவைகள் பிரதிவாதி சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி எடுத்துக் கூறினார். நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, சரத் பொன்சேகாவுக்கு வசதிகள் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அது அவ்வாறிக்க, பேட்டியின்போது தாம் அவ்வாறு கூறவில்லை என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மறுப்புத் தெரிவித்திருந்தபோது சரத் பொன்சேகாவின் அலுவலகத்துக்கு வந்து பிரட்றிகா ஜோன்ஸ், அந்தச் செய்தியை மறுக்கவேண்டாம் என்றும், அவ்வாறு மறுக்கும் பட்சத்தில் எனக்கு எதிராக நீதிமன்றம் செல்வர் என்றும் சரத் பொன்சேகாவிடம் பிரட்றிகா ஜான்ஸ் கண்ணீர் மல்க கோரியிருந்தமையும் இந்த வழக்கு விசாரணைகளின்போது வெளிச்சத்துக்கு வந்தது.

இந்த நிலையில், சுமார் ஒன்றரை வருடங்களாக நடந்து வரும் வெள்ளைக்கொடி வழக்கின் தீர்ப்பு இன்று அறிவிக்கப்படவுள்ளது.

இன்றைய தீர்ப்பு வழங்கலையொட்டி நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ங)

## வெளிநாட்டுக்கு பறந்தார் பிரட்றிகா

சரத் பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக்கொடி வழக்கின் பிரதான சாட்சியாளரான சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பிரட்றிகா ஜேன்ஸ் நாட்டை விட்டு வெளியே சென்றுள்ளார். இவருடன் லால் விக்கிரமதுங்கவும் சென்றுள்ளார் எனத் தெரியவருகிறது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மூன்று குற்றச்சாட்டுகளை முன்வைத்து தாக்கல் செய்யப்பட்ட வெள்ளைக் கொடி விவகார வழக்கின் தீர்ப்பு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இன்று வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ள நிலையிலேயே அவர் வெளிநாடு சென்றுள்ளார்.

## சடலம் மீட்பு

தூக்கில் தொங்கிய் நிலையில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரின் சடலத்தைச் சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டு நீதிவானின் உத்தரவுக்கமைய நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

கைதடி வடக்கில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைக் சேர்ந்த ரத்தினம் பரமேஸ்வரி (வயது 38) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். இது குறித்து பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(ங-4-288)

# கடத்தப்பட்ட பிரகீத் எக்னலிகொட கடலுக்குள் பிணமாக வீசப்பட்டார்

### பாதள உலகத் தலைவர் 'திடுக்' தகவல்

கொழும்பு, நவ.18

கடத்தப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் சடலத்தை நீர்கொழும்பு கடலேரிக்கு அப்பாலுள்ள கடலில் வீசியதாக பாதாள உலகக்குழுவின் தலைவரான தெமட்டகொட சமிந்த தகவல் வெளியிட்டுள்ளார்.

இலங்கைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தெமட்டகொட சமிந்த் குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகளின் விசாரணையின் போதே இதனைத் தெரிவித்ததாக 'லங்காநியூஸ்வெப்' இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

பாரத லக்ஸ்மன் பிறேமச்சந்திர உள்ளிட்ட நான்கு பேரின் கொலைகள் தொடர்பாக தெமட்டகொட சமிந்த கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் நம்பிக்கைக்குரிய ஒருவராவார்.

துமிந்த சில்வாவின் பணிப்பின் பேரில் பல சடலங்களை தான் இவ்வாறு கடலில் புதைத்தாகவும் தெமட்டகொட சமிந்த கூறியுள்ளார். சடலங்களை சாக்குப் பைகளில் சுற்றி கனமான கிரனைட் கற்களை கட்டி கடலில் வீசி விடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு முறை சடலங்களை புதைக்கும் போதும், பெரியமுதலாளியின் (கோத்தபாய ராஜபக்ஷ) உத்தரவின் பேரிலேயே இதைச் செய்வதாக தனது முதலாளி (துமிந்த) கூறுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறே ஒரு முறை ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் சடலத்தை துமிந்தவின் உத்தரவின் பேரில் நீர்கொழும்புக் கடலில் தான் வீசியதாக சமந்த தெரிவித்துள்ளார்.

என்னை எப்படியாவது கொல்லப் போகிறார்கள். நாம் கொலைகளைச் செய்தோம், போதைப்பொருள்களைக் கடத்தினோம்- இது உண்மை. இவை ஒன்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக அல்ல. முதலாளி எம்மைக் கேட்டுக் கொண்டதால் செய்தோம். இந்த விவரங்களை வெளிப்படுத்துங்கள். என்று சமந்த கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ங)

## மகர ஜோதி திருவிழா

கொழும்பு,நவ.18

ஐயப்பசுவாமி மகர ஜோதிப் திருவிழா அதிக எண்ணிக்கையான பக்தர்கள் சூழ நேற்று அதிகாலை 5.30 மணிக்கு கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் தம்பையா சத்திரத்தில் ஆரம்பமானது.

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சபரிமலைக்குருஜீ ஆன்மீக அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்பநாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் தலைமையில் ஆரம்பமான பூசை வழிபாட்டில் 110 பக்தர்கள் ஐயப்ப மாலை அணிந்தனர்.

நேற்றைய தினத்திலிருந்து தொடர்ந்த 48 நாள்கள் பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. இதில் பிரதி புதன், வெள்ளி, சனி தினங்களில் 1009 சங்காபிஷேக பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளது. 48 நாள்களும் சிறப்பான அபிஷேக பூசைகள், ஐயப்பன் பஜனை, 18 ஆம் படி பூசை உட்பட அன்னதான நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

## மாங்குளத்தில் வெடிபொருள்கள் மீட்பு

மாங்குளம் நவ.18

மாங்குளம் பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய தேடுதலின் போது பெருந்தொகையான வெடி பொருள்களையும் ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

60 மி.மீ. மோட்டார் குண்டுகள் 13, 40 மி.மீ. கிரனைட் லோன்சர் ரவைகள் 3, எஸ்.எம்.ஜி ரக கைக்குண்டுகள் 2, கைக்குண்டு 1, அருள் ரக கைக்குண்டு 1 ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட இந்த வெடி பொருள்களும் ஆயுதங்களும் மாங்குளம் இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (எ)

# புலிகளின் ஆயுதக் கப்பல்களை அழிக்க இந்தியக் கடற்படை உதவி செய்தது

### கசிகிறது இரகசியம்

கொழும்பு, நவ.18

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை அழிக்க இந்தியக் கடற்படை நேரடியாகவும் உதவி செய்த விடயங்கள் நான்கு வருடங்களுக்குப் பின்னர் இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. காலியில் நடைபெற்ற கடல் சார் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படையின் மூத்த அதிகாரியான லெப். கேணல் மொகமட் இப்ராகிம் என்பவரே இந்த இரகசியத்தை அவிழ்த்து விட்டுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்தவை வருமாறு:-

2007 ஆம் ஆண்டு ஆயுதங்களுடன் வந்த புலிகளின் சிறிகிருஸ்ணா என்ற கப்பல் மாலைதீவு கடற்பரப்பில் இயந்திரக் கோளாறால் நகர முடியாது நின்றிருந்தது. அதனைக் கண்ணுற்ற மாலைதீவு கடலோர காவற் படையின் 'ஹுராவி' என்ற கப்பல் புலிகளின் கப்பலை நோக்கி விரைந்தது. ஹுராவிக் கப்பலில் மாலைதீவு படையினருக்கு பயிற்சி அளிக்க்வென வந்த இந்திய அதிகாரிகள் இருந்தனர்.

எனினும் மாலைதீவு கடலோர காவற்படையின் கைககளில் தாம் கொண்டு வந்த ஆயுதங்களும் கப்பலும் சிக்கி விடக் கூடாது என்பதற்காக புலிகள் தாம் வந்த கப்பலில் டீசல் ஊற்றி தீ மூட்டி கொண்டனர்.

அதிலிருந்த இந்தியன் ஒருவரை கடலில் குதிக்க புலிகள் அனுமதித்தனர். மாலைதீவு படையினரால் கைது செய்யப்பட்ட அவர் விசாரணைக்காக இலங்கைக்க கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவர் கொடுத்த தகவலின் பேரில் தான் புலிகளின் ஏனைய ஆயுதக் கப்பல்களையும் இலங்கை கடற்படையால் குறிவைக்க முடிந்தது - என்றார். (ங)

# தூதரக அதிகாரிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், நவ.18

இந்தோனேஷியா, வியட்நாம் தூதுவர்கள் உள்ளடங்கலாக 5 நாடுகளின் தூதரக உயர் அதிகாரிகள் குழுவினர் நேற்றிரவ் யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமை தொடர்பாக கலந்துரையாடினர்.

இந்தத் தகவலை வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்

இந்தோனேஷியத் தூதுவர் ஜபார் ஹூசைன், வியட்நாம் தூதுவர் ரொன்சிங் தங் மற்றும் மலேசிய, இந்தோனேஷிய தூதரக அதிகாரிகளும் இந்தக் குழுவில் உள்ளடங்கியிருந்தனர் . (ங-4)

# பிரதமநீதியரசரிடம் சட்டத்தரணிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.18

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்திருந்த பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரிடம் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி எடுத்துரைத்தனர்.

யாழ். நீதிமன்ற கட்டடத் தொகுதியில் பிரதம நீதியரசர், நீதியமைச்சர் ஆகியோருடன் சட்டத்தரணிகள் கலந்துரையாடினர். இதன் போது அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:

* பொலிஸாரால் வழக்குத் தாக்கல்செய்யும் போது சமர்ப்பிக்கும் முதல் தகவல் அறிக்கை தனிச் சிங்களத்தில் இருப்பதால் இனி வரும் காலங்களில் அவற்றைத் தமிழில் பதிவு செய்தல்.
* சட்ட ஆவணங்கள், சட்ட நூல்கள்என்பவற்றின் தமிழ்மொழி பெயர்ப்பு கிடைக் வழி செய்தல்
* நீதிமன்றில் சட்டத்தரணிகளுக்கான இடவசதிகளை ஏற்படுத்துதல்.

இக்கோரிக்கைகள் குறித்து சாதகமாக ஆராய்வதாக நீதியரசரும், நீதிஅமைச்சரும் தெரிவித்தனர். (ங-4)

# முல்லைத்தீவு நகரின் குறைகளைப் போக்கி மீண்டும் புத்துயிர் பெற நடவடிக்கை தேவை

## முல்லைநகர வ.ச.தலைவர் வலியுறுத்து

வவுனியா,நவ.18

யுத்தம் முடிவடைந்ததையடுத்து முல்லைத்தீவில் மீளக்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் முல்லைத்தீவு நகரில் குறைபாடுகளைப் போக்கி மீண்டும் புத்துயிர் பெற நடவடிக்கை தேவையென முல்லை நகர வர்த்தக சங்கத் தலைவர் அருளப்பு வேதாரணியப்பிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடைகள், அலுவலகங்கள் என்பன அங்கு சீராகச் செயற்படத் தொடங்கியிருக்கின்றன. போக்குவரத்துக்களும் சிரமத்தின் மத்தியில் நடைபெறுகின்றன. ஏ-9 வீதியில் வவுனியாவுக்கு வடக்கே சுமார் பத்து மைல் தொலைவில் அமைந்துள்ள ஓமந்தைச் சோதனைச் சாவடியைத் தவிர அனைத்து இடங்களிலும் வீதிச் சோதனை நடவடிக்கைகள் நீக்கப்பட்டிருக்கிறது.

அந்த நகரத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களும் வர்த்தகத்துக்குரிய பொருள்களும் தடைகளின்றி ஏ-9 வீதி வழியாகக் கொண்டு செல்லப்படுகின்றன.

முல்லைத்தீவு நகரத்தில் 50,60 வீதமான வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டுள்ள போதிலும் அந்த நகரத்தைச் சேர்ந்த பழைய வர்த்தகர்கள் பலர் இன்னும் தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கவில்லை புதியவர்களே கூடுதலாக வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முல்லைத்தீவு நகர நிலைமைகள் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

மோசமாக சேத மடைந்துள்ள தமது பழைய கட்டடங்களைத திருத்தியமைப்பதற்கும் வர்த்தக முயற்சியைப் புதிதாக ஆரம்பிப்பதற்காக முதலிடுவதற்கும் கையில் பணமில்லாத காரணத்தால் பழைய வர்த்தகர்கள் வர்த்தகத்தில் இன்றும் ஈடுபட முடியாது இருக்கின்றனர்.

வங்கிகள் கடனுதவி வழங்குகின்ற போதிலும் கடன் பெறுவதற்குரிய காணி உறுதியையோ அல்லது அதற்கு ஒப்பான உடைமைகளைப் பிணையாகக் கொடுப்பதற்கும் அவர்களிடம் உரிய ஆவணங்கள் இல்லை. இதனால் நிரந்தரமான பழைய வர்த்தகக் கட்டடங்கள் பலவும் இன்னும் சிதைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. அவற்றைத் திருத்தியமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. கூரையில்லாத நிலையில் பழைய இடத்தில் சந்தை இயங்கி வருகின்ற போதிலும் அங்கு பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் அடிப்படை வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை.

மலசல கூட வசதிகளோ, குடிதண்ணீர் வசதிகளோ எதுவும் இல்லை. ஆயினும் அந்த சந்தையைப் புதிதாக அதே யிடத்தில் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கை அதிகாரிகளால் எடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டால் அந்த சந்தை தற்காலிகமாக வேறிடத்துக்கு மாற்றப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நகர வீதிகள் மிக மோசமாகச் சேதமடைந்து இருக்கின்றன. குண்டும் குழியுமாக உள்ள வீதிகளில் போக்குவரத்து செய்வது கஷ்டமாக இருக்கின்றது.

மழைகாலத்தில் மழைநீர் நிறைந்திருக்கிறது. வீதிகள் சேறும் சகதியுமாக நடமாடுவதற்கு முடியாதிருக்கின்றது.

முல்லைத்தீவு நகரத்தில் நிலவுகின்ற பல்வேறு குறைபாடுகள், தேவைகள் என்பவற்றைப் பூர்த்தி செய்து தருமாறு அரச அதிபர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

அத்துடன் மாதாந்தம் நடைபெறு கின்ற பல்வேறுதுறை சார்ந்த அதிகாரிகளும் அரச அதிபரும் கலந்துகொள்கின்ற கூட்டங்களிலும் எமது நகரத்தின் நிலைமையை எடுத்துக் கூறி உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்திக் கேட்டு வருகின்றோம்- என்றார்.

(எ)

# மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்கே முத்துஐயன்கட்டுக்குளம்

## முல்லைத்தீவு பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

ஒட்டுசுட்டான்,நவ.18

ஒட்டுசுட்டானில் முத்து ஐயன்கட்டு குளமானது மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கெனவே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்தக் காணிகளில் பெரும் போக விவசாயத்தை அதிகமாக மேற்கொள்வதாக முல்லைத் தீவு பிரதி விவசாயப் பணிப்பாளர் சிறிபால சுந்தரம் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் அண்மையில் இடம்பெற்ற விதை உற்பத்தித் திட்ட குழுத் தெரிவின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சின் நிதியுதவியுடன் விதை உற்பத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தியதில் இருந்து நிலக்கடலை, சோளம், உழுந்து என்பன செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.

முத்துஐயன்கட்டுக் குளமானது மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்கெனவே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்தக் காணிகளில் பெரும்போக விவசாயத்தை அதிகமாக மேற்கொண்டு வருகின்றனர்.

. இந்தக் காணியில் மீண்டும் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டும். விதை உற்பத்திக்கான காணிகளை இனங்கண்டு அந்தக் காணிகளில் உற்பத்திகள் மேற் கொள்ள வேண்டும்.

இந்த விதை உற்பத்தித் திட்டமானது இந்தப் பிரதேசத்துக்கு மட்டுமல்ல ஏனைய பிரதேசங்களுக்கும் மேற்கொள்ளப்படும்- என்றார். (எ)

# மன்னார் பொலிஸ் நிலைய வீதி வாகன நெரிசலால் திணறல்



மன்னார் பஸார் பகுதியில் இருந்து மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாகச் செல்லும் பிரதான பாதை கடந்த சில தினங்களாக வாகன நெரிசல் அதிகரித்து காணப்படுவதாக மன்னார் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது மன்னார் மாவட்டத்திற்கு அதிகளவான வாகனங்கள் வந்து செல்கின்றன. எனினும் குறித்த பாதை இரண்டு வாகனம் ஒரே நேரத்தில் பயணிக்க முடியாததாக காணப்படுகின்றது. இந்த நிலையில் இரண்டு வாகனங்கள் ஒரே நேரத்தில் பயணிக்கும் போது குறித்த வீதியில் திடீர் என வாகன நெரிசல் ஏற்படுகின்றது. இதனால் பாதசாரிகளும், சைக்கிள்களில் செல்பவர்களும் நீண்ட நேரம் காத்துக் கொண்டு நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடும் மழை பெய்து வருவதால் இந்த வீதியில் போக்குவரத்து நெரிசலில் அகப்படும் மக்கள் பல மணிநேரம் அந்தப் பகுதியைவிட்டு விலகிக் கொள்ள முடியாமல் உள்ளனர்.

இதனால் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழலும் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி மக்கள் இயல்பான போக்குவரத்துக்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (எ-601)

# வவுனியாவில் ஆராய்ச்சி மாநாடு கோலாகல ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளா கம் நடத்தும் 4 ஆவது ஆராய்ச்சி மாநாடு வவுனியா றோயல் காடின் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் மேற்படி மாநாட்டை நடத்திவருகிறது. பிராந்தியங்களின் அபிவிருத்திக்கு மேற்கிளம்பும் வாய்ப்புக்கள் என்ற தலைப்பில் இந்த முறை இம்மாநாடு இடம்பெறுகின்றது. வவுனியா வளாகத்தின் முதல்வர் ஆர்.நந்த குமார் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியை என். வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக வவுனியா வளாகத்தின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் எஸ். இராஜதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கையில் பல பாகங்களிலிருந்தும் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த ஆய்வாளர்கள் மூலமாக 42 கட்டுரைகள் ஆய்வுக்கு எடுக்கப்பட்டுள்ளதுடன் அவை 8 அமர்வுகளில் அறிஞர்களால் விவாதிக்கப்பட்டது. இதன்போது, களனி பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்பு பீடாதிபதி பேராசிரியை மனிக் குணசேகரா சிறப்புரையாற்றியதுடன் விசேட உரையை யாழ். பல்கலைக்கழகத்தின் பௌதிகத் துறைத் தலைவர் பேராசிரியர் பி.ரவிராஜன் ஆற்றினார். (எ)

# மல்லாவி வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்

மல்லாவி, நவ.18

மல்லாவி ஆதார வைத்திய சாலைக்கு யுனிசெவ் நிறுவனத்தின் நிதியில் நோயாளர் காவு வண்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு இரண்டு நோயாளர் காவு வண்டிகள் ஐ.ஓ.எம். நிறுவனத்தால் ஏற்கனவே வழங்கி இருந்தது. ஒப்பந்த காலம் முடிவடைந்ததால் இந்தச் சேவை இடை நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது நோயாளர் காவு வண்டி ஒன்று கிடைக்கப் பெற்றமையால் நிறைவான சேவையைப் பெறமுடியும் என நோயாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் பொன்நகர் கிராமம்

கிளிநொச்சியில் உள்ள பொன்நகர் கிராமம் இன்னமும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப் படாத கிராமங்களில் ஒன்றாக விளங்குகின்றது.

கிளிநொச்சி இரணைமடுச் சந்திக்குத் தெற்காகவும் ஏ-9 வீதிக்கு மேற்காகவும் திருமுறிகண்டி வரையான பெரிய நிலப்பரப்பைக் கொண்டதாக பொன்நகர் கிராமம் அமைந்துள்ளது.

இந்தக் கிராமத்தினுள்ளே அறிவியல் நகர் போன்ற சிறு கிராமங்களும் காணப்படுகின்றன.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் நிர்வாகம் இருந்த காலப் பகுதிகளில் பொன்நகரில் தமிழ்ப் பல்கலைக்கழகம், ஊடக அறிவியல் கல்லூரி, மருத்துவப் பயிற்சிக் கல்லூரி, வானிலை ஆய்வு மையம் போன்றன இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தக் கிராமத்தில் தற்போது 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்குள்ள மக்களின் பெரும்பாலானோர் அன்றாட கூலிவேலைகளைத் தொழிலாகச் செய்து வருகின்றனர்.

இவர்கள் யுத்தத்துக்கு முன்னர் இங்கு வசிக்கும் போது வர்த்தகர்களாகவும் ஏனைய நிறுவனங்களில் வேலைகளைச் செய்தும் வந்துள்ளனர்.

நடந்து முடிந்த யுத்தத்தால் தமது அடிப்படை வளங்கள் அனைத்துமே அழிந்துவிட்டதாகவும் அதனைப் பெறுவதற்குத் தமக்குதற்போது பணம், பொருள், வசதி இல்லை எனவும் இவர்கள் கூறுகின்றனர். இதனாலேயே கிடைக்கும் கூலி வேலைகளைத் தொழிலாகச் செய்து குடும்பத்தை நடத்துவதாகவும் கூறுகின்றார்கள். குடும்ப வறுமை காரணமாகச் சில மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையும் இங்கே காணப்படுகின்றது. யுத்தத்துக்கு முன்னர் இங்கு பல கல்வியாளர்கள் வாழ்ந்ததாகவும் அவர்கள் இந்தக் கிராமத்தின் முன்னேற்றத்தில் குறியாக இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

பொன்நகர் பகுதியில் அறிவியல் நகரில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் 50 வீடுகள் கட்டப்பட்டுப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி வீடுகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த 50 வீடுகளுக்கும் ஐந்து சிறிய பொதுக்குழாய்க் கிணறுகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் குழாய்க் கிணற்றையே குளிப்பதற்கும் குடிப்பதற்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

மேற்படி 50 வீடுகளும் கடன் அடிப்படையிலேயே மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 4 லட்சம் பெறுமதியான பணத்துக்கு வீடு, மலசல கூடம் போன்றன வழங்கப்பட்டுள்ளன. இவை உரியவர்களுக்கு வழங்கப்படும்போது இந்தவீட்டுக்கான பெறுமதியை மாதாந்தக் கடன் அடிப்படையில் இரண்டு வருடத்தின் பின் செலுத்த வேண்டும் எனக் கூறப்பட்டது.

ஆனால் இப்பொழுது ஆறு மாதத்திலேயே கடனை மீளச் செலுத்தத் தொடங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசால் வழங்கப்படும் வீட் டுத் திட்டங்கள இலவசமாக வேதான் வழங்கப்படுவதாகக் கூறிக் கொண்டு வீட்டுக்குப் பணத்தைச் செலுத்தச் சொல்கின்றார்கள் என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுயன்

(தொடரும்)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சமஷ்டி என்று உச்சரிக்க எவர் வருவார் இங்கு.....?

ஒடுக்கப்பட்ட சமூகங்களும், பிராந்திய மற்றும் மொழிவாரியான குழுக்களும் சமஷ்டி முறையிலான ஆட்சி அமைப்பு இல்லாமல் ஜனநாயக உணர்வைப் பெறமுடியாது. சமஷ்டி முறையிலான ஆட்சி அரசியல், முறை மூலமாகவே மக்கள் உண்மையான ஜனநாயகத்தை அனுபவிக்க முடியும். அதனூடாகவே அவர்கள் தமது உரிமைகளை அனுபவிக்க இயலும். அந்த முறையினால் மட்டுமே மக்கள் தங்களைத் தாங்களே ஆளமுடியும்.

இந்த அர்த்த புஷ்டியான கருத்தை வெளியிட்டிருப்பவர் பிரபல அரசியல் துறைப் பேராசிரியரோ, கல்விமானோ அல்லர். இந்து மன்னர்கள் ஆட்சி நீண்ட காலமாக நடைபெற்ற நேபாள நாட்டின் பிரதமர் பாபுராம் பட்டாராய் ஆவார்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில், திபெத்துக்கு அருகில் அவற்றின் எல்லைப் புறங்களில், அமைந்துள்ள சிறிய நாடாகும் நேபாளம். இமய மலையின் எவரெஸ்ட் சிகரம், உலகில் மிக உயர்ந்த சிகரம், அந்த நாட்டிலேயே அமைந்துள்ளது.

அங்கு நேபாளம், நியுவாரி, பூட்டியா ஆகிய மூன்று மொழிகளைப் பேசும் இனமக்கள் வாழ்கிறார்கள். நேபாளத்தின் விஸ்தீரணம் 56, 827 சதுர மைல்களாகும். அங்கு 30 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். மக்கள் அடர்த்தியாக வாழும் நாடுகளில் 41 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது அது.

நேபாளத்தில் இந்துக்களே பெரும்பான்மையினர். அங்கு பௌத்த சமயமும் சரித்திர காலம் தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனினும், அங்கு வாழும் மக்கள் இரண்டு மதங்களையும் வேறுபடுத்திப் பார்ப்பது மிகமிகக் குறைவு. அவர்கள் இரண்டு மதங்களின் அனுஷ்டானங்களிலும் ஈடுபடுகிறார்கள்.

பல்லாண்டு காலமாக இந்து மன்னர்களின் முடியாட்சி நிலவிய நாட்டில், பத்து வருடங்களுக்கும் மேலாக நடைபெற்ற குடிமக்கள் போராட்டத்தின் பின்னர், 2005 ஆம் ஆண்டில், மக்கள் ஆட்சிமுறை அறிமுகமானது. அதன் பெறுபேறாக 2008 ஆம் ஆண்டில், சமஷ்டி முறையிலான ஆட்சி நடைமுறைக்கு வந்தது. இப்போது அந்த நாடு சமஷ்டி ஜனநாயகக் குடியரசாக இயங்குகிறது.

ஆயினும், சமஷ்டி எந்த வகையில் அமைய வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அதாவது எந்த வகையான சமஷ்டி முறையில் குடியரசு ஆட்சி நடைபெற வேண்டும் என்பதில் வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றுவருகின்றன.

அது குறித்து விரைந்து முடிவு எடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சமஷ்டி விவகார அமைப்புச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆய்வுக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே பிரதமர் பாபுராம் மேற்கூறிய கருத்தினை முன்வைத்திருக்கிறார்.

நேபாளத்தில் சமஷ்டி ஆட்சிமுறை நடைபெற்ற போதிலும் மக்கள் நலன்களில் கருத்தைக்கொண்டு '' சமஷ்டி அரசு முறை மீளமைப்பும் அதனைச் செயற்படுத்தலும்'' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற ஆய்வரங்கிலேயே பிரதமர் கலாநிதி பாபுராம் பட்டாராய் இப் பத்தியின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

நாட்டு மக்களின் தனித்துவ அடையாளங்கள் மற்றும் தகைமை அடிப்படையிலான சமஷ்டி வடிவம் ஒன்றை உருவாக்குவதற்கான தேசிய நல்லிணக்கம் ஏற்கனவே ஏற்பட்டிருக்கிறது என்ற தகவலையும் அந்நாட்டின் பிரதமர் கருத்தரங்கில் வெளிப்படுத்தினார்.

ஆனால் நேபாளத்தை விட குறைந்த விஸ்தீரணமுள்ள (26,332 சதுர மைல்கள்) இலங்கையில், சமஷ்டி என்ற சொல்லைக் கேட்டதுமே சிங்கள அரசியல் தலைவர்களுக்கு வேப்பெண்ணையாகக் கசக்கிறது. தலையைச் சுற்றுகிறது; வானமே வந்து சிங்கள மக்களின் மேல் வீழ்ந்து அமிழ்த்தி விடும் என்ற ''அச்சத்தில்'' பதறுகிறார்கள்.

பிரித்தானியப் பேரரசிடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த சுமார் ஒரு வருட காலத்திற்குள்ளேயே அப்போதைய சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழர்களுக்கு சம அந்தஸ்து வழங்கக்கூடாது என்று முடிவுக்கு வந்தார்கள்; தமக்குள் ஒற்றுமைப்பட்டுக்கொண்டனர்.

ஆனால் இரு தடவைகள் (11 வருடங்கள்) நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகப் பதவி வகித்து, தமது ஆட்சிமுறை குறித்து இப்போது கழிவிரக்கம் கொள்ளும் சந்திரிகா குமாரதுங்காவின் தந்தையார் எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா -

சமஷ்டி ஆட்சியே இலங்கைக்கு உகந்தது என்ற நிலைப்பாட்டில் இருந்து பிரதமர் பதவியைப் பற்றிக்கொள்வதற்காக மாறியதும் -

பதவிக்கு வந்ததும், சமஷ்டிக்கு முழுப்பரிமாணத்தில் வேட்டு வைத்தது மட்டுமன்றி, தாம் வெற்றிபெற உதவிய பெரும்பான்மைச் சிங்கள வாக்காளர்களுக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில், தனிச் சிங்களச்சட்டத்தை நடைமுறையாக்கி, தமிழ் மக்களின் உரிமைகளைப் பூண்டோடு பிடுங்கி எறிய வேண்டும் என்று தேர்தலில் வெற்றிபெற தோள்கொடுத்த பஞ்ச பலசாலிகளிடம் சரணடைந்தும், அவர்களின் கோரிக்கைகளுக்கு அடிபணிந்ததும், இப்போது அரசியல் சரித்திரமாகி விட்டது.

சமஷ்டி என்றால் நாடு பிளவுற வழிசெய்யும் என்ற அச்சம் சிங்கள மக்களுக்கு ஊட்டப்பட்டதாலேயே, அதன் பின்னர் தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளுக்காக நடத்திய போராட்டங்கள் அரசின் அதிகார ஆயுத பலங்களால் அடக்கி, முறிக்கப்பட்டன.

அமரர் பண்டாரநாயக்கா, தனது கோட்பாடாகக் காட்டிய சமஷ்டி ஆட்சி முறையை, இப்போது உலகின் மிகச்சிறிய நாடுகள் பலவற்றிலும் அந்நாட்டு அறிஞர்களின் ஆலோசனைகளுடனும் ஆதரவுடனும் நடைமுறைக்கு வந்துள்ளது.- ஆனால் இன முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ள சமஷ்டி ஆட்சி முறை குறித்து இலங்கையின் சிங்கள அரசியல் தலைவர்கள் நினைத்தும் பார்க்கமாட்டார்கள்.

சிங்களம் மட்டும் சட்டத்தைத் தமது தந்தையார் கொண்டு வந்ததே இனப் பிரச்சினைக்கான மூலத்தவறு என்று இப்போது உணரும், கழிவிரக்கம் கொள்ளும் சந்திரிகா குமாரதுங்கா போன்று -

சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டுவந்திருக்கலாமே என்று சிங்கள அரசியல் தலைவர்கள் எவருமே தப்பித் தவறியும் கருத்துக் கூறமாட்டார்கள். அதனை நஞ்சாகவே கருதுவார்கள். நேபாள அரசியல் தலைவர்களின் அரசியல் நேர்மை தெற்கின் தலைவர்களுக்கு வரும் என்று ஒரு துளியும் எதிர்பார்க்க முடியாது. இந்த இலட்சணத்தில் தேசிய நல்லிணக்கம் தோற்றம் கொள்ள சாத்தியமுண்டா என்ன?

இலங்கையில் நல்லிணக்கம் உண்டாகுவதற்கு ஏதாவது நடவடிக்கை, ஏற்பாடு செய்யப்படுகிறதா, அதில் அரசுக்கு அக்கறை உண்டா, என்பதனைச் சர்வதேசம் ஊன்றி உன்னிப்பாக அவதானிக்கத் தொடங்கி உள்ளது. அதனாலேயே, ஆணைக்குழுக்களும் அறிக்கைகளும் என்று பிரலாபிக்கப்படுகிறது.

விசாரணைகளும், வெற்று அறிக்கைகளும் வெறும் ஏமாற்று வித்தைகளாகவே முடியும்!

தற்காலிக, அமைய அடிப்படையில் நியமனம் பெற்றவர்களில்

# அனர்த்தங்களால் இறந்தோருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்

யாழ்ப்பாணம், நவ.18

தற்காலிக அமைய அடிப்படையில் நியமனம் பெற்றவர்கள் பயங்கரவாத நடவடிக்கை மற்றும் இயற்கை அனர்த்தங்களால் இறந்திருந்தால் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை வடக்கு- கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கம் முன்னெடுத்துள்ளது.

ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 13.12.2010 திகதியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய இந்தத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்காலிக நியமனங்களைப் பெற்றவர்கள் பலர் இயற்கை அனர்த்தங்களால் இறந்துள்ளனர். பல வருடங்கள் கடந்த நிலையிலும் இன்றுவரை உரிய பயனாளிகளுக்கு சுற்றறிக்கையின் பயன்கள் எவையும் கிடைக்கவில்லை.

விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சட்டத்தின் திருத்தங்கள் கடந்த ஆண்டு ஓகஸ்ட் 17 ஆம்திகதி முதல் செயல்படுத்தப்பட்டுள்ளன.

பயங்கரவாதச் செயல்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் உயிர் இழந்திருப்பின் உரித்துக்களுடைய அரச அலுவலர்களுக்காக இறுதியாக வழங்கப்பட்ட ஊதியத்தை அடிப்படையாகக்கொண்டு விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்தினைத் திருத்தி அமைத்தல் உயிரிழந்த அனைவருக்கும் மற்றும் அநாதைப் பிள்ளைகளுக்கும் ஓய்வூதிய உரித்தைப் பெற்றுக் கொடுத்தல், ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு ஓய்வூதியத்தை வழங்குதல், 26 வயதுக்குக் குறைந்த அநாதைப் பிள்ளைகளுக்கு அநாதைகள் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுத்தல், பதவி வழக்கொழித்தல் மூலம் ஓய்வு பெறச் செய்யப்பட்ட அலுவலர்கள் 55 வயதுவரை செய்துகொண்ட விவாகங்களை அடிப்படையாகக் கொண்டு விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகளுக்கு ஓய்வூதிய உரிமையைப் பெற்றுக் கொடுத்தல், நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய 10 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தி இருப்பின் ஓய்வூதிய உரிமையை இழக்கும் அலுவலர்களுக்கு ஓய்வூதிய உரிமையைப் பெற்றுக்கொடுத்தல், மீள் விவாகம் செய்து கொள்ளும் விதவைகள், மற்றும் தபுதாரர்களுக்கு விதவைகள், தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்தின் 50 வீதத்தை வழங்குதல் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தகுதியான பயனாளிகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

ஊழியர்களின் நலன்களின் அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கம் இத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

(ம.311

# சர்வதேச கூட்டுறவு வருடமாக 2012 ஆம் ஆண்டு பிரகடனம்

யாழ்ப்பாணம்,நவ.18

நாட்டின் கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக அடுத்த ஆண்டு சர்வதேச கூட்டுறவு வருடமாக ஐக்கிய தேசிய ஒன்றியத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய கூட்டுறவுச் சபையின் செயலாளர் கலாநிதி சுனில் சில்வா தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்று வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் சகல மாவட்டக் கூட்டுறவுச் சபைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சகல மாவட்டங்களின் கூட்டுறவுச் சபைகளின் செயற்பாடுகள் பற்றி ஆராய்வதுடன் அவற்றை அபிவிருத்தி செய்வதன் மூலம் கூட்டுறவுத் துறையை மேலும் உயர் மட்டத்துக்குக் கொண்டு செல்லமுடியும்.

இந்தக் கூட்டுறவை அபிவிருத்தி செய்வதற்கு கூட்டுறவுப் பணியாளர்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாக உள்ளது.

இதற்காக கூட்டுறவை மேலும் அபிவிருத்திப் பாதைக்கு கொண்டு செல்வதற்காக 2012 ஆம் ஆண்டு சர்வதேச கூட்டுறவு வருடமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம-26)

# பகைவனுக்கு அருளும் உள்ளம்

ஒரு முனிவர் மாமரத்தடியில் அமர்ந்து தியானம் செய்து வந்தார். மரம் பழுத்து பழங்களால் நிரம்பியபோது, அந்த வழியாகச் சென்ற இருவர் பழங்களுக்காக மரத்தின் மீது கற்களை விட்டெறிந்தார்கள். ஆகவே சில பழங்கள் கீழே வீழ்ந்தன. சில கற்கள் முனிவர் மீது விழுந்து அவரைக் காயப்படுத்தின. அந்த நாட்டு அரசன் முனிவர் மீது பெரிதும் பக்தி கொண்டவன். அவன் நாள்தோறும் முனிவரின் இருப்பிடத்துக்குச் சென்று அவரைத் தரிசிப்பது வழக்கம்.

அன்றைய தினம் அரசன் தரிசனத்துக்கு வந்தபோது, முனிவரின் உடலிலிருந்த காயங்களைக்கண்டு திடுக்கிட்டான். அவன் பணிவோடு வணங்கி, ''காயத்துக்கான காரணம் என்ன?'' என்று விசாரித்தான். முனிவரும் நடந்ததை அரசனிடம் தெரிவித்தார்.

முனிவரிடம் விடைபெற்று புறப்பட்ட அரசன் வழியில் காவலாளிகளை அழைத்து, '' முனிவருக்குத் தீங்கிழைத்தவர்களைக் கண்டுபிடித்து சிறையில் அடையுங்கள்!'' என்று உத்தரவிட்டான். ''அந்தவிதமே காவலாளிகள் அந்த இரண்டுபேரைக் கண்டு பிடித்து சிறையில் அடைத்தனர். 'இந்தச் செய்தியைக்கேட்டு முனிவர் மகிழ்ச்சியடைவார்!' என்று நினைத்து அரசன், முனிவரிடம் சென்று விஷயத்தைச் சொன்னான்.

ஞானக்கதிர்

ஆனால் முனிவர், ''இந்த மரங்கள் தன்மீது கற்கள் வீசிய மனிதர்களிடம் கோபித்துக் கொண்டு' அவர்களுக்குப் பழங்கள் தராமல் இருந்ததில்லை. மரங்களே இப்படி இருக்கின்றன. அவற்றைவிட அறிவிலும், குணங்களிலும் உயர்ந்த நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அந்த இருவரையும் உடனே விடுதலை செய்யுங்கள். 'இனிமேல் இப்படிச் செய்யாதீர்கள்' என்று அறிவுரை கூறி அவர்களை அனுப்பிவிடுங்கள்'' என்று அரசனிடம் கூறினார்.

நன்றி ஞானச்சுடர்

**நாளை**

கார்த்திகை 03, சனிக்கிழமை 19.11.2011
திதி: நவமி பின்னிரவு 1.55 வரை
நட்சத்திரம்: மகம்
பி.ப. 1.03 வரை
சுபநேரம்: 3.09-4.39 வரை, ராகு காலம்: 9.09-10.39 வரை

# வாக்காளர் பதிவைத் தவறவிட்ட 4,163 பேர் உரிமைக் கோரிக்கை

## யாழ். தேர்தல் உதவி ஆணையாளரிடம் விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், நவ.18

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியலில் பதிவு செய்து கொள்ளத் தவறிய 4 ஆயிரத்து 163 பேர் வாக்காளர் பதிவுக்கான உரிமைக் கோரிக்கை விண்ணப்பங்களை யாழ். மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்துக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

இந்தத் தகவலை யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் கணக்கெடுக்கும் ஆரம்பப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

கணக்கெடுப்பின்போது பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்களில் 4 ஆயிரத்து 163 பேர் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

இது கடந்த 15 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் ஆகும்.

வாக்காளராகப் பதிவு செய்ய முடியாமைக்கான காரணங்களைக் குறிப்பிட்டு அநேகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

இந்த நிலையில் வாக்காளராகப் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் மாவட்ட செயலகத்தில் மக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வாக்காளராகத் தம்மைப் பதிவு செய்து கொள்ளத் தவறியவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் உரிமைக் கோரிக்கைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

கடிதம் மூலமும் விண்ணப்பத்தை ஏற்கும்படி வாக்காளர் எனக்குத் தெரியப்படுத்தலாம்.

அவ்வாறு தெரியப்படுத்தும் சந்தர்ப்பத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

பதிவு செய்யாத வாக்காளர்களை பதிவு செய்வதற்கான உரிமைக் கோரிக்கை விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்படி கிராம அலுவலர்கள் தூண்ட வேண்டும்.

இந்த விடயத்தில் பிரதேச செயலர்கள், உள்ளூர் அதிகார சபை செயலாளர்கள், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொறுப்புகள் உள்ளன.

எமக்கு இந்த மாதம் 15 ஆம் திகதி வரை கிடைத்த முறைப்பாடுகளினுள் விசாரணை செய்யப்பட வேண்டியவற்றை 16 ஆம் திகதியிலிருந்து விசாரணை செய்து வருகின்றோம்.

15 ஆம் திகதியிலிருந்து 30 ஆம் திகதி வரை கிடைக்கும் உரிமைக் கோரிக்கைப் படிவத்தினூடான முறைப்பாடுகளை டிசெம்பர் மாதத்தில் விசாரணை செய்யவுள்ளோம்.

ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியிலிருந்து 127 முறைப்பாடுகள், வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியிலிருந்து 78 முறைப்பாடுகள், காங்கேசன்துறை தேர்தல் தொகுதியிலிருந்து 8 முறைப்பாடுகள், மானிப்பாய் தேர்தல் தொகுதியிலிருந்து 587 முறைப்பாடு கள் இதுவரை கிடைத்துள்ளன.

கோப்பாய் தேர்தல் தொகுதியிருந்து ஆயிரத்து 907 முறைப்பாடுகள், உடுப்பிட்டி தேர்தல் தொகுதியிருந்து 81 முறைப்பாடுகள், பருத்தித்துறை தேர்தல் தொகுதியிலிருந்து 217 முறைப்பாடுகள், சாவகச்சேரி தேர்தல் தொகுதியிலிருந்து 260 முறைப்பாடுகள், நல்லூர் தேர்தல் தொகுதியிலிருந்து 459 முறைப்பாடுகள், யாழ்ப்பாண தேர்தல் தொகுதியிலிருந்து 327 முறைப்பாடுகள், கிளிநொச்சி தேர்தல் தொகுதியிலிருந்து 122 முறைப்பாடுகள் என்பனவும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவற்றில் வெளிநாடுகளிலிருந்து நேரடியாக விண்ணப்பித்தவர்களதும் வெளிநாடுகளில் வாழ்பவர்களுக்காக இங்குள்ள அவர்களது உறவினர்கள் விண்ணப்பித்த முறைப்பாடுகளும் உள்ளடங்குகின்றன.

இதேவேளை கடந்த ஆண்டு 7 ஆயிரம் முறைப்பாடுகள் மட்டுமே செய்யப்பட்டிருந்தன. அவற்றில் மூன்று மட்டுமே நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம- 15- 14)

# வழிகாட்டி பெயர் கல்லையும் விட்டு வைக்காத விஷமிகள்

நவாலி, நவ.17

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை வீதியொன்று தமிழ் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு ஆனைக்கோட்டையில் அமைக்கப்பட்டிருந்த சிமெந்துக் கட்டு விஷமிகளால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு வைத்தியசாலை திறப்பு விழாவன்று ஆனைக்கோட்டையிலுள்ள பிரபல வர்த்தகரொருவர் தமது தந்தையாரின் ஞாபகார்த்தமாக இதனை அமைந்திருந்தார். வைத்தியசாலை திறப்பு விழாவின் போது இது பிரதேச சபையால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. சில நாள்களுக்கு முன்னர் விஷமிகள் இதனை உடைத் துள்ளனர்.

இதனால் இந்த வைத்தியசாலைக்குப் புதிதாக சிகிச்சை பெறுவதற்கு வருபவர்கள் பெரும் சிரமம் அடைகின்றனர். (ம-100)

# வீதி அகலிப்புப் பணிகளுக்கு நான்கு புதிய வாகனங்கள்

யாழ்ப்பாணம், நவ.18

யாழ்.குடாநாட்டு பிரதான வீதி அகலிப்புப் பணிகளுக்கென நான்கு வாகனங்கள் அண்மையில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, கே.கே.எஸ். வீதி, புத்தூர்-மீசாலை வீதி போன்றவற்றின் அகலிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த வீதிப் புனரமைப்புப் பணிகளைத் துரிதப் படுத்தவே இவை வழங்கப்பட்டுள்ளன.

இந்த நான்கு வாகனங்களும் அண்மையில் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன.

தற்போது இந்த நான்கு வீதிகளின் அகலிப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, பருத்தித்துறை வீதியின் அகலிப்புப் பணிகள் மின்சார வெளிச்சத்தில் இரவு நேரங்களிலும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம- 26)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தாதியர் கடமையேற்பு

தென்மராம்ராட்சி,நவ.18

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 12 தாதிய உத்தியோகத்தர்கள் கடந்த 15ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற தாதிய உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கடிதங்கள் பெற்றவர்கள் மறுநாள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இதேவேளை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு 10 குடும்பநல சேவையாளர்களும் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

பயிற்சி முடித்து வெளியேறியவர்களில் 8 பேர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கும், இருவர் வரணி, கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைகளுக்கும் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)



வலிகாமம் கல்வி வலயத்தால் ஆரம்பப் பிரிவு பரிசளிப்பு விழா அண்மையில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் மாணவியொருவருக்குச் சான்றிதழ் வழங்குகிறார். (ம-38)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இரசாயனப் பொருள் பற்றாக்குறை

தென்மராட்சி, நவ.18

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் போதிய இரசாயனப் பொருள்கள் இல்லாததால் சில பரிசோதனைகளை நோயாளர்கள் தனியார் ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனின் நடவடிக்கையால் இந்த வைத்தியசாலையில் வாரத்தில் திங்கள் தொடக்கம் வெள்ளி வரையான நாள்களில் ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றனர்.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு மற்றும் விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்கள் ஆகியோருக்குப் பல்வேறு பரிசோதனைகள் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

இருந்தபோதும் சில பரிசோதனைகளுக்குரிய இரசாயனப் பொருள்கள் ஆய்வு கூடத்தில் இல்லாததால் பரிசோதனைகளைத் தனியார் ஆய்வுகூடத்தில் மேற் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதாக நோயாளர்கள் தெரிவித்தனர். (ம-207)

# குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், நவ.18

21 வயதுக்கு குறைந்தோருக்குப் புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்த வரணிப் பிரதேச வர்த்தகர்கள் 7 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 28 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரித்திணைக்களத்தால் தாக்கல் செய்யப் பட்ட வழக்குகளைத் தனித் தனியாக விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா 7 வர்த்தகர் களுக்கும் தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 2 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ம- 207)

* * *

சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கையடக்கத் தொலைபேசியை அலறவிட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு இடைஞ்சல் விளைவித்தவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வரணி கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த நபரை நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்து நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தார். வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா இந்த நபருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ம- 207)

* * *

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியினுள் நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டில் குருநகரைச் சேர்ந்த நான்கு பெண்கள் உட்பட ஐவர் நீதிவானின் உத்தரவுப்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குருநகரில் இரு தரப்பினருக்கிடையே இடம்பெற்ற கைகலப்பைத் தொடர்ந்து ஒருவரை யாழ். பொலிஸார் கைது செய்து நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் செய்தனர். விசாரணையின் பின்னர் சந்தேக நபரை இரு ஆள்பிணை யில் செல்ல நீதிவான் அனு மதித்தார்.

இந்த நிலையிலேயே நீதிமன்றினுள் நின்றவாறு இரு தரப்பினரதும் உறவினர்கள் நீதிமன்றை அவமதிக்கும் வகையில் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து இந்த ஐவரையும் நீதிவான் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-4)

* * *

665 மில்லிகிராம் கஞ்சாவைத் தன்வசம் வைத்திருந்த குற்றத்துக்காக யாழ். சின்னக்கடையைச் சேர்ந்த ஒருவருக்கு யாழ். மாவட்ட நீதிமன்றம் 15 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்தது.

சின்னக்கடை முதலாம் ஒழுங்கையில் வைத்து இந்த நபரைக் கைது செய்த யாழ். பொலிஸார் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் செய்தனர். விசாரணையின் போது சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிவான் இந்த அபராதத் தொகையை விதித்தார். (த- 4)

* * *

அனுமதிப் பத்திரமின்றி அளவுக்கதிகமாகச் சாராயம் கொண்டு சென்ற குற்றத்துக்காக நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

ஊர்காவற்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர் நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது இவ்வாறு அபராதம் விதித்தார். (த-4)

# தாழ்வான காணிகளில் தேங்கும் மழைநீர் சூழலுக்கு சாதகமான நிலையைத் தரும்

### அசௌகரியம் இருந்தாலும் நன்மையே என்கிறார் யாழ். மாநகர முதல்வர்

யாழ்ப்பாணம், நவ.18

தற்போது யாழ்ப்பாணத்தில் பெய்து வரும் பருவ மழை யாழ். தாழ்வான காணிகளில் நீர் தேங்கி நிற்பதில் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் இதில் உள்ள சாதகத் தன்மையையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்று யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

மழை நீர் தேங்கி நிற்பதால் பல அசௌகரியங்கள் ஏற்படுவதாகப் பொதுமக்கள் தெரிவித்த முறைப்பாடுகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே இதனைக் கூறினார்.

இது தொடர்பாக மேலும் கூறுகையில்:

நிலைத்து நிற்கும் அபிவிருத்தி எண்ணக்கரு சம்பந்தமான கருத்துக்கள் வலுப்பெற்றுள்ள தற்போதைய காலகட்டத்தில் அபிவிருத்தி மற்றும் சூழல் ஆகிய அணுகுமுறையைப் பின்பற்றுதல் அவசியமானது.

மழை நீர் தரைமேற்பரப்பினூடாக ஓடி இறுதியில் நீர் நிலைகளைச் சேர்கின்றது. இவ்வாறு நீர்நிலைகளை அடையும் போது தரை மேற்பரப்பு அரிப்புக்குள்ளாவதால் நீர் நிலைகளில் மண் தேக்கப்படுகின்றது. இதனால் நிலவளம் பாதிப்படைகிறது. வெள்ளப் பெருக்கு ஏற்படவும் காரணமாகின்றது.

இத்தகைய சூழல் பாதிப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் முகமாக தாழ்வான காணிகளில் தேங்கி நிற்கும் நீரை வடிகால்களில் வெட்டிவிடுவதைத் தவிர்த்து அந்த நிலங்களிலேயே அதனைத் தேக்கி வைப்பதன் மூலம் தரைக்கீழ் நீர் வளத்தைப் பாதுகாக்க முடியும். அத்துடன் கோடை காலங்களில் நிலவும் வரட்சியைக் கட்டுப்படுத்துவதுடன் சூழல் பாதிப்புக்களையும் கட்டுப்படுத்த முடியும் -என்றார். (ம-7)

# டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த எரிபொருள் வழங்கத் தீர்மானம்

### வலி. தென்மேற்குப் பிரதேச சபை நடவடிக்கை

சண்டிலிப்பாய், நவ.18

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான புகையூட்டல் நடவடிக்கையை விரிவுபடுத்த முன்வந்துள்ள வலி. தென்மேற்குப் பிரதேசசபை அதற்கான எரிபொருளை சுகாதாரப் பகுதியினருக்கு இலவசமாக வழங்குவதென்று தீர்மானித்துள்ளது.

வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது. புகையூட்டல் சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

மழைகாலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் டெங்கு நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளார்கள்.

டெங்கு நோய் ஏற்படுத்தும் நுளம்புகளின் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கான புகையூட்டல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பகுதியினருக்கு புகையூட்டல் நடவடிக்கையை மேலும் விஸ்தரிப்பதற்காக அதற்குத் தேவையான எரிபொருளை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - என்றுள்ளது. (ம-115)

# கழுதைப்பிட்டி துறைமுக வீதி சேதத்தால் இப்பகுதிக்கான பஸ் சேவைகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ.18

புங்குடுதீவு பெருங்காடு இறுப்பிட்டி வீதியில் பிட்டிவேல் சந்திவரையான வீதி நீண்ட காலத்தின் பின் இப்போது புனரமைக்கப்பட்டுள்ளது. எனினும் கழுதைப் பிட்டி துறைமுகம் வரையான ஒரு கிலோ மீற்றர் தூரம் திருத்தம் செய்யப்படாது விடப்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கடந்த 2002 ஆம் ஆண்டு வரை இந்த வழித்தடத்தில் சேவையாற்றிய இ.போ.ச. பஸ்கள் தமது சேவையை நிறுத்திக் கொண்டன.

தற்சமயம் இந்தப் பகுதிகளில் கணிசமான மக்கள் மீள் குடியமர்ந்துள்ளனர். இந்த மக்கள் தமது அன்றாட தேவைளுக்காக யாழ். நகர் செல்வதற்குக் குறிப்பாக நோயாளர்கள் அங்கு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இது குறித்து புங்குடுதீவு அபிவிருத்திச் சங்கம் இ.போ.ச. அதிகாரிகளிடம் பஸ் சேவையை ஏற்படுத்தக் கோரிக்கை விடுத்திருந்த போதும் இன்னமும் இந்த வழித்தடத்தில் சேவை ஆரம்பிக்கப்படவில்லை என்றும் சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனம் எடுப்பார்களா எனவும் மக்கள் கேட்டுள்ளனர். (ம- 7)

# டெங்கு ஒழிப்புத் திட்டத்தில் திண்மக்கழிவு கொள்வனவு

### நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.18

நல்லூர் பிரதேச சபை தனது பிரிவுக்கு உட்பட்ட பொது மக்களது வீடுகளிலும் காணி களிலும் உள்ள பிளாஸ்டிக் போத்தல்கள், ஓடுகள், பீங்கான் பொருள்களை கொள்வனவு செய்யவுள்ளது.

பிளாஸ்டிக் ஒரு கிலோ 10 ரூபாவுக்கும் கண்ணாடிப் போத்தல்கள் , பீங்கான் ஓடுகள் ஒரு கிலோ இரண்டு ரூபா 50 சதம் வீதமும் கொள்வனவு செய்யவுள்ளது. அத்துடன் இரும்பு, தகரம் போன்றவை ஒரு கிலோ 20 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் என்று பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

அலுவலக நாள்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் கொக்குவில் பிறவுண் வீதியில் உள்ள உப அலுவலகத்தில் இப்பொருள்கள் கொள்வனவு செய்யப்படும். டெங்கு நோய் கட்டுப்பாடு மற்றும் திண்மக் கழிவு திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# குடிதண்ணீர் தாங்கி மானிப்பாயில் அமைப்பு

நவாலி, நவ.18

மானிப்பாய் பொதுச் சந்தையில் குடிதண்ணீர் சேவையைப் பூர்த்தி செய்யுமுகமாக வலி. தென்மேற்குப் பிரதேச சபையால் குடிதண்ணீர் தாங்கியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சந்தை வியாபாரிகளும் மற்றும் பொதுமக்களும் பெரிதும் நன்மையடைந்துள்ளனர். (ம- 100)

# கொழும்பில் தபால் ஊழியர் பகிஷ்கரிப்பு யாழ். குடாநாட்டு சேவையிலும் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.18

கொழும்பில் தபால் ஊழியர்கள் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும் மற்றும் வெளிநாடுகளுக் குமான தபால் சேவை பாதிக் கப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும் தபால் பொதிகளும் கொழும்பில் தேங்கியிருப்பதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் தபால் ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதனால் இந்த நிலை தொடர்வதாக அவர் மேலும் கூறி னார்.

யாழ்ப்பாணத்தில் சேகரிக்கப்படும் தபால்கள் உடனுக்குடன் இங்கிருந்து வாகனம் மூலம் ஓமந்தை வரை கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் ரயில் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன.

ஓமந்தைக்குத் தினமும் காலையில் வந்து சேரும் தபால் ரயிலில் வடக்குக் கான தபால்களை எடுத்து வருவது வழமை.

இந்த நிலையில் கடந்த இரண்டு நாள்களாக அங்கிருந்து தபால்கள் எவையும் வந்து சேராமையால் இதில் ஒரு சோர்வு நிலைமை தோன்றியுள்ளதாகக் கூறப்பட்டது. (ம- 26)

# கோட்டை புனரமைப்பு பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

### நிதி வந்து சேராமையே காரணம்

யாழ்ப்பாணம், நவ.18

யாழ். கோட்டையின் புனர்நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் புனரமைப்பு பணிக்கான நிதி ஒதுக்கீடு வந்து சேராதது காரணமாகப் பணிகள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தொல்லியல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் புராதன கோட்டையின் புனர்நிர்மாணப் பணிகளுக்கான நிதியை நெதர்லாந்து அரசு ஒதுக்கீடு செய்தது.

இந்தப் பணிகளைக் கொழும்பில் உள்ள நெதர்லாந்து தூதுவர் இரு தடவைகள் யாழ்ப்பாணம் வருகை தந்து பார்வையிட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இதன் புனர் நிர்மாணப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு நிதி வந்து சேரவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதேவேளை, கோட்டையில் உள்ளே உள்ள சுற்றாடலில் தொடர்ந்தும் துப்புரவுப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம- 26)

# சுண்டுக்குழி தபாலகம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ.18

யாழ்.சுண்டுக்குழி தபாலகம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

தபாலகத்தில் மழை ஒழுக்கு அதிகம் ஏற்படுவதால் அதை தவிர்க்கும் பொருட்டு கூரை திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

தபாலக நிதி ஒதுக்கீட்டில் இருந்து இந்த புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

இந்த தபாலக கட்டடத்தை முழுமையாகப் புனர்நிர்மாணம் செய்வதற்கு அடுத்தாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தக் கட்டடத்தின் கூரையில் சேதம் ஏற்பட்டதால் மழை காலத்தில் ஒழுக்கு ஏற்பட்டு அங்கு பணியாற்றும் பணியாளர்கள் பெரும் சிரமப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம- 26)

# வீதி திருத்தப் பணிகளில் புதிய உத்திகள்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்ப்பாணத்தில் வீதிகள் திருத்தப் பணிகளில் நாளுக்கு நாள் புதிய உத்திகள் கையாளப்படுவதைக் காணமுடிகின்றது.

முன்னர் வீதி புனரமைப்புக்களின் போது வீதிகளில் காணப் படும் குழிகளுக்கு தார்க் கலவையிட்டு உருளைகள் கொண்டு அழுத்தப்பட்டு வந்தது.

பின்னர் உருளை பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டு வெறும் தார்க்கலவைகளை சேதமுற்ற பகுதிகளில் போட்டு வந்தனர்.

தற்போது தார்க்கலவைகளற்ற வெறும் சிறிய கற்களைக் கொண்டு கிடங்குகளிலும் வீதி ஓரமாகவும் சேதமடைந்த பகுதிகளில் பரவி வருகின்றனர்.

ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் பருத்தித்துறை வீதியில் இவ்வாறு வெறும் கற்கள் போடப்பட்டுள்ளதைக் காணலாம்.

வாகனப் போக்குவரத்து காரணமாக இக்கற்கள் சிதறுண்டு துவிச்சக்கரவண்டி ரயர் ரியூப்களைப் பதம் பார்த்து வருவதையும் காணலாம்.

இவ்வாறான செயற்பாடுகளால் அப்பகுதிகளால் பயணிப்போர் குறுணிக் கற்களில் சறுக்கி விழவேண்டிய நிலைமையும் காணப்படுகிறது. வீதித்திருத்தம் என்று கூறி செய்வது இது தானா என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ம-7)

# புங்குடுதீவு நீர்வள ஆய்வறிக்கை ஜனவரியில் பூர்த்தியடையும்

யாழ்ப்பாணம், நவ.18

புங்குடுதீவு நீர்வளம் தொடர்பான ஆரம்ப கட்ட ஆய்வறிக்கை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் பூர்த்திடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அங்குள்ள மக்கள் நன்னீர் வளப் பற்றாக்குறை காரணமாக நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் இந்த அறிக்கை வெளியாகும் நாளை எதிர் பார்த்துக் காத்திருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் நன்னீர் வள வாய்ப்புக்கள் உண்டா என்பதை இந்த அறிக்கை வெளிக் கொண்டு வரும் என்று ஆய்வுக் குழுவின் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு மக்கள் குடிதண்ணீர் கிடைக்காமல் அலைவதும் குடிதண்ணீர் விநியோக பௌசர்களுக்காக நீண்ட பொழுது காத்திருப்பதும் காலாகாலமாக இடம்பெற்று வருகிறது.

இவர்களுக்கான குடிதண்ணீர் சாட்டியில் இருந்து பௌசர்கள் மூலம் கொண்டுவரப்படுகின்றமை இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். (ம-7)

# நீங்கா நினைவஞ்சலி

மண்ணில்
08 . 07 . 1987

விண்ணில்
18 . 11 . 2008



## கனியூட் கட்சன்

கட்சா!
போர் எனும் கொடிய காலன் நம்மை
பாதியிலேயே பிரித்து விட்டானோ!
உனைப்பிரிந்து மூன்றாண்டுகள்
ஆனாலும் இன்றுமுனைப்பற்றிப்
பேசும் போது கண்கள் கலங்குதடா....
அனைத்துறவுகள் உள்ளத்திலும்
நீங்காவிடம் பிடித்த எம் செல்வமே!
உன் சாந்தமான முகமும்,
களங்கமில்லா புன்சிரிப்பும் - நாம்
அகிலத்திலுள்ளவரை அழியாதடா.....

என்றுமுன் நினைவுகளுடன்:
அப்பா - கனியூட்
அம்மா - பற்றிமா (கமநல அபிவிருத்தி உத்தியோகஸ்தர், உடையார்கட்டு)
அத்தான், சகோதரிகள், குட்டி மருமகள்.

நி.மு.
10 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

த.மு.
கடற்கரைவீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

[10557][2,6,7]

# அமைச்சரவை தீர்மானங்கள்

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

01. 'சார்க் விதை வங்கி' ஒன்றை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை, விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபயவர்தனவுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

சார்க் நாடுகளிடையே ஏற்படும் விதைகளுக்கான தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே இந்த விதை வங்கி ஆரம்பிக்கப்படவுள்ளது.

02. எஞ்சியுள்ள வன்னி அகதிகளை மீளக்குடியேற்றி முடிப்பதற்காக மீள் குடியேற்ற அமைச்சுக்கு 133 கோடியே 60 லட்சம் ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அதன்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 687 குடும்பங்களும், திருகோணமலை மூதூரில் ஆயிரத்து 272 குடும்பங்களும், மன்னார் மாவட்டத்தில் 166 குடும்பங்களும் மீள்குடியமர்த்தப்படுவர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடுகள் வழங்கப்படும்.

இந்த வருடம் ஒக்டோபர் மாதம் வரை 97 சதவீதமான அகதிகள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நேற்றுக் கூறினார்.

03. கிழக்கு மாகாணத்தில் மின்சாரத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்காக சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியிடம் 33 மில்லியன் டொலர் நிதியைக் கடனாகப் பெறுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள 268 கிராமங்களுக்கு மீன் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## OBTAINING LEGAL CONSULTATION SERVICES

Application are invited by me up to 09.12.2011 from qualified Attorney-at-Laws with not less than three years experience in Court work, Legal work relating to corporations/companies and drafting legal documents.

The following tasks are expected to be carried out under this.

1. *Drafting legal documents*
2. *Execution of Bond & Agreement*
3. *Legal advice regarding cases filed against the University*

Those who are willing to apply can send their Bio-Data with two recent testimonials from non related referees for registering with University, Rates of payments and other modalities are negotiable. Further details on terms of references etc., will be notified later.

**Registrar,**
**University of Jaffna.**
2011.11.16

# மரண அறிவித்தல்

## செல்வி புவனி சண்முகராஜன்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்வி புவனி சண்முகராஜன் 16.11.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.பொன்னுஸ்வாமி சண்முகராஜன் - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகளும் Dr. பாலகுமார், ரஜனி (UK), நிமலகுமார்(UK), தர்ஷினி ஆகியோரின் தங்கையும், அகிலாம்பிகா, நரேந்திரன் (UK), தர்ஷினி (UK), பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனியும், பவித்ரா(UK), வாஹினி(UK), பிரஷாந்தன், சங்கீதா ஆகியோரின் அன்புச் சித்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் நாளை (19.11.2011) சனிக்கிழமை கல்கிஸ்ஸ மஹிந்த மலர்ச்சாலையில் மு.ப. 10 மணி முதல் மாலை 7 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 20.11.2011 ஞாயிற்றுக்கிழமை காலை இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு கல்கிஸ்ஸ பொது மயானத்தில் தகனக் கிரியை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி. கமலாதேவி சண்முகராஜன் (தாய்)
Dr.சண்முகராஜன் பாலகுமார் (அண்ணன்)

(C/5535)(6-7-8)

# உவகையோடு உளமார வாழ்த்துகின்றோம்



எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்தவரும் எழுதுமட்டுவாழ் தெற்கு மீளக்குடியர்ந்தோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைவரும் பெரிய கேணிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைப் பொருளாளரும் ஓய்வுபெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபருமாகிய

**உயர்திரு இராமலிங்கம் கையிலைநாதன்**

(BA,Dip.in Edu.,SL.P.S- I) அவர்கள் 16.11.2011 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு மா.கணேசராசா அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து தமது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரை உளமாரப் பாராட்டி அவரதுபணி சிறப்புற உவகையோடு வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
எழுதுமட்டுவாழ் தெற்கு, மக்கள்.

(சி/6031)(3.6.7)

# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.10.2010 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 01 | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையும், மானிப்பாய் சேவை நிலையமும், நாவலர் வீதி சேவை நிலையமும் | 18.12.2011 மு.ப.8.30 | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 02 | காங்கேசன்துறைக் கிளையும், மல்லாகம் சேவை நிலையமும் | | |
| 03 | யாழ்.பிரதான வீதிக்கிளையும், உரும்பிராய் சேவை நிலையமும். | | |
| 04 | நெல்லியடி | | |
| 05 | அச்சுவேலி | | |
| 06 | சங்கானைக்கிளையும், பண்டத்தரிப்பு சேவை நிலையமும் | | |
| 07 | சுன்னாகக்கிளையும், கோப்பாய் சேவை நிலையமும் | | |
| 08 | சாவகச்சேரிக்கிளையும், கொடிகாமம் சேவை நிலையமும் | | |
| 09 | வல்வெட்டித்துறை | | |
| 10 | யாழ்.பல்கலைக்கழகக்கிளையும், திருநெல்வேலி சேவை நிலையமும், கல்வியங்காடு சேவை நிலையமும் | | |
| 11 | யாழ்.கன்னாதிட்டிக்கிளையும், இணுவில் சேவை நிலையமும். | | |
| 12 | பருத்தித்துறைக் கிளையும், புலோலி சேவை நிலையமும். | | |


அறிவித்தலின்றித் திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம்விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
2011.11.16

(சி/6035) (2-6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
10 ❖ 04 ❖ 1935



மறைவு
19 ❖ 10 ❖ 2011

## அமரர் இராமலிங்கம் சபாரட்ணம்

(சபா அண்ணை)

கடந்த 19.10.2011 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (18.11.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(10561)(6-5)

## வியளம் கேட்டீர்களா?

### ஊரான் பேச்சைக் கேக்கிறவன் பெண்டில் பிள்ளை பேச்சைக்...!

நோர்வேக்காரன்ரை பெரிய அறிக்கை வந்திட்டுது. அதிலை எவ்வளவுக்கு நல்ல பிள்ளையாய் தான் இருந்தன், இந்தப் புலியளும் அரசாங்கமும் சமாதானத்தை ஏற்படுத்தி றதிலை எவ்வளத்துக்கு அக்கறை காட்டேல்லை, இரண்டு தரப்பும் பிடிச்சிறாவியாய் நிண்டதாலைதான் சமாதானம் குழம்பிச்சுது, இதுக்குப் பின்னாலை இந்தியாக்காரன் நிண்டு இரகசியமாய்ப் புலியளைச் சந்திச்சிட்டு, மற்றப் பக்கமாய் அரசாங்கத்துக்கு வைன் குடுத்துச் சண்டையை ஏவினது, இப்பிடிக் கன கதையளை அந்த அறிக்கை அவிட்டு விட்டிட்டுது.

இந்த அறிக்கை ஆகக் குறைஞ்சது 2009 மேயிலையாதல் வெளிவந்திருக்க வேணும். மன்னார்க் கடலிலை தன்ரை பங்கு கிடைக்காதெண்டு தெரிஞ்ச பிறகுதான் இந்த அறிக்கை வருகுதோ தெரியேல்லை. இந்த அறிக்கையள் எங்களுக்கு ஏதாச்சும் விமோசனத்தை அளிக்குமெண்டால் நல்லது. இவை பலஸ்தீனத்திலை போய் வைறிவர் எக்கிறிமென்ட்டெல்லாம் செய்தும் அங்கையும் ஒரு பிரியோசனமும் ஏற்படேல்லைக் கண்டியளோ. இஞ்சையும் அது தான் நடந்தது பாருங்கோ!

உள்ளத்தில் உண்மையொளி உண்டானால் வாக்கினிலே ஒளியுண்டாகும் எண்டு பாரதியார் பாடின பாட்டுத்தான் இப்ப ஞாபகத்துக்கு வருகுது. புலியளும் தாய்லாந்து, ஜப்பான், நோர்வே எண்டு எல்லா இடமும் பேசிப் போட்டு வந்தும் சுமுகமாய்ப் பேச்சுக்கள் நடந்ததாய்த்தான் சொல்லிச்சினை. பேசின விசயங்கள் பெரிசாய் வெளிவிடேல்லை. அதாலை இண்டைக்கு புலியளை நோக்கிச் சுட்டுவிரல் நீட்டிறவைக்குப் பதில் சொல்ல முடியேல்லை. ஒரு உருத்திர குமாரன்தான் சர்வதேசத்தைக் குற்றஞ்சாட்டி ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்தக் காலத்து றிச்சட் ஆமிரேச்சும் புலியள் தொடர்பான சர்வதேச அணுகுமுறை பிழையெண்டு சுடலை ஞானம் பேசியிருக்கிறார். இனி உதுகளைப் பேசிப் பிரி



யோசனம் என்ன? எங்கடை இந்த நிலைக்கு உலகமெல்லாம் காரணம் எண்டது எங்கடை சனத்துக்குத் தெரியும்.

இப்ப எங்கடை ஏகப் பிரதிநிதியள் எண்டு வெளிக்கிட்டிருக்கிற கூட்டமைப்பினர் அமெரிக்கா கூப்பிட்டு போட்டு வந்திருக்கினை. என்ன கதைச்சதெண்டால் நாங்கள் எங்கடை சனத்தின்ரை பிரச்சினையைச் சொல்லியிருக்கிறம். அவை கேட்டிருக்கினை எண்டுதான் சொல்லியிருக்கினை. எங்கடை பிரச்சினையள் எல்லாத்தையும் ஒண்டும் விடாமல் இங்கையிருக்கிற அமெரிக்கன் எம்பசி அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்துக்கு அறிக்கை அனுப்பிக் கொண் டிருக்குது. அதை வழி மறிச்சு மோப்பம் விட்டு விக்கிலீக்ஸ் வெளிவிடுகுது. போதாதத்துக்கு யாழ்ப்பாணத்திலையும் ஒரு அமெரிக்கன் கோணர் திறக்கப்பட்டிருக்குது. இஞ்சத்தை விசியங்கள் ஒண்டும் அவையின்ரை பார்வையிலை தப்பாது பாருங்கோ!

இடைக்கிடை சம்மந்தர் ஐயாவைக் கூப்பிட்டும் கதைக்கினை. வாற போற நேரத்திலையும் வெளிநாட்டாக்கள் இவையைச் சந்திச்சுத்தான் போகினை. எங்கடை பிரச்சினையளை அமெரிக்காவுக்குப் போய்த்தான் காதுக்கை சொல்ல வேணுமெண்டில்லை. சரி, அமெரிக்கா அழைச்சிட்டுது. பெரிய மனிசன் உங்களை விருந்துக்கு அழைச்சிருக்கிறான். போய் விருந்துண்டு கதைச்சிட்டு வந்திருக்கிறியள். அங்கை கதைச்ச விசியங்களைப் பூசி மெழுகாமல் சனத்துக்குச் சொல்ல வேணும் கண்டியளோ! ஏனெண்டால் நாங்கள்தான் உங்களை எங்கடை சார்பாய்ப் பேசக்கூடியவை எண்டு கருதிப் பாளிமென்டுக்கு அனுப்பி வைச்சிருக்கிறம். அந்தப் பாத்திரத்தைப் பழுதாக்கிப் போடாதையுங்கோ.

வெளியிலை பெலத்துச் சொன்னால் சிங்களக் கடும்போக்காளர்கள் உங்களுக்கு சிறைத்தண்டனை வழங்கச் சொல்லிக் கூக்குரலிடுவினை எண்டு பயந்தால் ஊடகங்களுக்குச் சொல்லாமல் விடுங்கோ. ஆனால் உங்களை உச்சாணிக் கொப்பிலை ஏத்தி வைச்ச சனங்களை, உங்கடை கூட்டுக்கட்சி ஆதரவாளர்களைச் சந்திச்சாவது பேச்சின்ரை சாதக பாதகங்களைச் சொல்லவேணும். புலியள் தரப்பு நியாயங்கள் மூடுமந்திரமாய் இருந்ததாலை வெளிச் சனத்துக்கு கடைசி வரை ஒண்டும் விளங்கேல்லை. அது போலை நாளைக்கு என்ன நடந்தாலும் சனத்துக்கு ஒண்டுந் தெரியாமல் போயிடும். அரசாங்கத்துக்கும் நல்ல வாய்ப்பாப் போகும். ஊரான் பேச்சைக் கேக்கிறவன் தன் பெண்டில் பிள்ளையின்ரை பேச்சைக் கேக்க மாட்டானாம். நீங்களும் அப்பிடியிருக்க மாட்டியள் எண்டு நம்புறம்.

விழிச்சான் குஞ்சு.

# அரசின் ஊழல் மோசடி குறித்து ஜெனீவாவில் முறையிட முடிவு

**கெமுனு விஜேரட்ன கூறுகிறார்**

கொழும்பு,நவ.18

ஊழல் மோசடிகளுக்கு எதிராக ஜெனீவா மனித உரிமை ஆணைக் குழுவில் அரசுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்படும் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித் துள்ளார்.

தனியார் போக்குவரத்துத் துறை மற்றும் ஏனைய துறைகளில் நிலவி வரும் ஊழல் மோசடி நிலைமைகள் குறித்து ஜெனீவா மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்படும்.

அனுமதிப்பத்திரம் வழங்குதல் உள்ளிட்ட சகல விடயங்களிலும் இடம்பெறும் ஊழல் மோசடிகள் குறித்து பட்டியல் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் வாரத்தில் சட்டத்தரணிகள் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, குற்ற விசாரணைத் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களிடம் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த நிலமைகள் குறித்து ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த முறைப்பாடுகள் தொடர்பில், எந்தவித விசாரணைகளும் நடத்தப்படவில்லை என்றும் இது வரையில் நியாயம் கிடைக்கவில்லை என குறிப்பிட்ட அவர் பிரச்சினைகளுக்கு சர்வதேச ரீதியில் நியாயம் கோர தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## தேசியவாதம் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும் ஐக்கிய தேசியக்கட்சி எச்சரிக்கை

தேசியவாதம் தோற்றுப்போனதன் காரணமாகவே முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோவின் ஆட்சி கவிழ்ந்தது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரம் தொடர்பான பேச்சாளர் ஹர்சா டி சில்வா தெரிவித்துள்ளார்.

உண்மையான தேசியவாதம் 1970ஆம் ஆண்டில் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த தேசியவாதம் எதிர்ப்பார்த்த எந்த ஒரு பொருளாதார அபிவிருத்தியையும் கொண்டு வரவில்லை என்று ஹர்ஸா சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அரசு 25 வீத பணவீக்கத்தையே ஏற்படுத்தியது என்றும் அதேநிலையைதான் இன்றைய அரசும் ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஒருபுறத்தில் சங்கரிலா ஹோட்டல் போன்ற முதலீட்டாளர்களை வரவழைக்கும் அரசு மறுபுறத்தில் தேசியவாதத்தைக் கடைப்பிடிக்கிறது. இதன் அடிப்படையிலேயே நட்டமடையும் தனியார் நிறுவனங்களை சட்டம் ஒன்றை இயற்றி அரசு பொறுப்பேற்றுள்ளது.

சிங்கப்பூரைப்போன்று அரச உரிமைகளைக் கொண்டு பணியாற்றப்போவதாக அரசு கூறுகிறது. எனினும் சிங்கப்பூரில் உள்ள அரச உரிமங்கள் யாவும் சிறந்த நிபுணர்களினாலேயே நடத்தப்படுகின்றன என்பதை அரசு நினைவில் கொள்ளவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வீதி விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி

இலங்கையில் இடம்பெற்ற வீதி விபத்துக்களால் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒரு நிமிடம் அமைதியாக இருந்து அஞ்சலி செலுத்த வேண்டும் என்று சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு 3000 - 3500 வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் ஒரு நாளைக்கு தலா 6 பேர் வீதம் உயிரிழப்பதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## சிறுவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை நிறுத்தம்

கொழும்பு,நவ.18

திருட்டுச்சம்பவத்துடன்தொடர்புடைய குற்றச்சாட்டில் சிறுவர்கள் சிலரை பொலிஸார் கைதுசெய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டசம்பவமொன்று ரன்முத்துகல சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலையீட்டை அடுத்தே மேற்படி கைது நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் சிறுவர்க்ள் சிலரை பொலிஸார் கைது செய்வதற்கு தயாரானதை அறிந்த அதிகாரசபையின் தலைவர் அனோமா திசாநாயக்க சம்பவ இடத்துக்கு விரைந்து அந்தக் கைது நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தியுள்ளதாக அதிகாரசபை தெரிவித்துள்ளது.



இலங்கைக்கான ஈரானின் புதிய தூதர் கலாநிதி நபி முகம்மட் ஹசன் பூரை வரவேற்கும் நிகழ்வு கொழும்பிலுள்ள ஈரான் கலாசார நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது, சர்வமதத் தலைவர்களுக்கு ஈரானின் புதிய தூதுவரை கலாசார பிரிவு பொறுப்பாளர் மெஹ்தி ஜீ.ருக்னி அறிமுகப்படுத்தப்படுகிறார்.

## ஈரானின் ரூ.200 கோடி உதவியில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்

200 கோடி ரூபா பெறுமதியான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இலங்கையில் அமைக்கும் திட்டத்துக்கு ஈரான் உதவி வழங்கும் - என்று இலங்கைக்கான ஈரான் தூதராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி நபி முகம்மட் ஹசன் பூரை தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஈரான் கலாசார நிலையத்தில் இலங்கைக்கான புதிய ஈரான் தூதரை அறிமுக வரவேற்பு நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுற்றுலா, விவசாயம், பொது உறவு, கலாசாரம் போன்ற பல துறைகளில் இலங்கை உடனான தொடர்பை ஈரானிய அரசு அதிகரிக்கும். அத்துடன் இலங்கையில் நிலையான அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான சந்தப்பத்தை சரியான முறையில் பயன்படுத்துவோம்.

இதேவேளை, இஸ்லாம் மற்றும் ஏனைய மதங்களுக்கிடையிலான சிறந்த புரிந்துணர்வை கட்டியெழுப்பவும் ஈரான் உதவும்.

இதற்கு மேலதிகமாக இலங்கையிலுள்ள அனைத்து சமூகத்தினருக்கும் ஈரானிய தேசிய மொழியான பாரசீகத்தை கற்பிக்க நட வடிக்கை எடுக்கப்படும்.

வீடமைப்புத் திட்டம், 1,000 கிராமங்களுக்கு தேவையான மின்சார வசதி போன்ற பல பாரிய உதவிகளை ஈரானிய அரசு இலங்கையில் முன்னர் மேற்கொண்டுள்ளது.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, ஈரான் ஆன்மீக தலைவரின் செயலக தெற்காசிய பிராந்திய பிரதிநிதியான ஆயதுல்லா செய்த் சஹ்ருகி உட்பட பலர் பங்கேற்றனர்.

# அலரி மாளிகையில் திருட்டு! இரு சந்தேகநபர்கள் கைது

ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் பிரத்தியேக செயலாளரின் அலுவலகத்தைச் சேர்ந்த இரு ஊழியர்கள் அலரி மாளிகையில் இருந்த அச்சியந்திரப் பாகங்கள் மற்றும் எழுதுபொருள்களைத் திருடியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த சந்தேகநபர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார். திருடுவதற்காக, கோரிக்கைப் படிவங்களில் அலுவலகத்துக்குத் தேவைப்படும் பொருள்களின் எண்ணிக்கையில் உயரதிகாரிகளுக்குத் தெரியாமல் மாற்றம் செய்தனர் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு திருடப்பட்ட பொருள்கள் கொழும்பு லோட்டஸ் வீதியிலுள்ள வர்த்தகர் ஒரு வருக்கு விற்கப்பட்டதாகவும் இது பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.



சங்கானை, ஓடக்கரை வீதி வில்லையாம்பிட்டி ஞான வைரவ சுவாமி ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தில் பிரதான கும்பம் உள்வீதி வலமாக எடுத்து வரப்படுகிறது. குருக்கள்மார் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துகின்றனர்.

# புதைக்கப்பட்ட சிசுவின் உடல் பாகங்கள் மீட்பு

புதைக்கப்பட்ட சிசுவொன்றின் தலை மற்றும் உடற்பாகங்களை அட்டன் மால்பு ரோ தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஹற்றன் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஹற்றன் மால்புரோ தோட்டத்தில் நாய் ஒன்று சிசுவொன்றின் தலையைக் கௌவிச் சென்று கொண்டிருந்த போது பொதுமக்கள் சிசுவின் தலையை நாயிடமிருந்து மீட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஹற்றன் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து குறிப்பிட்டத் தோட்டத்துக்குச் சென்ற பொலிஸார் தேடுதல் நடத்தியபோது பிறந்து மூன்று நாள் மதிக்கக் கூடிய சிசுவொன்றின் உடற் பாகங்களைக் கண்டெடுத்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட சிசுவின் உடற் பாகங்கள் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சிசுவின் சடலம் பிரேத பரி சோதனைக்காக நாவலப்பிட்டி வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பாக அட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# சட்டமாணிக் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.18

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தினால் சட்டமாணிப் பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த. உயர் தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்களும், திறந்த பல்கலைக் கழகத்தில் ஏதாவது ஒரு கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப்பெற்றுக் கொள்ளலாம்.

(வ-313)

# 2012 இல் ஹஜ் பயணம் செல்வோர் இவ்வாண்டே விண்ணப்பிக்கவேண்டும்

கொழும்பு, நவ.18

அடுத்த வருடம் ஹஜ் கடமையை நிறைவேற்ற விரும்புகிறவர்கள் அதற்கான அனுமதியைக் கோரி இந்த வருடமே பதிவு செய்ய வேண்டும்என்று அமைச்சரும் இலங்கை ஹஜ் குழுவின் தலைவருமான ஏ.எச்.எம்.பௌஸி நேற்றுமுன்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும்கூறியவை வருமாறு:-

வருடாந்தம் சவூதி அரேபியா சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு சவூதி அரசால் தரப்படுகின்ற கோட்டா இலங்கை முஸ்லிம்களுக்குப் போதாமல் உள்ளது.ஏற்கனவே பல தடவை கள் ஹஜ் செய்தவர்களும் மீண்டும் ஹஜ் செய்ய முயல்வதால் ஹஜ் யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. ஆனால் சவூதி அரசு தரும் கோட்டா இவர்கள் அனைவரையும் உள்ளடக்க முடியாமல் உள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஹஜ் செய்ய இலங்கையில் எத்தனை பேர் தயாராகின்றார்கள் என்பதை அறிந்து அதன் எண்ணிக்கையை சவூதி அரசிடம் காண்பித்து ஹஜ் கோட்டாவை அதிகரிக்க எம்மால் முயற்சி செய்யமுடியும்.

இதற்காக அடுத்த வருடம் ஹஜ் செய்ய விரும்பு கிறவர்கள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் இப்போதிருந்தே பதிவு செய்ய வேண்டும். இந்த வருடம் ஹஜ் செய்ய வாய்ப்பு கிடைக் காதவர்களும் பதிவு செய்ய லாம். அவர் கள் பதிவு செய்தபின்னணக்கும்ஒருபிரதியை அனுப்பி வைக்கவேண்டும்.

அநேகமாக முதன் முதலாக ஹஜ் செய்ய விரும்புவோருக்கே முதலிடம் வழங்கப் படும். இதன் மூலம் இறுதி நேரத்தில் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்க முடியும். இதேபோல், ஹஜ் கோட்டாக்களை வருடா வருடம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக் காது ஒரே தடவையில் ஆறாயிரம் அல்லது ஏழாயிரமாக வழங்குமாறு கோரி நான் சவூதி இளவரசிடம் கடிதம் ஒன்றையும் வழங்கி யுள்ளேன்-என்றார்.

(த-சி)

# நாவலர் குருபூசையை முன்னிட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ.18

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 132 ஆவது குருபூசைத் தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்காக விண்ணப்பித்தவர்களை அன்றைய தினம் தவறாது உரிய நேரத்துக்கு முன் சமுகமளிக்கும்படி சபைச் செயலாளர் த.மணிக்கவாசகர் கேட்டுக்கொள்கின்றார்.

போட்டியாளர்களுர்களுக்கான சுட்டெண் அன்றைய தினம் பாடசாலையில் வைத்தே வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (வ)

**Computer Express**
**Institute of Information Technology**

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language கற்கை நெறிகள்
University of Madras Bsc பட்டதாரிகளால் விரிவுரைகள் வழங்கப்படும்

Batch I 18.11.2011:- 9 am or 3Pm Batch II 19.11.2011:- 9 am or 3Pm
Batch III 20.11.2011:- 9 am or 3Pm Batch Iv 23.11.2011:- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் உயர்திரு இ.கைலைநாதன் (B.A., Dip in Edu., SLPS I) அவர்கள் 16.11.2011 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு மா.கணேசராசா அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து பொறுப்பேற்று கொண்டார். அவர்களை மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் மேண்மேலும் சிறப்புக்கள் பெற வாழ்த்துகின்றோம்.

க.இரகுநாதன் குடும்பம், சோ.யோகதாசன் குடும்பம், சி.கமலரூபன் குடும்பம், சி.மகாலிங்கம் குடும்பம், ம.கீர்த்திதாசன் குடும்பம். (சி-6030)(1,6,7)

**அரசாங்க அறிவித்தல்**
**யாழ்.மாவட்டச் செயலகம்**

**வாகனம் ஏல விற்பனை - வாகன இல:62-7309**
**TOYOTA Hiace VAN**

யாழ்.மாவட்டச் செயலகத்திலுள்ள 62-7309 இலக்க TOYOTA Hiace VAN வாகனம் விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தை அலுவலக நாள்களில், அலுவலக நேரத்தில் களஞ்சிய நலன்புரிக்கிளையுடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம் என்பதுடன், விற்பனை தொடர்பான கேள்வி விண்ணப்பப் படிவத்தினை மாவட்டச் செயலகக் களஞ்சிய நலன்புரிக்கிளையில் 21.11.2011 ஆம் திகதியிலிருந்து அலுவலக நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.3.30 மணி வரையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1,000.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 25,000.00 உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தைத் தலைவர், மாவட்டச் செயலக பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு, கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் வாகனம் ஏல விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் - 2011 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது பிரதம கணக்காளர் அவர்களின் அலுவலகத்தில் உள்ள அலுவலக கேள்விப் பெட்டியிலோ நேரடியாகவோ 05.12.2011 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்படல் வேண்டும். அன்றைய தினம் மு.ப.11.00 மணிக்குக் கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப் படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

நிபந்தனைகள்

01. மாவட்டச் செயலகக் கணக்குக் கிளையில் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம், மீளளிக்கப்படாத வைப்புப் பணம் என்பனவற்றைச் செலுத்திப் பற்றுச்சீட்டையைப் பெற்றுக்கொண்ட பின்னரே வாகனத்தைப் பார்வையிட முடியும்.
02. கேள்வி ஆவணங்கள் யாவும் 2011.12.05 ஆம் திகதி மு.ப.11 மணியளவில் அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.
03. தெரிவுசெய்யப்படும் கேள்வி தாரர் 05.12.2011 ஆம் திகதியன்றே சகல ஆவணங்களுடனும் வாகனத்தை மாவட்டச் செயலகத்திலிருந்து கொண்டு செல்லுதல் வேண்டும்.

இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி/6028) (2-6-7)

# ஊடகர் பிரகீத் எக்னெலிகொட கொலை தொடர்பான மொஹான் பீரிஸின் கருத்தால் பெரும் சர்ச்சை

கொழும்பு, நவ.18

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கடத்தப்பட்டுக் காணாமல் போன செய்தியாளரான பிரகீத் எக்னலிகொட ஒரு வெளிநாட்டில் தஞ்சமடைந்துள்ளார் என்று இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபரும், அரசின் சட்ட ஆலோசகருமான மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள தாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் பி.பி.சி. மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

'லங்கா ஈ நியூஸ்' செய்தி இணையத்தின் ஆசிரியரும், கேலிச்சித்திரக் கலைஞருமான எக்னலிகொட கடத்தப்பட்டு காணாமல்போனார் எனக் கூறுவதும், அவரது விடுதலைக்காக நடைபெற்றுவரும் பிரசாரங்களும் மோசடியான ஒரு செயல்பாடு எனவும் மொஹான் பீரீஸ் தெரிவித்துள்ளார் என செய்திகள் கூறுகின்றன.

அவர் கடத்தப்பட்டு காணாமல் போய் இரண்டு ஆண்டுகள் ஆகும் நிலையில், இப்படியான கருத்துக்கள் அவருக்கு என்ன ஆனது என்பது குறித்தும், அவரது குடும்பத்தினரின் மன உளைச்சல் குறித்தும் அரசின் பாராமுகமான நிலைப்பாட்டையே காட்டுகிறது என்று ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு அமைப்பான சி.பி.ஜே. தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இந்த மாதம் 8 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தின் கேள்வி பதில் அமர்வின் போது, சித்திரவதை மற்றும் இதர மனிதாபிமானற்ற தண்டனைகள் குறித்த ஐ நா வின் துணைக் குழுவினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மொஹான் பீரிஸ்,

பிரகீத் எக்னலிகொட் கடத்தப்பட்ட சம்பவம் குறித்த விசாரணைகள் பொலிஸாரால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன என்றும், இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஆசிய மனித உரிமை அமைப்புகளோ, இந்த கேள்வி பதில் அமர்வில் பேசியபோது மொஹான் பீரிஸ் தமக்கு கிடைத்த நம்பகத்தகுந்த தகவல்களின் அடிப்படையில், எக்னலிகொட ஒரு வெளிநாட்டில் தஞ்சம் பெற்றுள்ளார் எனவும், அவரது விடுதலைக்கான பிரசாரம் ஒரு மோசடியாகும் எனவும் தெரிவித்ததாகக் கூறுகிறது.

எனினும், எக்னலிகொட எங்கு தப்பிச் சென்றார் என்பது குறித்து எந்தவிதமான விரிவான தகவல்களையும் மொஹான் பீரிஸ் வெளியிடவில்லை என்றும் ஆசிய மனித உரிமைகள் அமைப்பின் செய்தியாளர் சுட்டிக் காட்டுகிறார்.

மொஹான் பீரிஸ் கூறுகின்றபடி தனது கணவர் வெளிநாடு ஒன்றில் ஒளிந்து கொண்டிருப்பாரேயானால், தங்களுடன் தொடர்புகொள்ளாமல் இருக்க மாட்டார் என அவரது மனைவி சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார் என்று சி.பி.ஜே. சொல்கிறது.

இப்படியான சூழலில் கொழும்பிலிருக்கும் இராஜதந்திர வட்டாரங்கள், மொஹான் பீரிஸின் அறிக்கை தங்களைக் கவலையடையச் செய்துள்ளன என்றும், சில தூதரகங்கள் இது குறித்து பொலிஸார் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்திடம் விளக்கம் கேட்டுள்ளன என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கை அரசின் மூத்த சட்ட அலோசகராக இருக்கும் மொஹான் பீரிஸின் பேச்சுகள் எக்னலிகொட எங்கு இருக்கிறார் என்பது குறித்தும், அவருக்கு கிடைத்த தகவல்களின் ஆதாரங்களையும் வெளியிடால் இருப்பதும், அரசு எழுத்து மூலம் அளித்துள்ள அதிகார பூர்வ விளக்கங்களுக்கு எதிராக உள்ளது என்று ஒரு இராஜதந்திரத் தகவல் தம்மிடம் கூறியதாக ஊடகவியாலாளர்கள் பாதுகாப்பு அமைப்பான சி.பி.ஜே. சொல்கிறது.

இது, ஒரு விடயத்தை மூடி மறைக்கும் நோக்கில் வேறு வழியில் அந்தச் சம்பவத்தை திசை திருப்பும் நடவடிக்கை என்றும் சி.பி.ஜே. கூறுகிறது - என பி.பி.சி.குறிப்பிட்டுள்ளது.

## அவிசாவளைப் டிப்போவுக்குள் பதுங்கியிருந்த பிடி விறாந்துகள் பிறப்பிக்கப்பட்டவர் கைது

கொழும்பு, நவ. 18

அவிசாவளை பொலிஸ் வலயத்தில் நடந்த பல்வேறு களவு, கொள்ளை, மோசடி ஆகியவை தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் எட்டு பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்த சந்தேகநபரொருவர் அவிசாவளை பஸ் டிப்போவுக்குள் பதுங்கிருந்தபோது கைதுசெய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சமயம் இவரிடம் கைக்குண்டு ஒன்று இருந்ததாகவும், தீவிர விசாரணைகளின் பின்னர் இவர் திருடியிருந்த நகைகள், லெப்டொப் கணினி உட்பட பல பொருள்கள் மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளை பிராந்தியத்தில் இவரைப் பற்றிய பீதி மக்களிடையே நிலவி வந்தது எனவும், அதற்காக விசேடமாக நியமிக்கப்பட்ட பொலிஸ் குழு தீவிர தேடுதலுக்குப் பின்னர் இவரைக் கண்டு பிடித்தது எனவும் தெரியவருகின்றது.

சீத்தாவக்கபுர பொலிஸ் அத்தியட்சகர் அத்துல வீரசிங்கவின் பணிப்பின் கீழ் அவிசாவளை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி அஷோக்க குமார தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன.

## புனித டொன் பொஸ்கோ திருப்பண்டம் நாளையதினம் இலங்கை வருகின்றது

கொழும்பு, நவ.18

புனித டொன் பொஸ்கோவின் திருப்பண்டம் நாளையதினம் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டு பொதுமக்களின் தரிசனத்திற்காக நாடுமுழுவதும் எடுத்துச்செல்லப்பட இருக்கின்றது.

புனித டொன் பொஸ்கோவின் சிதைவடையாத வலதுகரத்துடன் கூடிய திருப்பண்டத்தை தாங்கிய மெழுகுச்சிலை உருவம் இம்மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை மக்களின் வழிபாட்டுக்காக இலங்கையின் பல பாகங்களுக்கும் எடுத்துச் செல்லப்படும்.

டொன் பொஸ்கோ சலேசிய சபையினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புனித டொன் பொஸ்கோவின் திருப்பண்டம் உலகளாவிய ரீதியில் 133 நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது. இதற்கமைவாக தற்போது இந்தியாவில் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டிருக்கும் புனிதரின் திருப்பண்டம் நாளை இலங்கைக்கு விமான மூலம் எடுத்து வரப்படுகின்றது.

இலங்கை வந்தடையும் புனிதரின் திருப்பண்டம் நாட்டில் உள்ள கத்தோலிக்க மறை மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்குள்ள தேவாலயங்களில் விசுவாசிகளின் தரிசிப்பதற்காக வைக்கப்பட இருக்கின்றது.

## இரும்பு கடத்திய இருவர் கைது

குருநாகல், நவ.18

யாழ்ப்பாணத்திலிருந்து மாதம்பே பிரதேசத்திற்கு கொண்டு வந்த பெரும் தொடிகாய பழைய இரும்புகளுடன் வெட்டப்பட்ட பெருந்தொகையான புகையிரத் தண்டவாளக் கம்பித் துண்டுகளும் கைப்பற்றப்பட்டதாக சாலியவெல பொலிஸார் தெரிவிக்கிறனர்.

புகையிதத் தண்டவாளக் கம்பிகளுடன் அதனை ஏற்றி வந்த பாரஊர்தி மற்றும் அதன் சாரதி, உதவியாளர் ஆகியோரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புத்தளம் - அநுராதபுரம் வீதியில் பல்கஸ்ஸேகம பாதையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் பரிசோதடினை செய்த போது இந்த தண்டவாளங்கள் கைப்பற்றப்பட்டன. இந்தப் பொருள்கள் ஏற்றிச் செல்வதற்கு சட்டம் அனுமதித்துள்ளதா என ஆராயந்தும் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழ்த் தேசியத்துக்காக குரல் கொடுக்கவே கொழும்பு மாநகர சபைக்கு வந்துள்ளேன்

### எதிர்க்கட்சி உறுப்பினர் சி. பாஸ்கரா

கொழும்பு, நவ.18

தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பதற்காகவே நான் கொழும்பு மாநகர சபைக்கு வந்துள்ளேன். எமது மக்களின் உணர்வுகளை மதிக்கும்படி அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு தனது கன்னி உரையில் தெரிவித்தார் மேலக மக்கள் முன்னணியின் சார்பில் கொழும்பு மாநகர சபைக்குத் தெரிவாகியுள்ள சி.பாஸ்கரா.

எதிர்க் கட்சி உறுப்பினரான அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு-

முதலில் நான் தமிழ் தேசியத்தை ஆதரித்துப் பேசி உறுப்பினராக இங்கு வந்துள்ளேன் . எனது மக்களின் உணர்வுகளையும், எனது உணர்வுகளையும் மதிக்கும் படி கேட்டுக் கொள்கின்றேன்.

கீழ்மட்ட அரசியலிலிருந்து தான் தேசிய அரசியல் வளர்ச்சி பெறுகின்றது என்பது, சகலரினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அரசியல் நீரோடை என்பது உண்மை. இது இலங்கை தலை நகரின் மாநகரசபை.



இது மிகமுக்கியமான தளம்.

அகிம்சை போராட்டத்தில் மக்கள் நம்பிக்கை வைத்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த காலத்தில் இத்தேர்தல் நடைபெற்றுள்ளது. இவ்வேளையில் முதல்வராக ஓர் தமிழன் இருப்பது வரவேற்கத்தக்கது. நான் முதல்வரைத் தமிழன் என்று கூறுவதற்கு காரணம் உண்டு. இந்தியாவில் தமிழ்நாட்டில் இந்துக்களும், இஸ்லாமியரும் தமிழர் என்று தம்மைக் கூறிக் கொள்வதுடன் சமயத்தால் தம்மை வேறுபடுத்தி தமிழர் என்ற தமது ஒற்றுமையைக் காட்டிக் கொள்கின்றனர். ஆனால், இலங்கையில் தமிழர், முஸ்லிம் என இரு இனத்தவராகத் தம்மை காட்டிக் கொள்கின்றனர் இது மாறி தமிழன் என்ற ஒற்றுமை ஓங்க வேண்டும் என்பது எனது ஆவல்.

அன்னியொன்னியமாக இருந்த எமது மூவின சமூகமும் பிற்காலத்தில் பிரிந்து போனதை துர்ப்பாக்கியமாக நினைக்கும் இவ்வேளையில் இனியும் இப்பிரிவை பார்க்காமல் ஒற்றுமையாகப் பிரச்சினையை தீர்க்க வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம்.

வேலைத்திட்டங்களைச் செய்து தருவோம் என்று மக்களுக்கு உறுதியளித்திருக்கின்றோம்.

நாம் ஒற்றுமையாக எமது சட்ட வரையறைக்கு உட்பட்டு அட்டவணைப் படி ஒவ்வொன்றாக செய்வதற்கு உறுப்பினர்கள் அனைவரது ஒத்துழைப்பையும் கேட்டுக் கொள்கின்றேன்- என்றார். (த)

## கைதியின் காதலி கைது

கொழும்பு, நவ.18

வெலிக்கடை சிறையிலுள்ள கைதி ஒருவர் அங்கிருந்தவாறே திட்டம் தீட்டி புறக்கோட்டையிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவரிடமிருந்து பெற்ற 10 லட்சம் ரூபா கப்பப் பணத்தில் இரண்டு லட்சம் ரூபாவைப் பெறமுயன்றார் என்ற சந்தேகத்தின்பேரில், அந்தக் கைதியின் காதலி எனக் கூறப்படும் யுவதி ஒருவரையும், அவரது சகோதரரையும் மொனராகலை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்துள்ளனர்.

இந்தக் கைதி சிறையிலிருந்தவாறே குறிப்பிட்ட வர்த்தகருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மரண அச்சுறுத்தல் விடுத்து சுமார் பத்துலட்சம் ரூபாவைக் கப்பமாகக் கேட்டுள்ளார். அப்பணத்தைக் குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறும் கேட்கப்பட்டுள்ளது. இந்த வங்கிக் கணக்கு இரத்தினபுரி, கிலிமலே பிரதேசத்தில் வசிக்கும் கைதியின் காதலிக்குச் சொந்தமானது.

இவ்விவகாரம் தொடர்பில் வர்த்தகர் கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததையடுத்து அவர்கள் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்தல் கொடுத்திருந்தனர்.

அதன் பிரகாரம் மொனராகலை வங்கியில் இந்தப் பெண் பணத்தைப் பெற வந்தபோது, வங்கி அதிகாரிகள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

அங்கு விரைந்து சென்ற பொலிஸார் சந்தேகநபரான யுவதியையும், அவரது சகோதரனையும் கைது செய்தனர்.

இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நிக்கவெரட்டிய பிரதேசத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்

குருநாகல்,நவ.8

நிக்கவெரடிய பிரதேசத்தில் நான்கு வீடுகளைச் சேதமாக்கிய காட்டு யானைகள் அங்கிருந்த நெல்மூடைகளையும் மதின்று விட்டுச் சென்றுள்ளன என பிரதேச செயலாளர் அலுவலகத்தின் சமூகசேவைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வம்பட்டுவப் பிரதேசத்தில் மூன்று வீடுகளும், எலவக பிரதேசத்தில் ஒரு வீடும் யானைகளின் தாக்குதல்களால் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

கடந்த நாட்களில் ஊருக்குள் பிரவேசித்த காட்டு யானைகளை விரட்டிய போதிலும் அவை மீண்டும் கிராமங்களுக்குள்ளேயே அலைந்து திரிகின்றன.


இந்த யானைகள் பொது மக்களின் விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. சில பிரதேசங்களில் பொதுமக்கள் பகல் வேளைகளிலும் பாதைகளில் செல்லப் யப்படுகின்றனர் என அப்பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.

# Win Zip 16 மென்பொருளின் புதிய பதிப்பு தரவிறக்கம் செய்வதற்கு

கோப்புகளை சுருக்கிப் பதிந்து காப்பதில் நீண்ட காலமாகப் பல லட்சக்கணக்கான வாடிக்கையாளர்களால் பயன்படுத்தப்படும் மென்பொருள் வின்ஸிப். இதன் பதிப்பு 16 அண்மையில் வெளியாகியுள்ளது. இந்த பதிப்பில் 64 பிட் இஞ்சின் பயன்படுத்தப் படுவதால் சுருக்கி விரிக்கும் பணி தற்போது அதிக வேகமாகவும், எளிதாகவும் மேற்கொள்ளப்படுகிறது. பழைய சிறப்பு வசதிகள் தொடர்ந்து கிடைக்கின்றன. படங்கள் 25% சுருக்கப்படுகின்றன. பாதுகாப்பு தரும் வகையில் AES encryption மற்றும் கடவுச்சொல் பயன்படுத்தும் வசதி கிடைக்கிறது.

சுருக்கப்பட்ட கோப்பு பெரியதாக இருந்தால் மின்னஞ்சலில் அனுப்புவது இயலாது. இதற்கு புதியதாக Zip Send என்ற வசதி தரப்பட்டுள்ளது. You Send It இணைய தளத்தின் கூட்டுடன் 50 எம்.பி. சுருக்கப்பட்ட கோப்பு அனுப்பப்படுகிறது. நீங்கள் ஏற்கனவே Zip Send Pro பயனாளர் என்றால் இந்த அளவு 2 ஜிபி வரை அனுமதிக்கப்படுகிறது. அடுத்த புதிய வசதி Zip Share. இதன் மூலம் ஸிப் செய்யப்பட்ட பைலை கிளவ்ட் கம்ப்யூட்டிங் வசதிக்கு அனுப்பி விட்டு, அதற்கான லிங்க் ஒன்றை பேஸ்புக் தளத்தில் நம் நண்பர்கள் டவுண்லோட் செய்திட வசதியாக அனுப்பலாம்.

http://www.winzip.com/downwz.htmஎதிர்காலத்தில் பயன்படுத்தக் கூடிய வகையில் Zip to Bluray என்ற ஒரு வசதி கிடைக்கிறது. காத்து வைத்திட சுருக்கப்பட்ட தகவலினை 50 ஜிபி அளவில் ஒரு புளூரே டிஸ்க்கில் இதன் மூலம் பதிய முடியும். புளூரே டிஸ்க் பயன்பாடு பரவலாகக் கிடைக்கையில் இதனை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். மொத்தத்தில் ஏற்கனவே பல வசதிகளைக் கொண்டுள்ள விண்ஸிப் புரோகிராமில் கூடுதல் பயன்கள் பல சேர்க்கப்பட்டுள்ளன.




# ஆடைகளை அளவெடுக்கும் அசத்தல் மென்பொருள் வந்துவிட்டது!



அளவெடுத்து தைப்பது, ரெடிமேட் என்று ஆடைகளில் இரண்டு விதம். முதலாவது சிறிதளவு சிக்கலான வேலை. அளவு எடுத்து டெய்லரிடம் ஒரு வாரத்தில் தைத்து தருவார். இந்த வேலைகள் இல்லாததால் ரெடிமேடுக்கு வரவேற்பு அதிகம். அதிலும் சிக்கல் இல்லாமல் இல்லை. நிறுவனத்துக்கு நிறுவனம் அளவு வேறுபடும். இடுப்புச் சரியாக இருந்தால் கால் பக்கம் தொளதொளவென்று இருக்கும். அங்கே சரியாக இருந்தால் வேறு பக்கம் இழுக்கும்.

இதுபோன்ற சிக்கல்களைத் தவிர்க்கவே வர்ச்சுவல் டெய்லர் என்ற மென்பொருளை உருவாக்கி இருக்கிறார் ஜெர்மனியைச் சேர்ந்த ஆசர் மோசஸ் என்ற தொழிலதிபர். வீட்டில் இருந்தபடியே அளவு கொடுக்கலாம். கணினி, இணையத்தளம் என்பவற்றை இயக்கி வர்ச்சுவல் டெய்லர் மென்பொருளை இயக்க வேண்டும். பின்னர், இணையக்கமரா முன்பு முன், பின், பக்கவாட்டு திசைகளில் அடுத்தடுத்து நிற்க வேண்டும். 3 டியில் எம்மைப் படமெடுத்து அளவை குறித்துக் கொள்கிறது மென்பொருள். எமது உடம்புக்கு கச்சிதமாக பொருந்தக்கூடிய ஆடையும் கணினியின் உதவியுடனேயே தைக்கப்பட்டு விரைவில் விற்பனை செய்யப்படும் என்கிறார் மோசஸ். இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்:

ஆடையை அளவெடுக்கும் அசத்தல் மென்பொருள் வந்துவிட்டது..!


சராசரியான இடுப்புச் சுற்றளவு, உயரம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே ரெடிமேட் ஆடைகள் தைக்கப்படுகின்றன. இணையத்தளத்தில் வாங்குகிற ஆடைகள் பொருந்துவதில்லை என்று பலர் கூறுகின்றனர். நான் இப்படி ஒருமுறை சிரமப்பட்ட பிறகுதான், வேர்ச்சுவல் டெய்லர் யோசனை தோன்றியது. வேர்ச்சுவல் டெய்லர் மென்பொருள் அந்தக் குறைகளை நீக்கிவிடும். மேலும், சராசரியாக மக்களின் இடுப்பு, கால் அளவுகள், உயரம் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து ரெடிமேட் ஆடை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு உரிய ஆலோசனைகள் சொல்லவும் முடியும். இவ்வாறு மோசஸ் கூறினார்.

# உங்களது புகைப்படங்களை பழங்கால படங்களாக மாற்றுவதற்கு

கறுப்பு, வெள்ளை புகைப்படத்துக்கு அடுத்த நிலையில் வெளிவந்ததுதான் இலேசான இளம் பச்சை மற்றும் மஞ்சள் வண்ணம் கலந்த புகைப்படங்கள். அந்த காலத்து புகைப்படங்கள் என்பதை இவை சொல்லாமல் சொல்லும். நாம் இப்போது எடுத்த புகைப்படத்தை கூடப் பழைய காலத்தில் எடுத்த புகைப்படமாக எளிதாக மாற்றலாம்.

தொழில்நுட்ப மாற்றங்கள் நாளும் பெருகி வரும் வேளையில் ஒன்லைன் மூலம் சில நொடிகளில் பல வித்தைகள் செய்யலாம். அந்த வகையில் எந்த மென்பொருள் துணையும் இன்றி இணையத்தளம் மூலம் எமது புகைப்படங்களை பழையகாலத்தில் எடுத்த புகைப்படம் போல் மாற்றலாம் எமக்கு உதவ ஒரு தளம் இருக்கிறது. இந்தத்தளத்திற்கு சென்றவுடன் Choose File என்ற பொத்தானை சொடுக்கி நம் புகைப்படத்தை தேர்ந்தெடுத்து Upload என்பதை சொடுக்கி பதிவேற்றம் செய்ய வேண்டும்.

அடுத்து வரும் திரையில் நாம் தேர்ந்தெடுத்து பதிவேற்றம் செய்த புகைப்படம் பழைய காலத்து புகைப்படமாக மாற்றப்பட்டிருக்கும். மாற்றப்பட்ட இந்த புகைப்படத்தின் மேல் Right Click செய்து Save image as என்பதை சொடுக்கி எமது கணினியில் சேமித்தும் வைக்கலாம் இணையத்தள முகவரி http://www.youroldpic.com/



# தொலைபேசி, லப்டாப் பற்றரிகளின் திறனை 10 மடங்கு அதிகரிக்க புதிய கண்டுபிடிப்பு

தொலைபேசி மற்றும் மடிக்கணினி ஆகியவற்றுக்கான பற்றரிகளை தற்போது Recharge செய்வதிலும் பார்க்க 10 மடங்கு வேகத்திலும், 10 மடங்கு அதிக சக்தி கொண்டதாகவும் Recharge செய்வதற்குரிய புதிய தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

அமெரிக்காவின் Northwestern University ஐ சேர்ந்த விஞ்ஞானிகள், லித்தியம் அயன் பற்றரிகளில் உலோகத்தை மாற்றிவிட்டு மில்லியன் கணக்கான மெல்லிய துளைகளை பற்றரிகளில் உருவாக்குவதன் மூலம் இந்த அதிதிறன் கொண்ட புதிய வகை பற்றரிகளை உருவாக்கும் தொழில்நுட்பத்தில் வெற்றி வெற்றுள்ளனர். இவ்வகையான பற்றரிகள் இன்னமும் ஐந்து வருடங்களுக்குள் சந்தைக்கு வந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அஷ்ரப் நகரில் சட்டப்படி இருப்போர் தவிர்ந்த ஏனையோர் அகற்றப்படுவர்

## அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் வனப்பாதுகாப்பு அதிகாரி தெரிவிப்பு

அம்பாறை, நவ.18

''அம்பாறை மாவட்டத்தில் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் அஷ்ரப் நகரின் காணிப் பிரச்சினையைப் பொறுத்தவரை அங்கு சட்ட பூர்வமாக வசிப்பவர்களும், சட்ட ரீதியான உறுதிப் பத்திரங்களையும், உரிய ஆவணங்களையும் தம்வசம் வைத்திருப்போரும் அங்கிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள். அகற்றப்படுவர்''.

-இவ்வாறு அம்பாறை மாவட்டத்துக்குப் பொறுப்பானவனப் பாதுகாப்பு அதிகாரி லலித் கமகே, நீதியமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமிடம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஹக்கீமுக்கும், அம்பாறை மாவட்ட வனப் பாதுகாப்பு அதிகாரி லலித் கமகேயிற்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் அமைச்சரின் இல்லத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போதே அம்பாறை மாவட்ட வனப்பாது காப்பு அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக வனப்பாதுகாப்பு உயர் அதிகாரி லலித் கமகேயை அட்டாளைச் சேனைப் பிரதேசசபைத் தலைவர் ஏ.எல்.எம்.நஸீர், ஒலுவில் பள்ளிவாசல் நிர்வாக சபையினர் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். அதனைத் தொடர்ந்து வனவள பாதுகாப்பு அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா, உயர் அதிகாரிகள், பாதிக்கப்பட்ட தரப்பினர் ஆகியோர் பேச்சு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என்று அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார். அவசியம் ஏற்படின் ஜனாதிபதியுடனும் பேச்சு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் எனவும் அமைச்சர் ஹக்கீம் மேலும் கூறினார்.

குறிப்பிட்ட பிரதேசத்தில் ராணுவ முகாம் அமைக்கப்படுவது பற்றி அமைச்சர் ஹக்கீம் கூறினார். அத்தோடு தற்காலிகமானதென்று தெரிய வருவதாகப் பாதுகாப்பு அதிகாரி பதிலளித்தார்.

படையினர் அங்கு நிலை கொண்டுள்ளது பற்றி அமைச்சர் தெரிவித்த போது அண்மையில் அந்தப்பகுதி மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை அடுத்து, ராணுவத்தினரது எண்ணிக்கை அந்தப்பிரதேசத்தில் சற்று அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அஷ்ரப் நகரில் காணிப்பிரச்சினை காரணமாக பாதிப்புக்குள்ளாகி இருக்கும் மக்களுக்கும் தமக்குமிடையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நிந்தவூரில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது என்று அமைச்சர் ஹக்கீம் கூறினார். இந்தப் பிரச்சினைக்கு சுமூக மானதீர்வைக்காணும்வரை அந்த மக்களை வற்புறுத்தி வெளியேற்ற வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார்.

# நுவரெலியாவில் புதிதாக 8 பிரதேச செயலகங்கள்

## சகல தரப்புக்களும் இணக்கம்

பொகவந்தலாவை, நவ.18

நுவரெலியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் தொழிற்சங்க அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து மேற்கொண்ட பல்வேறு கலந்துரையாடலுக்குப் பின்னர் நுவரெலியா மாவட்டத்தில் 13 பிரதேச செயலகப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்காக பரிந்துரையைச் செய்துள்ளன.

இந்தப் பரிந்துரையை எல்லை மீள் நிர்ணய ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தற் போது 5 பிரதேச செயலகங்கள் உள்ளன. அவற்றில் நுவரெலியா, அம்பகமுவ, வலப்பனை ஆகிய பிரதேச செயலகங்களைத் தலா 3 பிரதேச செயலகங்களாகவும் கொத்மலை, ஹங்குரன்கெத்த ஆகிய பிரதேச செயலகங்களை தலா இரண்டு பிரதேச செயலகங்களாகவும் பிரிப்பதற்கும், மேலும் புதிய கிராமசேவகர் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கும் நுவரெலியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல், தொழிற்சங்க, அரசசார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

# கழிவுத் தேயிலையுடன் லொறி விரட்டிப்பிடிப்பு

## நாவலப்பிட்டியில் இருவர் கைது


கம்பளை, நவ.18

நாவலப்பிட்டி கொறக் கோயா தேயிலைத் தொழிற்சாலையிலிருந்து கழிவுத் தேயி லையை ஏற்றிவந்த லொறியொன்றைக் கைப்பற்றிய பொலிஸார் அதன் சாரதியையும் நடத்துனரையும் கைதுசெய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து போலியான போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

தகவலொன்றுக்கமைய பாலமொன்றுக்கடியில் பதுங்கியிருந்த பொலிஸாரே லொறியை மடக்கியுள்ளனர். பொலிஸாரைக் கண்டதும் வேகமாகத் தப்பிச்சென்ற லொறியை 'பொலிஸார் பலத்த பிரயத்தனத்துக்கு மத்தியில் விரட்டிப் பிடித்துள்ளனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



திருகோணமலையின் புறநகர் பகுதியான வில்கம்வெகற கிராமத்தில் வில்கம்முல சிங்களவித்தியாலயம் கடந்த திங்கட்கிழமை அதிகாலை காட்டு யானைகளின் தாக்குதலினால் சேதத்திற்குள்ளாகியுள்ளது. பாடசாலைக் கட்டடம் சேதமடைந்துள்ள நிலையில் காணப்படுகிறது.

# புதையல் தோண்டிய ஐவர் சிக்கினர்

மாத்தளை, நவ.18

மாத்தளை - கலேவெல பிரதேசத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 5 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்துக்கு பாதையொன்று அமைக்கும் பாவனையில் அவர்கள் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று கலேவெல பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் கலேவெல, பொலன்னறுவை, கிரிபத்கொடை, கடவத்த, அவிசாவளை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் கூறினர்.

# ஓட்டோ புரண்டு வீட்டின்மீது வீழ்ந்து 6 பேர் படுகாயம்

தியத்தலாவை, நவ.18

தியத்தலாவை தொடங்வத்த எனும் இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் படுகாயமடைந்த 6 பேர் பதுளை வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தியத்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

கஹகொல்ல பிரதேச நண்பர்கள் ஐவரும், வடபகுதி இராணுவச் சிப்பாய் ஒருவரும் இரவு மதுவருந்திய நிலையில் ஓட்டோவில் சென்றுகொண்டிருந்த சமயம் பனிமூட்டம் காரணமாக வீதியை விட்டு விலகிய ஓட்டோ பள்ளத்திலுள்ள வீட்டின் மீது விழுந்து நொறுங்கியுள் ளது.

சம்பவத்தில் அதில் பயணித்த அறு வரும் பலத்த காயங்களுக்குள்ளாகி தியத்தலாவை தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்கென பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று தியத்தலாவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திலின ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

# தமிழ்மொழி பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

ஹாரிஸ்பத்துவ, நவ்.18

கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்துக் குட்பட்ட தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக அடுத்தமாதம் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று விசனிக்கின்றனர்.

குறிப்பாக முக்கிய பாடங்களான கணிதம், விஞ்ஞானம், தமிழ்மொழி, சித்திரம், ஆங்கிலம், சமயம் ஆகிய பாடங்களைப் போதிப்பதற்கு ஆசிரியர் கள் இங்கு இல்லை என்றும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக தாம் காலையில் பாடசாலைக்கும், மாலையில் தனியார் வகுப்புகளுக்கும் செல்லவேண்யுள்ளது என்றும், இதனால் கால விரயமும், பண விரயமும் ஏற்படுகின்றது எனப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

# இணைந்த சேவையில் நியமிக்கப்பட்ட பட்டதாரிகள் ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்படவேண்டும்

## இஸ்லாமியர் ஆசியர் சங்கம் கோரிக்கை

அம்பாறை,நவ.18

''நாடெங்குமுள்ள பாடசாலைகள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்ட பட்டதாரிகள், இணைந்த சேவைக்குள் மாத் திரமின்றி, ஆசிரிய சேவைக்குள்ளும் உள்வாங்கப்படல் வேண்டும்''.

இவ்வாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் சார்பில் அதன் தேசியத் தலைவர் எம்.அனஸ் இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''நாடெங்குமுள்ள பாடசாலைகள் மற்றும் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டு இதுவரை வேறு பதவிகளுக்கு உள்ளீர்க்கப்படாதுள்ள நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள், திட்டமிடல் நிதி உதவியாளர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள் அனைவரையும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களாக உள்ளீர்க்கும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாக பதவி உயர்வுகள் எதுவுமின்றியும், சேவை மாற்றம்கூட மறுக்கப்பட்டு பாதிக்கப்பட்டிருக்கும் இந்தப் பட்டதாரிகளுக்கு விமோசனமளிக்க கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம். குணசேகர தயாரித்துள்ள தனி யான சேவைப் பிரமாணக் குறிப்புடன்கூடியஇணைந்தசேவை உத்தியோகத்தர் திட்டத்தை எமது சங்கம் வரவேற்கின்றது.

இதேவேளை இவர்கள் சுய விருப்பத்தின் பேரில் ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்படவும் கல்வி அமைச்சு அனுமதிக்க வேண்டுமெனவும்கோருகின்றது.

ஏனெனில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 2005ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் நியமனம்பெற்ற பட்டதாரிகள் சுய விருப்பத்தின் பேரில் பல தடவைகளில் ஆசிரியர்களாக உள்ளீர்க்கப்பட்டு, பதவி உயர்வுடன் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் மாகாணப் பொதுநிர்வாக அமைச்சின் நியமனம் பெற்றவர்கள் இதுவரை சேவை மாற்றம் எதற்கும் அனுமதிக்கப்படாது, பதவி உயர்வுகள் எதுவு மின்றி மிகுந்த வேதனையுடன் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

எனவே 1996ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் பட்டதாரிகளுக்குப் பொருத்தமான பதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் போட்டிப் பரீட்சைமூலம் ஆள் சேர்க்கப்பட்டு இதுவரை வேறு பதவிகளோ, பதவி உயர்வுகளோ இல்லாது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்கும் திட்டத்தில் ஆசிரியர் சேவைக்குச் செல்லவும் வாய்ப்பளிக்கப்படல் வேண்டுமெனக்கோருகின்றோம்''-எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-30)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
குழந்தைகள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். கணவன், மனைவி இடையே சிறு சச்சரவுகள் ஏற்படலாம். நடந்து முடிந்த சம்பவம் ஒன்றை நினைத்து மன வருத்தம் அடைவீர்கள். உறவினர் ஒருவரைப் பற்றி மற்றொரு உறவினரிடம் விமர்சிப்பீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால், அவதிகளுக்கு ஆள்படலாம்..

**இடபம்:**
உழைப்பில் கடுமை இருந்தாலும், அதை சந்தோஷமாகச் செய்வீர்கள். அரசியல்வாதிகள் வெளியூர் பயணங்கள் செல்லலாம். உங்களின் திறமையை வெளிப்படுத்த வாய்ப்புகள் உருவாகும். மனதில் குடிகொண்டிருந்த ஆதங்கம் விலகி, சந்தோஷம் அதிகரிக்கும். வேலையாள்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். சுகமான அனுபவம் உண்டு.

**மிதுனம்:**
வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். உறவினர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். வியாபாரிகள் தடை, தாமதங்களைத் தவிர்க்க முன்யோசனையுடன் செயற்பட வேண்டும். பண விடயங்களில் யாருக்கும்பிணை கொடுக்க வேண்டாம். நேரம் காலம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

**கடகம்:**
தடைகளை முறியடித்து நினைத்ததை சாதிக்கும் நாள். பெண்கள் வழியில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். அயலார் மத்தியில் மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் முழுமையான வெற்றி கிடைக்கும். செலவுகளில் சிக்கனம் காட்டுவீர்கள்.

**சிங்கம்:**
போட்டி, பகையால் கோபம், பதற்றம் உருவாகும். தொலைபேசி வழியில் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்வுக்கு வரும். பெண்கள், கணவரின் அன்பைப் பெறுவர். விருந்தினர்கள் வருகையால் சில வேலைகளில் மாற்றங்கள் ஏற்படலாம். உங்களின் மனக்குறையை மற்றவர்களிடம் சொல்வீர்கள்..

**கன்னி:**
நண்பர்கள் கேட்ட உதவிகளைச் செய்து அவர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். பொன், பொருள் வாங்கத் திட்டம் போடுவீர்கள். தொழில் ரீதியான வேலை ஒன்றுக்கு எதிர்பார்த்ததை விட கூடுதல் வருமானம் பெறலாம். சிலர் மீது கோபம் உருவானாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள்.

**துலாம்:**
எந்த விடயத்திலும் பொறுமையாகவும், பொறுப்புடனும் செயற்படுவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பணவரவுகளைப் பெறலாம். பெற்றோர் வழியில் உதவிகள் கிடைக்கலாம். தெய்வ காரியப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்கள் தவறு என்று நினைக்கும் காரியங்களை நீங்கள் சரியென நினைத்துச் செய்வீர்கள்.

**விருச்சிகம்:**
கொடுக்கல், வாங்கலில் சுமுகமான நிலைமை காணப்படும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். வெளியூர்களில் இருக்கும் ஒருவர் உங்களுக்கு முக்கிய தகவலைச் சொல்லலாம். பொருள்கள் எதையாவது வாங்கி விட்டுச் சிலரிடம் கடன் சொல்லலாம். சிறிய செலவு ஒன்றுக்கு யோசித்த நீங்கள் ஒரு விடயத்திற்கு பெரிய அளவில் செலவிடலாம்.


**தனுசு:**
வருவாய் ஒன்றை எதிர்பார்த்து அது வருவது தள்ளிப் போகலாம். மரியாதை, கௌரவத்தை பாதிக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். குடும்ப உறுப்பினர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல் அவற்றை நீங்களே செய்யலாம். நண்பர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். பணத்தட்டுப்பாடு நேரும்.

**மகரம்:**
எதையும் வெற்றிகரமாகச் செய்யும் வல்லமை அதிகரிக்கும். உங்களின் திட்டங்களுக்கு நண்பர்கள் கை கொடுத்து உதவுவர். பெண்கள் வழியில் சில சலுகைகள், உதவிகளைப் பெறலாம். சக ஊழியர்கள் அனுசரணை, ஆதரவாக இருப்பர். உடல் நலத்திற்காக ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலவிடலாம்.

**கும்பம்:**
பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கலாம். குடும்பத்தில் கலகலப்பு, சந்தோஷம் குடிகொள்ளும். வியாபாரிகள் இருப்புப் பொருள்கள் மூலம் கணிசமான வருமானம் பெறலாம். உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள். தடை, தாமதங்கள் இல்லாமல் எந்த வேலையையும் சுலபமாக முடிப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும்.

**மீனம்:**
பெண்கள், சகோதரிகள் வழியில் எதிர்பாராத செலவுகள், தொல்லைகள் நேரும். கடன் விவகாரங்களில் பிறரின் அதிருப்திக்கு ஆள்படலாம். ஒருவர் மூலம் சில வேலைகளை முடிக்க முற்பட்டு, அது முடியாமல் மற்றொருவர் மூலம் முடிக்க நேரிடலாம். பிரபலமான கோயில் களுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம். வயிறு, வாயு உபாதை நேரும்.

# வடக்கை அ
# போர்ச் சுற்



ஆனையிறவில் உள்ள புல்டோசர் நினைவிடம் ... இருந்து வருபவர்கள் இங்கு இறங்கி அஞ்சலி செ... ஆர்வத்துக்குரிய தலமாக இருக்கின்றது.

**இலங்கையின் சுற்றுலாத் துறை குறித்தும் வன்னிக்குப் படையெடுக்கும் தென் பகுதி மக்கள் குறித்தும் பிரிட்டன் நாளேடு ஒன்று வெளியிட்டுள்ள கட்டுரையின் தமிழாக்கம்**

இலங்கையில் இதுவரை பார்வையிட முடியாதிருந்த - போர் நடைபெற்ற - பெரும் பிரதேசம் ஒன்றைப் பெருமளவான மக்கள் தற்போது பார்வையிடச் செல்கின்றனர். நாட்டின் வடபகுதியிலுள்ள மக்களின் பொருளாதாரம் வளம்பெற இந்த போர் சுற்றுலாத்துறை உதவுகிறது என்று சொல்லப்படுகிறது.

உள்ளூர் மக்கள் பணத்தை வரவேற்கின்ற போதிலும், பாரம்பரியமாக விளங்கிய தமிழர் பண்பாட்டுப் பிரதேசங்கள் மீது இந்தச் சுற்றுலாத்துறை ஏற்படுத்தும் பாதிப்புக்கள் குறித்துக் கவலை கொள்கின்றனர்.

### போர்ச் சுற்றுலா

தமது இன மக்களுக்காகத் தனி நாடு கேட்டுப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த இடத்தை நோக்கிச் செல்லும் ஏ-9 நெடுஞ்சாலையில் ஒவ்வொரு நாளும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் பயணிக்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் தெற்குச் சிங்களவர்கள்.

2009 மே மாதம் இலங்கையின் உள்நாட்டுப் போரில் அரசு வெற்றி பெற்றதன் பின்னர், போர் நடந்த இடங்களுக்கு தெற்கு மக்கள் சுற்றுலா செல்வதையும் போர் நினைவுச் சின்னங்களைப் பார்வையிடுவதையும் இலங்கை அரசு ஊக்குவிக்கின்றது. குறிப்பாக புலிகளின் சிறைச்சாலை, அழிக்கப்பட்ட நீர்த்தாங்கி போன்றன சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற இடங்களாக உள்ளன.

கடந்த 15 ஆண்டுகளாக கப்பல் அல்லது விமானத்தின் மூலம் மட்டுமே செல்லக் கூடியதாக இருந்த யாழ்ப்பாண நகரமும் இப்போது சுற்றுலாப் பயணிகளின் மையமாக மாறியுள்ளது.

இந்தப் போர் சுற்றுலாத்துறை முயற்சிகளுக்குத் தலைமை தாங்குவதற்கு, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது மகன் நாமல் ராஜபக்ஷவை நியமித்துள்ளார்.

### சிங்கள மக்களின் ஆர்வம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைநகராகக் காணப்பட்ட கிளிநொச்சியில் இலங்கை அதிகாரிகள் போர் வெற்றிக்கான நினைவுச் சின்னங்களை அமைத்துள்ளனர்.

அண்மையில் கிளிநொச்சிக்குச் சென்றபோது, புலிகளால் அழிக்கப்பட்ட நீர்த்தாங்கிக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னங்கள் விற்கப்படும் கடையொன்றில் இளம் கோப்ரல் தர படை வீரர் ஒருவனைச் சந்தித்தேன். அவன் விற்பனையில் ஈடுபட்டிருந்தான்

அந்தக் கடையில் ''மீளெழுந்து வரும் கிளிநொச்சி'' எனப் பொறிக்கப்பட்ட 'ரீ சேட்' மற்றும் இலங்கை இராணுவத்தின் குறிப்புப் புத்தகங்கள் விற்கப்படுகின்றன.

''விடுமுறை தினங்களில் நாளொன்றுக்கு 10,000 விருந்தினர்கள் இங்கு வருவார்கள். இன்றைய நாள் இதுவரை ஏழு பஸ்கள் இங்கு நிறுத்தப்பட்டு விட்டன'' என அந்தப் படை வீரன் தெரிவித்தான்.

அந்த இடத்திலிருந்து மிக அருகில் உள்ள புலிகளின் சிறைச்சாலையைப் பார்ப்பதற்காகவும் பெருமளவான மக்கள் செல்கின்றனர். அங்கு பார்ப்பதற்குப் பெரிதாக ஒன்றும் இல்லை. சிறைச்சாலையில் பல சிறைக்கூண்டுகள் இருக்கின்றன. அத்துடன் சிறிய மலசலகூடங்களும் காணப்படுகின்றன. ஆர்வத்தைத் தூண்டக்கூடிய எதுவும் இல்லாத போதும் அதனைப் பார்வையிடுவதில் சுற்றுலாப் பயணிகள் மிகவும் ஆர்வமாகவே உள்ளனர்.

''இது எவ்வாறு இருக்கும் என்பதைப் பார்க்கவே நான் விரும்பினேன்'' என தெற்கிலிருந்து வந்திருந்த பெண்மணி ஒருவர் விளக்கினார்.

### போர் நினைவுச் சின்னங்கள்

யாழ். குடாநாட்டின் நுழைவாயிலாக அமைந்துள்ள ஆணையிறவைப் பார்வையிடும் சுற்றுலாப் பயணிகள் யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட நிலம் சமப்படுத்தும் இயந்திரம் (புல்டோசர்) ஒன்றுக்கு முன்னால் நின்று ஒளிப்படம் எடுக்கின்றனர்.

1991இல் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையில் இடம்பெற்ற போரின்போது, தளத்தை நோக்கி வந்து கொண்டிருந்த அந்த வாகனத்தை நெருங்கி, இரண்டு கையெறி குண்டுகளை அதற்குள் வீசி அதனை அழித்த லான்ஸ் கோப்ரல் காமினி குலரட்ணவின் ஞாபகமாக வைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னம் அது. அதன் முன்னால் நின்றும் இந்தச் சுற்றுலாப் பயணிகள் ஒளிப்படம் எடுக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் காமினி குலரட்ண அதே இடத்தில் கொல்லப்பட்டார். பின்னர் இராணுவ வீரத்துக்கான இலங்கையின் உயர்ந்த மதிப்பு வழங்கி அவர்



கிளிநொச்சியில் இடிந்த நீர்த்தாங்கி

சுற்றுலாப் பயணிகளால் நிறைந்துள்ள வடக்கு ந



# அச்சுறுத்தும்
# றுலாக்கள்





ம் தற்போது போரில் இறந்த படையினருக்கு அஞ்சலி செலுத்தும் இடமாக மாற்றமடைந்துள்ளது. தெற்கில் செலுத்துவதுடன் ஒளிப்படங்களும் எடுக்கிறார்கள். ஆனையிறவில் உள்ள போர் வெற்றிச் சின்னமும் மக்களின்

கௌரவிக்கப்பட்டார்.

### இப்போது ஒரே கொடி

"இங்கு 35 ஆண்டுகளாக விடுதலைப் புலிகள் ஒரு பிரச்சினையாக இருந்துள்ளனர். நான் 12 வயதாக இருந்தபோது இங்கு வந்திருக்கிறேன். தற்போது எனக்கு 57 வயது. தற்போது இலங்கையில் ஒரு தேசியக் கொடி மட்டுமே உள்ளது. எல்லோரும் 'சிறிலங்கர்' களே" எனக் கொழும்பிலிருந்து வடக்கைப் பார்வையிடுவதற்காக வந்திருந்த எஸ்.வணிகசேகர என்ற சுற்றுலாப் பயணி தெரிவித்தார்.

2010இல் இலங்கையில் போர் இடம்பெற்ற பகுதிகளைப் பார்வையிடுவதற்காக 650,000 வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது. ஆனால், உள்நாட்டிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பதிவுகள் துரதிர்ஸ்டவசமாக எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கை நோக்கி பஸ்கள் நிறைந்த தென்பகுதி மக்கள் வருகை தருகின்றனர். ஆனால் இவர்களின் தொகையைக் கணக்கெடுப்பதற்கான பதிவுகள் எதுவும் இல்லை என இலங்கை சுற்றுலாத் துறையைச் சேர்ந்த உதய குமார லியனகே தெரிவித்தார்.

### முரண் நிலை

இலங்கை அரசு வடக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கின்ற போதிலும், வேலையில்லாப் பிரச்சினையும், போதிய வாய்ப்புகள் இன்மையும் இங்கு பெரும் நெருக்கடியாக உள்ளன. இது குறித்து அங்குள்ள மக்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

இதேவேளை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதியைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் கை நிறையப் போதியளவு பணத்துடனேயே வருகின்றனர்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் தற்போது பல புதிய விடுதிகள், உணவகங்கள், கடைகள் போன்றன அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் சுற்றுலாப் பயணிகளின் வருகை பல பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக தமிழ் அரசியல்வாதிகள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

### அரசியல்வாதிகளின் எச்சரிக்கை

குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களில் உள்ள தமிழர் களின் பாரம்பரிய கலாசார மையங்கள் தென்பகுதியிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளால் பாதிப்புக்குள்ளாகின்றன என்று தமிழ் அரசியல்வாதிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழர்களின் பாரம்பரிய இடங்களில் அதாவது குறிப்பாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இலங்கை அரசு தென்பகுதி சிங்களவர்களைத் திட்டமிட்டுக் குடியேற்றுவதாகவும் தமிழ் அரசியல்வாதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.


வடக்கில் வாழும் மக்களின் குடிசனப் பரம்பலில் சடுதியாக மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசிடம் வழங்கிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எது எவ்வாறிருப்பினும், தற்போது வடக்கு நோக்கி வரும் சுற்றுலாப் பயணிகளால் நன்மையைப் பெறுவதை உள்ளூர் மக்கள் மறுக்கவில்லை.


யாழ்ப்பாண வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள சந்தையில் திராட்சைப்பழம், குளிர்பானம், பழப்பாகு போன்றவற்றை விற்பனை செய்யும் வியாபாரி ஒருவர், சுற்றுலாப் பயணிகளின் வருகையால் வியாபாரத்தைக் கூடுதலாக மேற்கொள்ள முடிகின்றது எனத் தெரிவித்தார்.

*(நன்றி: புதினப்பலகை)*

...நகர்



கிளிநொச்சி போர் நினைவிடம்



முல்லைத்தீவில் கடற்புலிகளின் நீச்சல் தடாகம்

## இவ்வளவுதான்..உலகம்



வாழ்வில் எம்முடைய மிகப்பெரிய சோகத்துக்குக் காரணம் நம்மைப் பிறர் புரிந்துகொள்ள வேண்டும் என்கிற எதிர்பார்ப்புத்தான். அது நடக்கிற விஷயமில்லை. நம்முடைய சக்தி செலவழிப்பில் அதிக விரயம் எதற்கு செலவாகிறது தெரியுமா? எப்படியாவது நம்மை மற்றவர்க்குப் புரிய வைத்துவிட வேண்டும் என்கிற வெறியில்தான், முயற்சியில்தான் எம் பலவீனர்கள் ஆகிறோம். இது வேண்டாத வேலை.

நம்மை, நாம் தரப்பு நியாயத்தை, நம் செயலுக்கான காரணங்களைப் பிறர்க்குப் புரிய வைக்க முயற்சி செய்வது நமது ஜனநாயகக் கடமை. மானுட தர்மம். ஆனால் அவரவர் அவரவருடைய மனப்பக்குவம், அக்கறை, அகங்காரம், அறியாமை, அடாவடித்தனம், தகுதி இவற்றிற்கேற்பத்தான் எதையும் புரிந்து கொள்ள முடியும் என்பதை நாம் முதலில் உணர வேண்டும்.

வளர்ந்த சூழல், சமூக அமைப்பு, கல்வியறிவு, வயது, அனுபவம் இவை ஒருவருக்கு ஒருவர் மாறுதல் அடைவதால் ஒருவர் புரிந்து கொள்கிற மாதிரி மற்றவரால் புரிந்துகொள்ள முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மறுபிறவி, பாவ புண்ணியம் இவற்றை ஆசியாவில் பிறந்து வளர்ந்தவர்கள் புரிந்து கொள்கின்ற மாதிரி ஐரோப்பியர்களால் புரிந்துகொள்ள முடியாது. இளமை, செல்வம், உடம்பு நிலையற்றது என்பதை வெகு சுலபமாக தமிழர்கள் புரிந்துகொள்கிற அளவு வெள்ளைக்காரனால் புரிந்துகொள்ள முடியாது. சாவு பற்றி அலட்சியம் நம்மிடம் இருக்கிற மாதிரி வெள்ளைக்காரனிடம் இருக்க முடியாது. உடம்பின் மீதும், வாழ்வின் மீதும் அவன் காட்டும் அக்கறை நம்மிடம் இருக்கவே முடியாது. இவையாவும் புரிந்துகொள்ளும் திறனில் இருக்கும் வேறுபாட்டால் நிகழுகிறது என்பதைப் புரியவைக்க முயற்சி செய்பவர்கள் முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

தன் கணவன் வேலை முடிந்து வெகுதாமதமாக வீடு திரும்புவதாக அவன் மனைவிக்கு அவன் மீது கோபம். பொறுப்பின்றி நடப்பதாகத் திட்டித் தீர்த்தாள். ஆனால் அவன் பிரச்சினையே வேறு. வீட்டில் இருந்து தொலைதூரத்தில் உள்ள தொழிற்சாலையின் வேலை வாகன வசதி இல்லாததால் ஒரு கழுதைமேல் ஏறிக்கொண்டுபோவான். அதைக் கட்டிவைத்தால் சாப்பிட எதுவும் கிடைக்காதே என்று தொழிற்சாலை முன்பு விட்டுவிட்டு உள்ளே சென்றுவிடுவான். மாலை ஆலையில் இரண்டுமுறை சங்கு ஊதியதும் வெளியேறி கழுதை மீதேறி வீடு திரும்புவான். சில நாள்களில் ஆலைக்கதவுகளில் சோதனைகள் நடத்தப்படும்போது, அல்லது தொழிலாளர்கள் பலரும் ஒரே சமயத்தில் முண்டியடித்து வெளியேறும்போது அவன் வெளியில் வரத் தாமதமாகி விடும். ஆனால் இந்த முட்டாள் கழுதையோ இரண்டாவது சங்கு கேட்டதும் பரபரப்பாகி விடும். சிறிது நேரத்துள்குள் எஜமான் வரவில்லை என்றால் அது பொறுத்துக்கொள்ளாது வாலை உயர்த்திச் சுழற்றி ஆட்டியபடி விடுவென்று வீட்டுக்கு வந்துவிடும். உழைத்துக்களைத்தவன் மேலும் களைத்தபடி நடந்து சலித்து வீடு திரும்பும்போது. தாமதமாகி விடும். மனைவி திட்டுவாள். சில சமயம் ஆலைக்கதவு வழி வெளியே வர தாமதம் ஆகக்கூடும் என்ற உண்மை அந்தக்கழுதைக்குப் புரிவதே இல்லை." இந்த முட்டாள் கழுதை இரண்டாவது சங்கு ஊதியதும் வீட்டுக்குப் புறப்பட்டு விடுகிறது" என்று மனைவிக்குச் சிரமப்பட்டு விளக்கினான். மனைவி சொன்னாள்... "ம்.. வீட்டுக்கு எப்போது திரும்பவேண்டும் என்று ஒரு கழுதைக்குக்கூடத் தெரிகிறது. உங்களுக்கு ஏன் அது தெரிவதில்லை?" என்றாள். இவன் என்ன செய்யமுடியும்.

புரிந்து கொள்ளுதலில் உள்ள மந்தத் தன்மையை விளக்க கவியரசு கண்ணதாசன் ஒரு சொற்பொழிவில் சொன்னார். மக்கள் நடமாட்டமுள்ள பகுதியில் ஒருவன் சிறுநீர் கழிக்கத் தொடங்கினான். கூட வந்தவன் பதறிப்போய் "இங்கு சிறுநீர் கழித்தால்பொலிஸ் பிடித்துக்கொண்டு போவார்கள்" என்றான். "சிறுநீர் வீணாய்த்தானே போகிறது... பொலிஸ் பிடித்துக்கொண்டு போனால் போகட்டுமே" என்றானாம்.

சொற்களை மட்டுமல்ல நம் செய்கைகளைக் கூட அவரவர், தகுதிக்கேற்பத்தான் அர்த்தம் செய்து கொள்ளுவார்கள். மகாபாரதத்தில் ஓர் இடம். பாண்டவருக்கு நாடு கேட்டு கண்ண பெருமான் துரியோதனனுடைய அரசவைக்கு வருகிற இடம். கண்ணன் வருகிறபோது தன் அரசவையில் இருக்கும் ஒருவர் கூட எழுந்து மரியாதை செய்யக்கூடாது என்று உத்தரவு போட்டான் தலை கனத்த துரியோதனன். ஆனால் கண்ணன் வரும்போது பலரும் பதறிப்போய் மறந்து எழுந்து நின்றுவிட்டார்கள்.

ஆனால் கர்ணன், துரியோதனனுடைய உயிர் நண்பன்மட்டும், தலையைக் கவிழ்த்தபடி தன் ஆசனத்தில் உட்கார்ந்திருந்தான். இதைப்பார்த்த துரியோதனன் "கர்ணா! நான் எழுந்திருக்கக்கூடாது என்றுதான் சொன்னேன். நீயோ ஒரு படி மேலேபோய் முகத்திலேயே விழிக்காது தலைகுனிந்து அவமதித்து விட்டாய்" என்று மகிழ்சி அடைந்தான்.

ஆனால் அதையே தன் ஓரக் கண்ணால் பார்த்து சிரித்தபடி நடந்த கண்ண பெருமான் "ஹே.. கர்ணா.. நீ மிகவும் நல்லவன். நான் வரும்பொழுது நீ எழுந்தால் உன் நண்பனுக்குப்பிடிக்காது என்று உட்கார்ந்திருக்கிறாய். ஆனால் உன் நல்ல மனத்தை நான் அறிவேன். இப்போதும் உன் கவிழ்ந்த தலை, வணக்கத்தின் அடையாளம் அல்லவா. தலைகுனிந்து என்னைப் பணிந்து வரவேற்றும் உன் பக்தியை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்று மனதுக்குள் நினைத்தான்.

பாருங்கள் .. செயல் ஒன்று.. அர்த்தம் இரண்டு. இதுதான் மனித வாழ்வின் சகல சிக்கல்களுக்குமே காரணம்.

**சுகி. சிவம்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புதிய மாணவத் தலைவர்கள் சின்னஞ் சூட்டி சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர். (ம-15)



# ஆலயங்களின் வருமானத்தில் ஒரு பகுதி ஏழை மக்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும்

## இரசாயனவியல் துறை விரிவுரையாளர் உரை

சுன்னாகம்,நவ.18

மதம் மனிதனுக்கு இன்றியமையாதது. ஆயினும் வறுமையும்,பல்வேறு அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய சூழலில் கோயில்களுக்குப் பல கோடிக் கணக்கான பணம் செலவிடப்படுகிறது. கோயில்களும் வருமானம் பெறும் இடங்களாக மாறி வருகின்றன. இந்த நிலை மாற வேண்டும். ஆலயங்கள் தமது வருமானத்தின் ஒரு பகுதியை ஏழைமக்களின் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் யாழ்.பல்கலைக்கழக இரசாயன வியல்துறை விரிவுரையாளர் கலாநிதி திருமதி எஸ். பிரபாகர்.

யாழ்.எய்ட் நிறுவனத்தால் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அண்மையில் கோப்பாய் மகா வித்தியாலய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றும் போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

உதவிகள் மனிதர்களைச் சோம்பேறிகள் ஆக்கக் கூடாது. எவருக்கு என்னென்ன தேவைகள் உள்ளன எனக் கண்டறிந்து அவர்களுக்கு உதவுவது இன்றியமையாததாகும்.

யாழ். எய்ட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட உதவிகள் மாணவர்களை ஊக்குவிப்பனவாக உள்ளன. பின்தங்கிய பிரதேசத்தில் பிறந்து பிரதேசப் பாடசாலையில் கற்றே இன்று இந்த நிலைக்கு நான் உயர்ந்துள்ளேன்.

இதற்குக் காரணம் எனது மனதில் இருந்த இலட்சிய உணர்வாகும். தரம் 7இல் கற்கும் போது 47ஆவது நிலையில் இருந்தேன். அந்த வருடமே இலட்சியத்துடன் கற்று எல்லாப் பாடங்களிலும் 75 புள்ளிகளைப் பெற்று முதன்மை நிலையை அடைந்தேன். அப்போது உயரிய இலட்சியத்துடன் முயன்றதால் இன்று இந்த நிலைக்கு உயர முடிந்தது. ஒவ்வொரு மாணவனும் தமக்குள் உயரிய இலட்சியத்துடன் செயற்பட்டால் உயர்வை அடையலாம் - என்றார். (ம-38)

# பிள்ளைகளின் விருப்புக்குரிய இடமாக பாடசாலைகள் விளங்க வேண்டும்

## உடுவில் அமெரிக்கன் மிசன் அதிபர் தெரிவிப்பு

சுன்னாகம்,நவ.18

பாடசாலைகள் பிள்ளைகளின் விருப்பத்துக்குரிய இடமாக விளங்க வேண்டும்.

உடுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் செ.முரளிமோகன் இவ்வாறு தெரிவித்தார்.

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் வித்தியாலய அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுப் பேருரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது பிரதேசத்தில் பிள்ளைகள் விரும்பும் இடமாகப் பாடசாலைகள் காணப்படுவது குறைவாகும். இதனால்தான் இடைவிலகலும், பாட அடைவு மட்டக் குறைவும், ஒழுங்கற்ற வரவும், பங்குபற்றுதலில் பின்நிற்றலும் காணப்படுகின்றன. சமூகப் பங்களிப்புக் குறைவதற்கும் இது காரணமாக அமைகின்றது. பாடசாலையும், சமூகமும் இடைத்தாக்கமுறும் போதே நல்ல பாடசாலைக் கல்வி நிலை தோன்றும்.

பரீட்சையில் சித்தியடைவதே கல்வியின் நோக்கம் என்று சமூகம் கருதும் நிலையே இன்றுள்ளது. இது சமூக முன்னேற்றத்துக்கும், சமூக விழுமியப் பேணுகைக்கும் சவாலாக உள்ளது. பரீட்சையில் பிள்ளை சித்தியடைய உதவுபவர் சிறந்த ஆசிரியர் எனவும், அவ்வாறு சித்தியடைய வைக்கும் பாடசாலை சிறந்த பாடசாலை எனவும் கருதும் மனப்போக்குக் காணப்படுகிறது. இதனால் பிரபல பாடசாலைகள் மேலும் வசதி வாய்ப்புக்களுடன் முன்னேறிச்செல்ல பின்தங்கிய பாடசாலைகள் மிகவும் பின்தங்கிச் செல்லும் சமூக அசைவு காணப்படுகிறது. இது ஆரோக்கியமானதல்ல.- என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணியும், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் கலந்து கொண்டனர். (ம-38)

# மாணவர்களின் கற்றல் வளர்ச்சி நிலையைவிட சிறந்த ஒழுக்கமே எதிர்காலத்தை தீர்மானிக்கும்

## யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரதி அதிபர் உரை

யாழ்ப்பாணம், நவ.18

மாணவர்களின் கற்றல் வளர்ச்சியை விட அவர்களுடைய சிறந்த ஒழுக்கங்களே எதிர்காலத்தை தீர்மானிக்கிறது.

எனவே, கற்றலோடு மட்டும் மாணவர்கள் நின்று விடாது நற்பழக்க வழக்கங்களையும் பழகிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரதி அதிபர் ஜி.நடராஜா தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ''கல்லூரி மாணவர்களின் ஒழுக்கம் விளையாட்டு'' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

மாணவர்களிடையே விளையாட்டுக்கள், அறிவுசார் விடயங்கள், பரிசளிப்பு விழாக்கள் என்பன இடம்பெறும் போது அவை சிறந்த நற்பண்புகளை உருவாக்கும்.

எனவே, மாணவர்கள் தமது கற்றல் எனும் வட்டத்துக்குள் மட்டும் நின்று விடாது ஏனைய துறைசார் விடையங்களுக்குள்ளும் தமது திறன்களை விருத்தியடையச் செய்ய வேண்டும்.

அத்துடன் பெரியோர்களின் அறிவுரைகளைப் பின்பற்றி நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். - என்றார். (ம-302)

# வலய மட்ட சித்திரப் போட்டி முடிவுகள்

யாழ்.வலய மட்டத்தில் மாணவரிடையே சித்திரப் பாட ஆர்வத்தை மேம்படுத்தும் வகையில் வலய மட்டத்தில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

பிரிவு I

கருத்து வெளிப்பாடு- தி.நிருபன் (யாழ்.இந்துக் கல்லூரி), க.புவியந்தன் (யாழ். மத்திய கல்லூரி), உ.ராம்கி (அச்சுவேலி மத்திய கல்லூரி).

ஆக்கஅலங்காரம்-ம.யகிலா (அச்சுவேலி மத்திய கல்லூரி), மு.நியூசிகா (கனகரத்தினம் ம.வி), றொ.மேரி றொசாந்தினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

பொருட் கூட்ட வரைதல்- ர.முகமட்யசார் (வைத்தீஸ்வராக் கல்லூரி), க.சிவானுஜன் (யாழ்.இந்துக் கல்லூரி), செ.லவோஜன் (வாதரவத்தை விக்கினேஸ்வரா).

பிரிவுII

கருத்து வெளிப்பாடு- அ.தனேந்திரன் (யாழ்.மத்திய கல்லூரி), குமதுர்சிகா (ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி), வே.லக்ஷீ (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

ஆக்க அலங்காரம்- ச.சஞ்சீவன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), வ.மகிசாளினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), க.வளர்மதி (ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி).

பொருட் கூட்ட வரைதல்- செ.திலக்ஷன் (யாழ்.மத்திய கல்லூரி), கெ.றொசான் (யாழ். பெரியபுலம் ம.வி.), தி.பார்த்தீபன் (உரும்பிராய் இந்துக் கல்லூரி). (ம)

# பண்ணிசை வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ.18

நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய சிங்கார வேலன் மணி மண்டபத்தில் சிவஸ்ரீ ந.சிவசுப்பிரமணியக் குருக்கள் அறக்கொடை நிலைய ஆதரவுடன் அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் நடத்தி வந்த தேவாரப் பண்ணிசை பயிற்சி வகுப்புகள் விடுமுறையின் பின் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பமாகி உள்ளது.

வாராந்த செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மாலை 5 மணி தொடக்கம் இந்த வகுப்புகள் இடம்பெறும். ஆண், பெண் இருபாலரும் பங்குபற்றலாம் என்று கூறப்பட்டது. (ம-16)

# கல்விமாணிக் கற்றைநெறி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், நவ.18

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி மாணிக் கற்கை நெறியை யாழ்.மத்திய கல்லூரியில் தொடரும் முதலாம் இரண்டாம் வருட மாணவர்களுக்கான வகுப்புகள் அனைத்தும் நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் விரிவுரையாளர்களுக்கான விசேட கூட்டம் ஒன்றும் இடம்பெறும் என வும் பதில் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(வ-14)

# கைலாசபதியின் நோக்கில் ஆறுமுகநாவலர்

## இன்று நாவலர் தினம்

குணம், பண்பு என்ற சொற்கள் நம்மிடையே பெரிதும் வழங்கி வருகின்றன. ''அவன் நல்ல குணமான பிள்ளை'' எனக் கிராமத்தில் பேசுவர். திருக்குறளில் பண்புடைமை என்று ஒரு அதிகாரத்துக்குப் பெயர் உண்டு. பெரியோர், சான்றோர் எனும் சிறப்புடையவர்கள், அவர்களது உயர் நலன்களைத் தவறவிடாது கடைப்பிடித்துக் கொண்டே எல்லார் இயல்பையும் அறிந்து, அவர்களுடன் முரண்படாமல் ஒழுகுதல் பண்புடமை என்கிறார் பரிமேலழகர். இதற்குக் கலித்தொகை என்ற சங்க நூலில் ஒரு தொடரை எடுத்துக் காட்டுகிறார்.

*'பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்'*

உலக நடைமுறையைக் கவனித்து, அதாவது மேலோர் நடக்கும் பாடு (வழி, நெறி) அறிந்து அதன் வழிச்செல்லல் பண்புடைமை.

பொ.கைலாசபதி மனிதனது புத்தியின் படிகளை வெகு நுட்பமாக வகுத்துள்ளார். நூல்கள் கூறும் தர்மம் முதல் மோட்சம் வரை உள்ள உறுதிப் பொருள்கள் நான்குள் முதல் மூன்றையும் விரித்துத் தமிழ் வேதம் செய்த வள்ளுவர் உயர் சிந்தனையாளருக்கு உரிய பிரிவுகளைச் சொன்னார். தருமத்துக்கு அங்கமாக அதற்குக் கீழே ஒன்பது தளங்கள் உள்ளன எனக் கண்டார். இப்படிகளுள் கீழே கிடப்பது கேவலக்கிடை. அப்பர் சொன்னாரே, ''புழுவுக்கும் குணம் நான்கு எனக்கும் அதே''- உண்ணல், உறங்கல், இனப்பெருக்கல், அச்சம். அந்த நிலையில் வாழ்பவர்களே இன்று உலகில் 99.9 வீத மக்களும். ''மாவும் மாக்களும்'' என்று தொல்காப்பியர் குறிப்பிடுவார்.

இப் படிமுறையில் ஒன்பதாம் தளம் பண்பாடு. இதில் நான்கு வகுப்பு (சாதி) உண்டு. இது ஞானச்சாதி; உலகில் நாம் பேசும் பிறப்பால் அமைந்த சாதி அல்ல. இதில் முதல்வகுப்பினர் தாயுமானவர், இரண்டாம் வகுப்பினர் ஆறுமுகநாவலர், நான்காம் வகுப்பினர் ஆழ்வார்கள், அநுமன், கருடாழ்வார் போன்றோர்.

இத்தளத்தின் சிறப்பு மேலே சொல்லப்பட்டது. இந்த நாலு வகுப்பின் இயல்புகளை நோக்குவோம்.

முதல் வகுப்பார் மேலே ஐந்து தளத்தைத் தாண்டி நோக்குவர். இதன்படி தாயுமானவர் மோட்சம் வரை எட்டிப் பார்ப்பார். மோட்சம்- வீடு, விடுதலை பெறும் அவா அவரை விட வேறு யாருக்கு அதிகம்? நாயக்க மன்னரின் சம்பிரதி (பொக்கிஷக் கணக்காளர்) பதவியிலிருந்தும் மௌன குருமடத்துத் தலைவரின் அருள் நோக்குக்குப் பாத்திரமானார். அரசியின் பிழையான பார்வையை உணர்ந்து இரவோடு இரவாக இடம் பெயர்ந்தார். தன் உடல் அபிமானம் கூட இல்லாமல் சருகுகள் மூடிய நிலையில் நெருப்பு மூண்டபோதும், தன் நியதியை உணர்ந்து சமாதியுற்றார். தாயுமானவர் பாடல் முழுவதையும் ஆறுமுக நாவலர் அச்சில் பதிப்பித்தார். ஒத்த தளத்தில் நின்றவர்கள் ஆதலால் அவரை இவர் சுவைத்தார்.



நாவலர் இரண்டாம் வகுப்பினர். அவர் மேலே ஏழுதளம் எட்டி நோக்குவார். எனவே ஞானம் வரை நோக்கு தெளிவாகத் தெரியும். அதேபோல கீழேயும் ஏழுதளம் இறங்குவார். அவர் அடியில் உள்ள கெவலக்கிடை, சீவன நோக்கு என்ற தளங்களுக்கு இறங்க மாட்டார். இதுவே நாவலர் பெருமை. உத்தியோகம், வயிற்று எண்ணம் இல்லாதவர் என்பதை அவர் உறவினர் உத்தியோகத்தராயிருந்தும், அரச உத்தியோகத்தை ஏற்க மறுத்தேன், ஆசிரிய பதவியையும் துறந்தேன்,மணம் செய்ய மறுத்தேன் என எழுதியதிலிருந்து அறியலாம். அவர் மூன்றாம் தளத்துக்கு இறங்கியதாலேயே, பொன். இராமநாதன் அத்தளத்தில் கால் வைப்பாராதலால் அவரை சட்டசபை உறுப்பினர் பதவிக்குத் தக்கவர் எனக் கண்டு ஆதரித்தார்.

நாவலர் ஆறாம் தளத்தில் நின்ற சிவஞான முனிவரைச் சுவைத்தார். அவரது சிவஞான போதச் சிற்றுரையைத் தம் அச்சகத்தின் மூலம் வெளியிட்டார். திருவாவடுதுறை மகாசன்னிதானத்திடம் மாபாடியத்தைப் பெற்றுப் படித்துப் பார்த்தார். அதில் சாத்திர தோத்திர நூல்களுக்கு மாறாக சைவம் முதல் பாசுபதம், மாவிரதம், காபாலம் என வரும் அறுசமயங்களை அகப்புறச் சமயங்கள் எனத் தமது 24 படி சமயப் பிரிவில் 13 முதல் 18 ஆகக் கீழ் இறக்கம் செய்ததை அவதானித்தார். நாவலருக்கும் சிவஞான முனிவருக்கும் ஒரு சிறுகுறை உண்டு. இருவரும் சாத்திர நூல்கள், ஆகமங்கள் என்றால், தலையில் வைத்துப் போற்றுவர். வாய்முறையால் வரும்போது மறதியும், எழுத்து உருவம் பெறும் போது எழுதியவர் தவறு போன்றவற்றையும் நினைக்கமாட்டார். பொ.கைலாசபதி கருத்தில் அவற்றைக் கொளார். திருக்குறள் பதிப்பித்த போது, பல ஏடுகளை வைத்துப் பாடபேதம் நோக்கி, மிக நுணுகி ஆராய்ந்தவர் நாவலர். ஆனால் ஆகமங்களில் குறை வந்து நுழைந்திருக்கலாம் என நினைத்தே பார்க்கவில்லை வேதம்.

*''ஆற்றல் அழியும் என்று அந்தணர்கள் நான்மறையை ஏட்டின் புறத்து எழுதார்''*

அப்படிய நால்வர் வாக்கையும் தமிழ்வேதமாகப் போற்றி முன்னோர் பேணினர். ஆனல் ஆகமங்கள் நிலை அப்படி அல்ல; 1916 இல் திருச்சியில் பதிப்பித்த காமிகத்தையும், தென்னிந்திய அர்ச்சகர் அசோசியேஷன் பதிப்பித்ததை (1975- 1988) நோக்கினால் வேறுபாடு தெரியும். காசுமீர, நேபாள ஆகமப்பிரதிகள் அச்சேறிய பின்னும், புதுச்சேரி இந்தோ- பிரஞ்சு நிறுவனம், சமஸ்கிருத- பிரெஞ்சு மொழிகளில் பற்பல ஆகமங்களை வெளியிட்ட பின்னும் ஆகமக் கல்வி எவ்வளவோ தூரம் வளர்ந்துவிட்டது. அதனால் நாம் நாவலர் கருத்துகளில் பிழை பிடிக்காது, நம் சமய நூல்களை மேலும் தொடர்ந்து ஆய்வு செய்து, சமய அறிவை வளர்ப்போமாக. ஆகம பூஷணங்களும், பல்கலைக்கழகங்களும் இதற்கு ஆயத்தமா?

**ஆ. சபாரத்தினம்**
இளைப்பாறிய அதிபர்

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் நவரத்தினம்மா



நெடுந்தீவு மேற்கு, பெரிய துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் நவரத்தினம்மா 13.11.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னத்தங்கத்தின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதர் -தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் , காலஞ்சென்ற கந்தையாவின் மைத்துனியும் காலஞ்சென்ற கனகம்மாவின் சகலியும் மற்றும் துரைச்சாமி , காலஞ்சென்றவர்களான சௌந்தரம்மா, தையலம்மை,சிவகாமிப்பிள்ளை,கணவதிப்பிள்ளை மற்றும் சடேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, சண்முகம், குமாரசாமி மற்றும் சிவக்கொழுந்து,காலஞ்சென்ற செல்வரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற கனகசபை (பிரான்ஸ்) மற்றும் வைத்தியநாதன் (வவுனியா), தில்லைநாயகி (ஜேர்மனி),பராசக்தி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற திருநாவுக்கரசு(கனடா) மற்றும் கோவிந்தசாமி (கனடா), விவேகானந்தன்(கனடா), சிவஞானவதி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மங்கையர்க்கரசி (லண்டன்), திலகவதி (வவுனியா), வைத்திலிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற கனகராசா (யாழ்ப்பாணம்) மற்றும் யசோரதி(கனடா), கலாராணி(கனடா), கந்தவேள் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அன்பரசி (லண்டன்), காலஞ்சென்ற செந்தில்ரவி (லண்டன்) மற்றும் உதயகுமாரி- அம்பிகாநிதி (வவுனியா) ஜெயக்குமாரி -நக்கீரன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற வசந்தகுமாரி (வவுனியா) மற்றும் கருணாகரன் (வவுனியா), சாந்தகுமாரி- சிவகுமார் (பிரான்ஸ்), சசிக்குமாரி (வவுனியா), பரமேஸ்வரன் (இந்தியா), திலககுமாரி (வவுனியா), சுந்தரமூர்த்தி (இந்தியா), சிவரூபன் (ஜேர்மனி), சுமதி (இந்தியா), சதீஸ் (பிரான்ஸ்), செல்வராணி(இந்தியா), விஜயகர்ணன்(பிரான்ஸ்), வசந்தராணி(இந்தியா), காலஞ்சென்ற கிருபாரத்தினம் (யாழ்ப்பாணம்) மற்றும் சிவகுமார் - கமலேஸ்வரி (கொழும்பு), விஜயராணி - இராசலிங்கம் (யாழ்ப்பாணம்), ஜெயக்குமார் - திலகவேணி (கனடா), கிசோக்,ஆரணி (கனடா), மீனாட்சி,பாதினி (கனடா), திருக்குமரன், பிரணவன் (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துர்பின், அஜன்,லேயோன் (லண்டன்), காருண்யன்,சிந்துஜா,சுஜீபன், மனுஜா,தனுஜா(வவுனியா), அமிழ்தினி,செந்தூரன், சுமுகன் (யாழ்ப்பாணம்), நிறோசன்,திலீபன் பிரவீன் ஆகாஷ் (வவுனியா), சுகந்தினி,சுகந்தன்,சுலக்சன்,(பிரான்ஸ்), அபிஷன், சபேசன், யாகவன், துவர்ணிகா, ஆரூரன் (வவுனியா), கிருத்திகா, குருவரன்(வவுனியா), டானியல், சாமினி (இந்தியா), கஜபாபு, யாழினி (இந்தியா), கிரோஜினி, வினோத், கீர்த்திகா (இந்தியா), ஐஸ்வர்யா, பிரதாப்(கொழும்பு), மேகலன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.11.2011) சனிக்கிழமை மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை 1810 Albion Road (North west comer of Albion high way 27)என்னும் முகவரியில் அமைந்துள்ள glendalcமண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 20.11.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கிரியைகளின் பின்னர் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**கா. இராசலிங்கம்** (M.P.C.S, Delft) ,
*32/ 11, ஓட்டுமட வீதி,*
*வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்.*

(10534) (2-8-6-7)

தொடர்பு:


| | | |
|---|---|---|
| வை. தில்லைநாயகி | - ஜேர்மனி | 494719269144 |
| சு. கோவிந்தசாமி | - கனடா | 14166706260 |
| சு. விவேகானந்தன் | - கனடா | 14168984846 |
| க. சிவஞானவதி | - இந்தியா | 919842858825 |

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்



## திருமதி பரஞ்சோதி தேவகுஞ்சரி



காரைநகர், களபூமி, சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் யாழ்.ஆனைப் பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதி தேவகுஞ்சரி கடந்த 16.11.2011 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி - செந்தில்நாயகி தம்பதியரின் அன்பு மகளும், பரஞ்சோதியின் (வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து -சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், செந்தூரன், சிவதர்ஷனி(சிங்கப்பூர்), சாளினி ஆகியோரின் அன்புத் தாயும், காண்டீபனின் (பொறியிலொளர்-சிங்கப்பூர்) அன்பு மாமியும், காலஞ் சென்ற சிதம்பரநாதன் மற்றும் தனலக்சுமி தம்பதியரின் சம்பந்தியும், அருணகிரிநாதர்(ASK அன் கொம்பனி-கம்பளை), இராஜகுமாரி, கமலகண்ணன் (கண்ணன் ஸ்ரோர்ஸ்-கம்பளை), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கருணாநிதி (சூரியன் களஞ்சியம்), சிவசோதி(கந்தன் களஞ்சியம்-கிளிநொச்சி), கற்பகநாதன்(சிறிமாதவன்-யாழ்ப்பாணம்), கணேசன்(ராசு களஞ்சியம்-யாழ்ப்பாணம்), பாக்கியவதி, தவமணி, கோகிலாவதி, சிவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் யோகேஸ்வரி, பரமேஸ்வரி, சரோஜினிதேவி, இராஜேஸ்வரி, பாலசிங்கம், சிவானந்தம், இராஜேந்திரம்(குகன் ஸ்ரோர்ஸ்-பண்டாரவளை), சிவபாதம், சொர்னாதேவி, சிவயோகன் (கம்பளை), சுரேந்திரன்(கிருஷ்ணா ஜுவலரி-யாழ்), நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் (20.11.2011) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*354/7, பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

# கல்வியுடன் விளையாட்டிலும் சாதனை: அதுவே சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பௌத்க வளங்களை சீர்படுத்துவதில் அதிபர் சோ.சோமசேகரம் சண்டிலிப்பாய் கிராம மக்களுடன் ஒன்றிணைந்து அளப்பரிய சேவைகளை வழங்கினார். அத்துடன் சோ. சோமசேகரம் பாடசாலை அதிபராக இருந்த காலத்தில் ஆசிரியர் நா. கணபதிப்பிள்ளை பாடசாலை கீதத்தை இயற்றினார். அதனைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டு பாடசாலையின் அதிபராக ச.சிவனேஸ் வரன் பொறுப்பேற்றார்.

சண்டிலிப்பாய் பிரதேச மக்களின் ஒத்துழைப்பாலும் பாடசாலையின் அதிபர்களின் முயற்சியினாலும் பாடசாலை பௌதிக வளங்களாலும், ஏனைய வளங்களாலும் வளர்ச்சி அடையத் தொடங்கியது ச.சிவநேசன் பாடசாலை அதிபராக் கடமையாற்றியபோது கல்வி வளர்ச்சி, இணை பாடவிதான செயற் பாடுகள் போன்றவற்றில் மாணவர்கள் பல சாதனைகளைப் படைத்தனர்.

அத்துடன் க.பொ.த உயர் தர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு தரம் 1 - சி பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்ட மையும் குறிப்பிடத்தக்கது.

1999 ஆம் ஆண்டு பாடசாலை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாக பெயர் மாற்றம் பெற்றமை குறிப்பிடத் தக்கது.




1993 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 9 மாணவர்கள் சித்தியடைந்து பிரதேச மட்டத்தில் சிறந்த பாடசாலையாக புத்துயிர் பெறுவதற்கு ஏதுவாக அமைந்தது.

1994 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 28 மாணவர்கள் உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றமையால் 1995 ஆம் ஆண்டு க. பொ. த உயர்தர வகுப்புகள் ஆரம்பித்து வைப்பதற்கு ஊன்றுகோலாக அமைந்தது. 1995 ஆம் ஆண்டு 1264 மாணவர்களுடன் இயங்கிய இந்தப் பாட சாலை இடப் பெயர்வு காரணமாக கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் இயங்கி மீண்டும் 1996 ஆம் ஆண்டு 40 மாணவர்களுடன் தனது சொந்த இடத்தில் செயற்படத் தொடங்கியது. 1997ஆம் ஆண்டு முதன் முதலாக க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய 7 மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதிக்கான அடிப்படைத் தகுதிகளைப் பெற்று சித்தியடைந்தமை கல்லூரியின் வரலாற்றின் பெருமை மிக்க வெற்றியாகக் கொள்ளப்பட்டது.

2000 ஆம் ஆண்டு தென்மராட்சிப் பகுதி மக்கள் இடப் பெயர்வை சந்தித்தபோது 500 வரையான மாணவர்களை தனது பாடசாலை மாணவர்களுடன் உள்வாங்கி கற்றல் செயற்பாடுகளை வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கல்லூரியின் இணைபாடவிதான செயற்பாடுகளும் ஆண்டுகள் ரீதியாக பல சாதனைகளைப் படைத்து வந்தன.

1993 ஆம் ஆண்டு பாடசாலையின் வலைப்பந்தாட்ட அணியானது கோட்ட மட்ட சம்பியனாகி மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றமை ஏனைய கிராமிய பாடசாலைகளுக்கிடையே ஓர் புத்துணர்வை ஏற்படுத்தும் நிகழ்வாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு மாகாண மட்டப் போட்டியில் கலந்து கொண்டு பங்கு பற்றிய வலைப் பந்தாட்ட அணி வெற்றிபெற்றுக் கொண்டமை இன்னொரு நிகழ்வாகும். 2002 ஆம் ஆண்டு மாகாணப் போட்டியில் 17 வயதுப் பிரிவு, 19 வயதுப்பிரிவு வலைப் பந்தாட்ட அணி இரண்டும் மாகாண சம்பியனைப் பெற்று வடக்கு- கிழக்கு மாகாணங்களில் எந்தவொரு பாடசாலையும் நிலைநாட்டாத சாதனையைப்பெற்றது.

அதனைத் தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு வலைப் பந்தாட்ட அணி மாகாண சம்பியனைப் பெற்றுக்கொண்டது. இங்கிலாந்து சென்று வந்த தாயக வலைப் பந்தாட்ட அணியுடன் இந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் பங்கு பற்றியமையும் குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் உதை பந்தாட்ட அணியானது 1993 ஆம் ஆண்டு முதன் முதலாக உருவாக்கப்பட்டு மாவட்ட மட்டப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்றது.

அதனைப்போல் 1994 ஆம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும், 1999 ஆம் ஆண்டு வலய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும், 2000ஆம் ஆண்டு மைலோ கிண்ணப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் 2001, 2002, 2003 ஆம் ஆண்டுகளில் கோட்டமட்டப் போட்டியில் பங்குபற்றி வலய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

கரப்பந்தாட்ட அணியானது 1999 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு கோட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது அதனைத் தொடர்ந்து 2000, 2001, 2002 ஆம் ஆண்டுகளில் கோட்ட மட்டச் சம்பியனாகி மாகாண மட்டத் தில் அரையிறுதிவரை முன்னேறியமை குறிப்பிடத் தக்கது.

**சோபனா**

பாடசாலையின் மெய்வன்மைப் போட்டியின் சாதனையாக 1999 ஆம் ஆண்டு உயரம் பாய்தல் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தை 15 வயதுப் பிரிவு மாணவன் பெற்றுகொண்டதுடன் 2000 ஆம் ஆண்டு 17 வயதுப் பிரிவைச் சேர்ந்த மாணவன் உயரம் பாய்தல் போட்டியில் மாவட்ட மட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மென்வன்மைப் போட்டிகள் மட்டுமல்லாது ஏனைய துறைகளிலும் இந்தப் பாடசாலை மாணவர்கள் பெரும் சாதனைகளைப் படைத்துவந்தனர்.

*(தொடரும்)*


## ஓராண்டு நினைவு நாள்



*திதி: 18.11.2011*

மலர்வு: 06.02.1996
உதிர்வு: 29.11.2010

துக்கம் தாழவில்லை
துயரம் நீங்கவில்லை
ஓயவில்லை நினைவுகள்
ஓடிவிட்டது ஓராண்டு
ஆழிபோல் உன் நினைவு
அலைபோல் அடிக்கிறது
ஓடிவிட்டதே ஓராண்டு

**செல்வராஜா மதுபாலீஸ்வரன் (மது)**

*(9 ஆம் தர மாணவன் , யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி -புத்தூர்)*

(10373)(1,6,25)

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அம்மா, அப்பா, தங்கை, தம்பி, உற்றார், உறவினர், ஆசிரியர்கள், நண்பர்கள்.

ஏரந்தனை,
புத்தூர் வடக்கு.

## வேலணைப் பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான கேள்வி திறத்தல் பிற்போடல்

11.11.2011 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்டவேலணை பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான கேள்வியறிவித்தலில் கேள்வி திறத்தல் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு பின்வருமாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

**கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :**
2011.11.21ஆம் திகதி திங்கட்கிழமை
நண்பகல் 12 மணி வரை

**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:**
2011.11.22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
நண்பகல் 12 மணிவரை

**கேள்வி திறக்கும் திகதி:**
2011.11.22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
பி.ப.01.30 மணி

வேலணை பிரதேச சபை,
வேலணை. 2011.11.16

(சி-6019)(1,6,7)

சி.சிவராசா - தவிசாளர்
வேலணை பிரதேச சபை

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1923.01.05
மறைவு 2009.12.09



அமரர்
**பொன்னுச்சாமி இராசம்மா**

*திதி: 18.11.2011*

உன் அன்பில் நனைந்தோம் அருகிருந்தோம்
நீயில்லை யெனும் போது
நினைவாலே நெஞ்சுருகி
நித்தம் நின்பேர் சொல்லி
ஆறும் எம் மனது

உம் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினரும்,
உறவினரும்.

37, 2ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை.

(10491)(3,6,7)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் குணரட்ணம் அல்பேட் குலசிங்கம்



மண்ணில்
01.11.1926
விண்ணில்
18.11.2010

"மரணம் வாழ்வின் முடிவல்ல,
நித்திய வாழ்வின் ஆரம்பமே"

" வாழ்வில்
நேசித்தவர்களே,
மரணத்திலும்
மறவாதிருங்கள்"

[10360][3,6,25]

58, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

# பிரபல நிறுவனங்களின் வெற்றிடங்களை அறிய ஒருங்கிணைந்த இணையம் அறிமுகம்

கொழும்பு, நவ.18

இலங்கையில் இயங்கும் பிரபல நிறுவனங்களில் ஏற்படும் வெற்றிடங்களை ஒருங்கிணைத்த இணையத்தளமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதர் காரியாலயத்தின் அனுசரணை யுடன் இலங்கை தேசிய வர்த்தகத் திணைக்களம் ஆரம்பித்துள்ள இந்த இணையத் தளத்தின் முகவரி www. nccsl. lk என்பதாகும். இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதர் காரியாலயத்தில் ஆரம் பிக்கப்பட்டுள்ள இந்த இணையத்தளத்துக்கு இலங்கையிலுள்ள பிரபல நிறுவனங்களில் அவ்வப்போது ஏற்ப டும் வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் கிடைக்குமென்ற நம்பிக்கையுள்ளது என தூதரக வட்டா ரங்கள் தெரிவித்தன.

யுத்தம் முடிவடைந்தபின் இலங்கையில் துரித பொருளாதார அபிவிருத்தி ஏற் பட்டுள்ளது எனவும், அதற்கேற்ப தொழில் வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன எனவும் பிரிட்டன் தூதர் கிரீஸ் நோனிஸ் கருத்துத் தெரிவித்தார். (வ)

## புத்தளத்தில் டெங்கு அபாயம்

அண்மையில் பெய்த மழையை அடுத்து, புத்தளம் நகரில் டெங்குத் தாக்கம் அதிகரித்துள்ளது என மாவட்ட சுகாதார காரியாலயத்தில் சுகாதார பரிசோதகர் எஸ்.சுரேஷ் தெரிவித்தார். நகரின் மையப்பகுதியான பொட்டுக்குளம் என்னுமிடத்தில் டெங்குநோயால் பீடிக்கப்பட்ட மூவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்றும், இன்னும் சிலருக்கு டெங்குத் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். டெங்குநோய் பரவுவதைக் கட்டுப்படுத்த மாவட்ட சுகாதார காரியாலயம் தீவிர நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது என்றும் அவர் கூறினார். (வ)

# மாலைதீவுக்கு இலங்கை வழங்கிய நினைவுச் சின்னம் சேதப்படுத்தப்பட்டது

இலங்கை அரசால் வடிவமைக்கப்பட்டு, மாலைதீவுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட சார்க் நினைவுச்சின்னம், மசகு எண்ணெய் ஊற்றப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய சின்னத்தை குறிக்கும் வகையில் மேற்படி சிங்கச் சிலை வடிவமைக்கப்பட்டிருந்தது.

பாகிஸ்தானிய நினைவுச்சின்னமொன்று உடைக்கப்பட்டு எரிக்கப்பட்டு, திருடப்பட்டதற்கு மறுநாள் இந்த சிங்கச் சிலை சேதமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை உருவ வழிபாட்டு கலாசாரம் என்று எதிர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இந்தச்சிலைகளை சார்க் மாநாட்டுக்காக மாலைதீவுக்கு இறக்குமதி செய்ய அனுமதித்தமைக்காக மாலைதீவு சுங்கத் திணைக்களத்துக்கு எதிராக மலைதீவு முற்போக்குக் கட்சியின் சபை அங்கத்தவர் அஹமட் ரஹீம் சலீம் நேற்றுமுன்தினம் வழக்குத் தொடுத்துள்ளார்.

மாலைதீவு முற்போக்கு கட்சி முன்னாள் ஜனாதிபதி மஹ்மூன் அப்துல் கயூமினால் ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

மாலைதீவில் சிலைகளை இறக்குமதி செய்வது தடுக்கப்பட்டுள்ளது எனவும் இந்தச் சிலைகளை நாட்டுக்குக் கொண்டு வர அனுமதித்தமைக்கு சுங்கத் திணைக்களம் பொறுப்பேற்கவேண்டும் என்றும் அஹமட் சலீம் கூறியுள்ளார். இந்தச்சிலைகளை பகிரங்கமாக காட்சிப்படுத்தியமை மற்றொரு குற்றமாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய பொருள்களை பகிரங்கமாக வைத்திருப்பதை இஸ்லாமிய மதத்தை விரும்பும் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.



பாராட்டு விழாவும், மலர் வெளியீடும்
தேமதுரம் இறுவட்டு வெளியீடும்

இடம்: நல்லூர் இளங்கலைஞர் மண்டபம்
காலம்: 20.11.2011 ஞாயிறு காலை 9 மணி
தலைமை: செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம்
பிரதம விருந்தினர்: பேராசிரியர் கலாநிதி சு.மோகனதாஸ் (முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம் அங்கத்தவர் - பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு)
ஆசியுரைகள்: ★ ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ★ கலாநிதி நி.மரியசேவியர் அடிகள்

வாழ்த்துரைகள்:
★சங்கீத வித்துவான் திரு.ஏ.கே.கருணாகரன்
★சங்கீதபூஷணம் திரு.எஸ்.கணபதிப்பிள்ளை
★சங்கீதபூஷணம் திரு.வி.கே.நடராஜா
★கலைஞர் திரு.எஸ்.ரி. அரசு ★கவிஞர் திரு.சோ.பத்மநாதன்

மங்கள இசை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் ச.பாலசிங்கம் அவர்களின் முதன்மை மாணவர்களில் ஒருவரான கலாபூஷணம் சி.நாகராஜா அவர்களின் இசைக் கச்சேரியும் இடம்பெறும்.

கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(10498)(1,6,7) விழாக் குழுவினர் (மாணவர்கள்)



கொழும்பு யூனியன் பிளேஸில் அமைந்துள்ள சலாக்கா கட்டடத்திற்கு முன்பாகவுள்ள பழைய கட்டடமொன்றின் கூரை நேற்று இடிந்து பிரதான வீதியில் வீழ்ந்த அதனை மாநகர சபை ஊழியர்கள் அகற்றுகின்றனர்.

# இரட்டைக் குடியுரிமையுடையவர்களுக்கு இனி விசேட அடையாள அட்டை

இரட்டைக் குடியுரிமையுடைய இலங்கையர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கைப் பிரஜையாக இருந்து பின்னர் இரட்டைக் குடியுரிமை பெற்றுக்கொண்டவர்களுக்கு இந்த விசேட அடையாள அட்டை வழங்கப்பட உள்ளன.

இலங்கை ஆள் பதிவுத் திணைக்களத்தினால் விசேட அடையாள அட்டை விநியோகம் செய்யப்பட உள்ளது. அடுத்த மாதம் முதல் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கிராம சேவகர் அல்லது பிரதேச செயலாளர்களின் ஊடாக தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க முடியும்.

இரட்டைக் குடியுரிமை பெற்றுக்கொண்டவர்களுக்கு அடையாள அட்டை விநியோகம் செய்யும் நோக்கில் தனியான அலகு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இரட்டைக் குடியுரிமை உடையவர்களுக்கு இலங்கைப் பிரஜைகள் என்பதனை உறுதி செய்வதற்கான எந்தவொரு ஆவணமும் வழங்கப்படவில்லை எனவும் முதல் தடவையாக இவ்வாறு விசேட அடை யாள அட்டைகள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையில் பாலியல் தொழிலில் 5,000 சிறுவர்கள்

2010ஆம் ஆண்டில் இலங்கையில் பாலியல் தொழிலுக்காக சிறுவர் களை விற்பனை செய்யும் சம்பவங்கள் 5 ஆயிரத்தையும் தாண்டியுள்ளன என ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

சுற்றுலாப் பிரதேசங்களில் பாலியல் மற்றும் ஓரினச் சேர்க்கை ஆகிய வற்றுக்காக சிறுவர்களைப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது என ஐ.நா. நிதியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் சுற்றுலாத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்யும் பணிகளை, அரசு ஆரம்பித்ததில் இருந்து சிறுவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளதாக ஐ.நா. சிறுவர் நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

2 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்
செந்தூரன் கவிதா தம்பதியரின் செல்வப் புதல்வி
ஜதுஷா



தனது இரண்டாவது பிறந்தநாளை 18.11.2011 வெள்ளிக்கிழமை கனடாவில் உள்ள அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மாமாமார், மாமிமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர்கள் ஆகியோர் மீனாட்சி அம்மன் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க என்று வாழ்த்துகின்றனர்.
168, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (10482)(5,6,25)
ச.யோகநாதன் (அம்மப்பா),



பாராட்டி வாழ்த்துகின்றோம்
கொழும்பு BMICH மண்டபத்தில் 07.11.2011 அன்று நடைபெற்ற 8 ஆவது பட்டமளிப்பு விழாவில் உயர்தேசிய ஆங்கில டிப்ளோமா (HNDE) பட்டம் பெற்ற
அருமைநாதன் பாலேந்திரா
அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
சியான் ரேடர்ஸ்
பிரதான வீதி, அச்சுவேலி.
(10553)(1,6,7)

### இந்திய அரசின் தமிழின விரோதப்போக்கை உறுதிப்படுத்திய

# நோர்வேயின் அறிக்கை குறித்து இந்திய அரசு அனைத்துலகுக்கு உரிய விளக்கம் அளிக்குக!

## விடுதலை சிறுத்தைகள் வலியுறுத்தல்

- சென்னை, நவ. 18

இந்திய அரசின் தமிழின விரோதப் போக்கை உறுதிப்படுத்தியுள்ள நோர்வே அரசின் அறிக்கை தொடர்பாக, இந்திய அரசு அனைத்துலக சமூகத்துக்கு உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வலியுறுத்தியுள்ளது.


விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநிலச் செயற்குழு மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற விடுதலைச் சிறுத்தைகளுக்கு பாராட்டு விழா ஆகியன சென்னை பெரியார் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மாநில செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள-பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களுக்குமிடையில் சமாதானப் பேச்சு மேற்கொண்ட நோர்வே அரசு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், ஈழச் சிக்கலில் அரசியல் ரீதியான தீர்வு காண்பதற்கு இந்திய அரசு ஆர்வம் காட்டவில்லை என்பதையும், விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க வேண்டும் என்பதிலேயே முனைப்பாகச் செயற்பட்டது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது.

தமிழ் இனத்திற்கும், ஈழத்துக்கும் எதிராகத் தொடர்ந்து செயற்பட்டுவரும் இந்திய அரசின் போக்கை விடுதலைச் சிறுத்தைகள் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

அத்துடன் இந்திய அரசின் தமிழின விரோதப் போக்கை உறுதிப்படுத்தியுள்ள நோர்வே அரசின் அறிக்கை தொடர்பாக, இந்திய அரசு அனைத்துலக சமூகத்திற்கு உரிய விளக்கம் அளித்திட வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகளின்



இம்மாநிலச் செயற்குழு வலியுறுத்துகிறது.

இலங்கைப் பெரும்பான்மையினரால் தமிழக மீனவர்கள் கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக தொடர்ந்து தாக்கப்படுவதும் படுகொலை செய்யப்படுவதும் நீடித்து வருகிறது. அண்மையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இலங்கை அரசின் ஜனாதிபதி ராஜபக்ஷவும் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக கலந்துரையாடிய பின்னரும் இலங்கை படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கைக் கடற்படையினர் தொடர்ச்சியான காட்டுமிராண்டித்தனத்தை விடுதலைச் சிறுத்தைகள் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

அத்துடன் தமிழக மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எத்தகைய முனைப்பும் காட்டாத இந்திய மற்றும் தமிழக அரசுகளின் போக்குகளை விடுதலைச் சிறுத்தைகள் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் இது தொடர்பாக இந்தியப் பிரதமரைச் சந்தித்து முறையிடுவதற்கு தமிழக அரசு அனைத்துக் கட்சிக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் விடுதலைச் சிறுத்தைகள் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறதுபோன்ற விடயங்கள் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. (வ)

## மன்மோகன் சிங் இந்தோனேசியா பயணம்



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் 4 நாள் பயணமாக இந்தோனேசியா மற்றும் சிங்கப்பூருக்கு நேற்று புறப்பட்டுச் சென்றார்.

இந்தோனேசியாவின் பாலித் தீவில் நடைபெறும் தென் கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டிலும், கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டிலும் பிரதமர் கலந்து கொள்கிறார்.

இந்த மாநாட்டின் போது அமெரிக்க அதிபர் ஒபாமா மற்றும் சீனப் பிரதமர் வென் ஜியாபாவ் ஆகியோரை மன்மோகன் சந்தித்துப் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியா பயணத்தினை முடித்துக்கொண்டு அவர் சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)


## தெலுங்கானா வலியுறுத்தி நடைப் பயணம்

தெலுங்கானா தனிமாநிலம் அமைக்க வலியுறுத்தி தெலுங்கானா ராஷ்டிர சமிதிக் கட்சியினர் நடைப் பயணம் மேற்கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகிய நடைப்பயணம் தெலுங்கானா பகுதி முழுவதும்எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நடைபெறும்.

இது குறித்து அந்தக்கட்சியின் எம்.எல்.ஏ. ஹரிஷ் ராவ் தெரிவிக்கையில்:

தனிமாநிலம் அமைத்துத் தருவதாக வாக்குறுதி அளித்துத்தான் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. ஆனால் இப்போது அது ஆணையங்கள், குழுக்கள், அனைத்துக் கட்சிக் கூட்டம் என்று காலம் கடத்துகிறது. எனவே காங்கிரஸ் கட்சியின் உண்மை முகத்தை வெளிப்படுத்தவே இந்த நடைப் பயணத்தை ஆரம்பித்துள்ளோம் என்றார். (வ)

### வரவேற்பு...



ஊழலுக்கு எதிராக ரதயாத்திரை மேற்கொண்டு வரும் பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி, ஜம்மு நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார். நிர்வாகிகள் அவருக்கு மாலை அணிவித்தனர்.

## மூளைக் கட்டி நோயால் 83 குழந்தைகள் பீகாரில் இறப்பு

பீகார் மாநிலத்தில் பரவி வருகிற மூளைக் கட்டி நோயினால் நாளுக்கு நாள் உயிரிழப்பு அதிகரித்து வருகிறது.

பீகார் மாநிலத்தில் உள்ள கயா என்னும் இடத்தில் கடந்த 81 நாள்களாக என்சிஃபாலிட்டிஸ் எனப்படும் மூளைக் கட்டியினால் 83 குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். நாளுக்கு ஒரு உயிரிழப்பை சந்தித்துவரும் கயா பகுதி மக்கள் மூளைக் கட்டியின் அபாயத்தை எண்ணி பீதியில் இருக்கின்றனர்.

மேலும் இதே நோயினால் 27 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் கயாவில் உள்ள அனுகிரகா நாராயன் மகத் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் 28 வயதுக்கு உட்பட்டவர்கள்.

மேலும் 384 குழந்தைகள் இந்தநோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அதில் 244 குழந்தைகள் குணமடைந்து திரும்பியதாகவும் 83 குழந்தைகள் உயிரிழந்ததாகவும் இன்னும் 27 குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ)

## இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு கடற்படை பாதுகாப்பு

மதுரை, நவ.18

இந்தியக் கடல் எல்லைக்குள் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களுக்கு, இந்திய கப்பல்படை மற்றும் கடலோர காவல்படையினர் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று மதுரை உயர் நீதிமன்றக் கிளை உத்தரவிட்டுள்ளது.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினரின் தாக்குதலில் இருந்து காக்கக் கோரி, சட்டத்தரணி ஸ்டாலின் உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், இந்திய கடல் பகுதியில் மீன் பிடிக்கும், தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையின் தாக்குதலில் இருந்து பாதுகாக்க கடற்படை, கடலோர காவல்படை இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று ஏற்கனவே உத்தரவிட்டிருந்தனர்.

இந்த நிலையில், இந்த உத்தரவை ரத்து செய்யக்கோரி, கடலோரக் காவல்படை உதவி இயக்குனர் ஜெனரல் சார்பில் உயர்நீதிமன்றக் கிளையில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு நேற்று முன்தினம் நீதிபதிகள் கே.என்.பாட்ஷா, எம்.வேணுகோபால் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. கடலோரக் காவல்படை சார்பில், மத்திய சொலிசிட்டர் ஜெனரல் ரவீந்திரன் ஆஜராகி, இந்திய கடல் எல்லையை தாண்டும் போது, தாக்குதல் நடத்தப்படுகிறது. இதைத் தடுக்க முடியாது. எல்லை தாண்டாமல் இந்திய கடல் பகுதிக்குள் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க வேண்டும்- என்றார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பீட்டர் ரமேஷ்குமார், தமிழக மீனவர்களை பாதுகாக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் உத்தரவிட்ட பின்னர், 13 முறை தாக்குதல் நடந்துள்ளது.

மத்திய அரசு தாக்கல் செய்த பதில் மனுவில், எல்லை தாண்டிச் செல்வதை குறிக்கும் படம் ஒன்றை இணைத்துள்ளனர். அந்தப்படத்தில் உள்ள படகில், சிங்கத்தின் உருவம் இடம்பெற்றுள்ளது. எனவே அது இலங்கை மீனவர்களின் படகுதான் இதையே திரிவுபடுத்தி தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதாக குறிப்பிட்டுள்ளனர் என்றார். (வ)

## மாநிலப் பிரிப்புக்கு அரசு ஆதரவு வழங்க வேண்டும்

### ராமதாஸ் கோரிக்கை

உத்தரப்பிரதேச மாநிலத்தை நான்காகப் பிரிக்க வேண்டும் என்று அந்த மாநில முதல்வர் மாயாவதியின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

உத்தரப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களின் உணர்வுகளை மதித்து அந்த மாநிலத் தைப் பிரித்து 4 புதிய மாநிலங்கள் ஏற்படுத்தப்படும் என்று முதல்வர் மாயாவதி அறிவித்துள்ளார். இதற்கான தீர்மானம் சட்டப்பேரவையில் நிறை வேற்றப்பட்ட பின்னர் புதிய மாநிலங்கள் அமைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆந்திராவில் தெலுங்கானா, கர்நாடகத்தில் கூர்க், பீகாரில் மிதிலாஞ்சல்ஸ, குஜராத்தில் சௌராஷ்டிரா, மேற்குவங்கத்தில் கூர்காலாந்து, அசாமில் கூச்பிகார் என 20 இற்கும் மேற்பட்ட புதிய மாநில கோரிக்கைகள் அரசிடம் நிலுவையில் உள்ளன. சிறிய மாநிலங்களை உருவாக்குவதன் மூலம் அந்தப்பகுதியின் வளர்ச்சிக்கு வழிகோலுவதுடன் நாட்டின் வளர்ச்சியையும் பெருக்க முடியும் என்பதை உணர்ந்து புதிய மாநிலங்களை உருவாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவுத் தந்தை வீரசிங்கத்தின் சிலையை தேவை ஏற்படின் இடம்மாற்ற ஆலோசனை

சண்டிலிப்பாய், நவ.18

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நிறுவப்பட்டுள்ள கூட்டுறவுத் தந்தை அமரர் வி.வீரசிங்கத்தின் சிலையை தேவை ஏற்படின் மானிப்பாயில் பொருத்தமான இடத்தில் வைப்பதற்கு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் தலைமையில் நடைபெற்ற போது கூட்டுறவுத் தந்தையின் சிலை மாற்றப்பட வேண்டிய சூழ்நிலை குறித்து ஆராயப்பட்டது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

அமரர் வீரசிங்கம் அதிபராக இருந்த காலப் பகுதியில் கல்வி வளர்ச்சிக்காகவும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் மக்களின் முன்னேற்றத்துக்காகவும் பாடுபட்டதுடன் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியிருந்தார்.

அவர் கூட்டுறவுத் தந்தை என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார். இவர் கூட்டுறவுத் துறைக்கு ஆற்றிய சேவையைக் கௌரவிக்கும் முகமாக நினைவு மண்டபமும் சிலையும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அமரரின் சிலையை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டால் மானிப்பாய் பகுதியில் பொருத்தமான இடத்தில் அவருடைய சிலையை மீண்டும் நிறுவுவதற்கு சபை எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வது என்பது குறித்து ஆராயப்பட்டது. (ம-115)

# பிரதேச சபையால் நடப்பட்ட அறிவித்தல் அகற்றப்பட்டது

சண்டிலிப்பாய், நவ.18

மானிப்பாய் பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறாக வாகனங்களை நிறுத்த வேண்டாம் என்று பிரதேச சபையால் வீதியில் நடப்பட்ட அறிவிப்புப் பலகை விசமிகளால் இரவோடு இரவாக அகற்றப்பட்டுள்ளது.

இந்தச் செயல் குறித்து பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

வாகனப் போக்குவரத்தும் மக்கள் நடமாட்டமும் அதிகரித்துள்ளதால் விபத்துகளைத் தவிர்க்கும் நோக்குடனும் வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் குறிப்பிட்ட இடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு தடை விதிப்பது என்று பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கமைய மானிப்பாய் மத்திய சந்தைக்கு அண்மையாக பல இடங்களில் பிரதான வீதியில் வாகனங்களை நிறுத்த வேண்டாம் என்று எழுதிய பெயர்ப்பலகை பிரதேச சபையால் நடப்பட்டது.

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள முக்கியமான இடத்தில் நடப்பட்ட பெயர்ப்பலகை இரவோடு இரவாக வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

இந்தச் சமூக விரோதமான செயல் குறித்து வலி.தென்மேற்குப் பிரதேச சபையால் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-115-100)

# வலை வீசும் சிலந்தி

கொழும்பு, நவ.18

புதுவிதமான ஒரு சிலந்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலந்தியானது தனது இரையை வலை வீசிப் பிடிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளாம்.

காலி மாவட்டத்தில் ஹினிதும என்ற இடத்தில் இந்த விதமான சிலந்தி முதன் முறையாக இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக காலி மாவட்டத்தின் உயிரி பல்லினக் கல்விக்கான சங்கம் அறிவித்துள்ளது.

தென் ஆசியாவில் இந்தியாவைத்தவிர வேறு எந்த நாட்டிலும் இந்த வகை சிலந்திகள் பிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

1978 ஆண்டில் இந்தியாவில் இந்தவித சிலந்தி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் வேறு எந்த நாட்டிலும் அவ்வாறான சிலந்தி கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த சிலந்தி மீனவர்கள் மீன் பிடிக்க வலை வீசுவதைப் போல் அதன் வலையை வீசி இரையைப் பிடித்துக் கொள்கின்றது என்று ஆய்வாளர் மாலக்க போப்பகே கூறினார். (ப)

# கூட்டுறவுப் பணியாளருக்கு விசேட அறிமுகப் பயிற்சி

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பணிக்கு அமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு விசேட அறிமுக பயிற்சி நெறி ஒன்றை நடத்துவதற்கு மாவட்டக் கூட்டுறவுச் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அண்மைக் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் பணிக்கு அமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கே இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்தப் பயிற்சி நெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

# மனைப்பொருளியல் பயிற்சி

பளை அபிவிருத்திப் பேரவையால் மேலும் ஒரு தொகுதியினருக்கான மனைப்பொருளியல் பயிற்சி வகுப்புகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. தையல், கேக்ஐசிங், சிகை அலங்காரம் ஆகிய பயிற்சி வகுப்புகளே ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பேரவைத் தலைவர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் இலங்கை வங்கியின் பளை செயற்பாட்டு கிளை முகாமையாளர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்தார். (ம-207)

# இந்த வருடம் ரூ.40 கோடி பெறுமதியான தங்கம் மீட்பு

## சுங்கவரி அதிகாரி தெரிவிப்பு

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சட்டவிரோத மான முறையில் கொண்டு செல்ல முயன்ற சுமார் 40 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள் கள், தங்கம் போன்றவற்றை இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் இதுவரையிலான காலப் பகுதியில் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாகக் கொண்டு செல்ல முயன்ற வெளிநாட்டு நாணயத் தாள்கள் தங்கக் கட்டிகள், தங்க நாணயங்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் போன்றவற்றையே இவ்வாறு கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபர்கள் பலரையும் கைது செய்து சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் விமான நிலைய சுங்கப் பிரதி பணிப்பாளர் சட்டத்தரணி எம்.ஆர். ராஜமோகன் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களுள் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கப் பிரஜைகளும் அடங்குகின்றனர். அவர்களில் பலருக்கு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் செலுத்த முடியாதவர்களுக்கு சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (வ)

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்**

*2012 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்*

நேற்று 17.11.2011 பக்கம் 18 இல் பிரசுரமான மேற்படி அறிவித்தலில் மாசியப்பிட்டி சந்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை 138,158.00 என வாசிக்கவும்.

**சேவை**

UK, Singapore, Germany, Malaysia போன்ற நாடுகளுக்கான Visa ஆலோசனை

தொடர்பு: 0779692434

**வேலை ஆள்கள் தேவை**

விற்பனையாளர்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 0212229402 (10483)(2-6-7)

**காணி விற்பனைக்குண்டு**

நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அண்மையில், 7/5, பண்டாரிக்குளம் மேற்கு வீதி, 1ஆவது ஒழுங்கையில் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779482799 (10486)(3,7,8)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய் குற்றமற்ற 1979 ஆம் ஆண்டு பிறந்த தனியார் கம்பனியில் உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு பெற்றோர் படித்த, நற்பண்புகளுள்ள அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றார்கள். பொருத்தமானவர்கள் முழு விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.4195, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (10551)(6-7-8)

**வெளிவந்துவிட்டது**

**சங்கீதம்**

தரம் 11அறிமுறை - பகுதி I, II
புதிய பாடத்திட்டம்
தொகுப்பு
சங்கீத பூஷணம் கா. பரமேஸ்வரன்
வெளியீடு
"நேத்ரா பப்ளிகேஷன்"
தொ.பே. 0776747280
கிடைக்கும் இடம்
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல. 4, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே - 0212226693
(10547)(6-7-8)

# மரண அறிவித்தல்

## திருமதி குமாரசாமி தாமராதேவி (கிளி)



G.P.S. றோட், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், புலவனார் வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி தாமராதேவி 12.11.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா-செல்லம்மா தம்பதியரின் மருமகளும், குமாரசாமியின் (Rtd. CTB முகாரி) அன்பு மனைவியும், துஷந்தன் (கனடா), ஜிசந்தன் (தபால் ஊழியர்-யாழ்.தபாலகம்), சஜிதா (பிரான்ஸ்), நிஷாந்தன் (2012 கணிதப் பிரிவு யா.இ.க.) ஆகியோரின் பாசமிகு தாயும், கேசலிங்கம், சிறிகாந்தன் (சிறி), காலஞ்சென்ற சண்முகராசா (கனடா-ராசு) மற்றும் கணேஷ்வரன் (பிரான்ஸ்-குட்டி), சித்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சற்குணதேவி, இராஜேஸ்வரி (கனடா), றோசலின் (பிரான்ஸ்), செல்வராசா (கனடா) ஆகியோரின் மைத்துனியும், சின்னத் துரை-பரமேஸ்வரி (கனடா-சின்னமணி), தர்மலிங்கம்- அரியரட்ணம், Dr.நல்லைநாதன்-நிர்மலவதனி (UK) ஆகியோரின் மைத்துனியும், சகோதரியும், பிரசன்னா (பிரான்ஸ்), லக்ஷனா, சயந்தன் (கனடா) ஆகியோரின் மாமியும், ஹரிகரன் (கனடா), ஹர்சலா (கனடா) ஆகியோரின் பெரியதாயும், பிரியாவின் (பிரான்ஸ்) பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (20.11.2011) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த .அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு. (10547)(6-7-5)

தகவல்:
குடும்பத்தினர்.

# இரண்டு மணி நேரத்தில் அ.அட்டை

## ஜனவரியில் நடைமுறைக்குவரும்

கொழும்பு, நவ.18

எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்து இரண்டு மணிநேரத்துக்குள் வழங்கப்படுவிடும் என்று ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜெகாத் பி.விஜயவீர கூறியிருக்கிறார்.

ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர்களுடனான ஒரு சந்திப்பின்போது ஆணையாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார். அடையாள அட்டை வழங்குவதை ஒரு நாள் சேவைகளுக்குட்படுத்தி துரிதப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் தாம் இருக்கும் நாட்டிலும் பிரஜாஉரிமை பெற்றிருப்பார்களாயின் அவ்வாறு இரட்டை பிரஜா உரிமை உள்ளவர் களுக்கும் தமது திணைக்களத்தின் மூலம் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# ஆனைக்கோட்டையில் அமையும் முதியோர் இல்லத்துக்கு எம்.பி. உதவி

நவாலி, நவ.18

ஆனைக்கோட்டையில் அமைக்கப்பட்டுவரும் முதியோரின் பகல் பராமரிப்பு நிலையத்தை அண்மையில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இங்கு குழாய்க் கிணறு அமைக்க உதவுவதுடன் மற்றும் சில உதவிகளும் செய்து தருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார்.

இந்தப்பராமரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான காணியை ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய தர்மகர்த்தா சபையினர் இலவசமாக வழங்கியுள்ளனர்.

இந்த நிலையத்தை அமைப்பதற்கு சமூக சேவைத் திணைக்களம் 7 லட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

# ஆஸ்திரேலியாவில் அமெரிக்கப் படைகள் நிலைகொள்ள இருநாடுகளும் இணக்கம்

சிட்னி, நவ. 18

ஆஸ்திரேலியாவில் அமெரிக்கப் படையினரை நிலைகொள்ளச் செய்வதற்கு இரு நாடுகளும் இடையில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா - ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் இருவரும் ஒருமித்து கருத்து வெளியிட்டுள்ளனர். இதே வேளை அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவின் இந்த அறிவிப்பை சீனா எதிர்த்துள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், ஆஸ்திரேலிய பிரதமர் கில்லார்ட்டும் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவலை வெளியிட்டனர்.

இதுதொடர்பாக ஜூலியா கில்லார்ட் மேலும் தெரிவித்ததாவது;

ஆஸ்திரேலியாவின் வடபகுதியில் 200 - 250 அமெரிக்கப் படையினரை 6 மாத காலத்துக்கு நிறுத்தி வைத்திருப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி இந்தப் படையினரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, 2,500 பேர் கொண்ட ஒரு படையாகவும் அமையும். அத்துடன் இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்க விமானங்களுக்கும் ஆஸ்திரேலியத் தளங்கள் திறக்கப்படும் என ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, மனிதாபிமான மற்றும் பேரிடர் தேவைகளுக்கும் பாதுகாப்புச் சவால்களுக்கும் அமெரிக்கா மேலும் சிறப்பாகப் பதிலளிப்பதற்கு இந்த ஒப்பந்தம் வழிவிடும் என்றார்.

### சீனா எதிர்ப்பு

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்புக் கட்டமைப்பை பேணுவதற்கும் இந்த ஒப்பந்தம் உதவும்.அத்துடன் இந்தப் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளின் படைகளுக்கு பயிற்சி வழங்குவதற்கும் சிறிய நாடுகளுக்கு உதவி வழங்குவதற்கும் இது வழியமைக்கும். இதனால் அந்த நாடுகள் நெருக்கடிகளின்போது விரைவாக செயற்படுவதற்கு முடியும் என்றார்.

இதேவேளை அமெரிக்கப் படைகள் ஆஸ்திரேலியாவில் நிலைகொள்வது பொருத்தமற்றது எனவும் இது தொடர்பாக சர்வதேச சமூகத்துக்குள் கலந்துரையாடப்பட வேண்டும் எனவும் சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. (ந)

# ரஷ்யப் பிரதமருக்கு சீன அமைதி விருது

பீஜிங், நவ. 18



இந்தாண்டுக்கான சீனாவின் கன்பூசியஸ் அமைதி விருது ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடினுக்கு வழங்கப்பட இருப்பதாக, விருதுக் குழு அறிவித்துள்ளது.

இந்த விருதுக்காக அவர் தெரிவு செய்யப்பட்டமை குறித்து குழு உறுப்பினரும், கவிஞருமான கியாமோ டாமோ தெரிவிக்கையில்;

லிபியாவில் ஐ.நாவின் தீர்மானத்தின்படி, குண்டுவீச்சு நடந்ததற்கு புடின் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். அதற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட உள்ளது என்றார்.

சீனாவில் அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்த மனித உரிமை ஆர்வலர் லியூ ஷியாபோவுக்கு, கடந்தாண்டு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. அதற்கு சீன அரசு கடுமையான கண்டனம் தெரிவித்ததோடு, நோபல் பரிசுக்கு மாற்றாக, 'கன்பூசியஸ் அமைதி விருது' என்ற விருதை உருவாக்கியது. இந்தக் விருதுக் குழு கடந்த செப்ரெம்பர் மாதம் கலைக்கப்படும் என சீன பண்பாட்டுத் துறை அறிவித்திருந்தது. ஆனால், புடினுக்கான விருதை அறிவித்த டாமோ, புதிய நிர்வாகக் குழு ஒன்றைத் தான் அமைத்துள்ளதாகவும், விருது வழங்கும் விழா நடக்கும் எனவும் கூறியுள்ளார். (ந)

## பலஸ்தீன அதிபர் - ஹமாஸ் இந்த மாதம் கெய்ரோவில் சந்திப்பு

ரமல்லா, நவ. 18

பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் மற்றும் ஹமாஸ் இயக்கத் தலைவர் காலீத் மெஷல் இருவருக்கும் இடையிலான சந்திப்பொன்று இந்த மாதம் 25ஆம் திகதி, எகிப்து தலைநகர் கெய்ரோவில் இடம்பெற உள்ளது.

இதுகுறித்து பி.எல்.ஓ., வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தப் பேச்சு மூலம் இருதரப்புக்கும் ஏற்படும் இணக்கம், பொதுத் தேர்தலுக்கு வழிவகுக்கும். மேலும், பிளவுபட்டுள்ள பலஸ்தீனம், ஐ.நா.,வில் முழு உறுப்பினர் அந்தஸ்து எவ்வாறு பெற முடியும் என்ற சந்தேகத்துக்கு விடையும் அளிக்கும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் இயக்கம், 2006 பொதுத் தேர்தலில், காசா நிலப் பகுதியில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.இந்த இரு தரப்புக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகளைக் களையும் வகையில், பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸும், ஹமாஸ் தலைவர் காலீத் மெஷலும் இந்த மாதம் கெய்ரோவில் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளனர். (ந)

## 'வோல்ட்ஸ்ரீட்' ஆக்கிரமிப்பாளர்கள் மீண்டும் பூங்காவுக்குச் செல்லலாம்

### நியூயோர்க் நீதிமன்றம் தீர்ப்பு

வாஷிங்டன், நவ. 18

அமெரிக்காவின் ஜுக்கோட்டி பூங்காவிலிருந்து வலுக்கட்டாயமாக நியூயோர்க் பொலிஸாரால் வெளியேற்றப்பட்ட 'ஒக்கியூபை வோல்ஸ்ட்ரீட்' இயக்கத்தினர் மீண்டும் பூங்காவில் தங்கியிருப்பதில் பிரச்சினை இல்லை என நியூயோர்க் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனினும் தனியாருக்கு உரிமையான பூங்காவில் கூடாரங்கள் கட்டுவதற்கோ தங்குவதற்கோ நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இதனையடுத்து, ஜுகோட்டி பூங்காவில் இருந்து வெளியேற்றப்பட்ட 'வோல்ஸ்ட்ரீட்' இயக்கத்தினர் மீண்டும் அதே பூங்காவுக்கு திரும்பியுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி அதிகாலை, ஜுகோட்டி பூங்காவில் தங்கியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை, நியூயோர்க் பொலிஸார் பலவந்தமாக வெளியேற்றினர். இதனையடுத்து வெளியேறிய ஆர்ப்பாட்டக்காரர்கள் இந்த விவகாரம் குறித்து நியூயோர்க் உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையில், நேற்று நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் கூறப்பட்டதாவது:

அமெரிக்க அரசமைப்பின்படி, நியூயோர்க் அதிகாரிகள் செய்தது சரிதான். தொடர் போராட்டத்தின்போது பொது மக்களுக்குத் தொந்தரவு எதுவும் விளையக் கூடாது. அதன்படி, பூங்காவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டம் நடத்தலாம். ஆனால், இரவில் தங்கக் கூடாது. கூடாரம், பெரிய பைகள், உள்ளிட்ட பொருள்களுடன் உள்ளே போகக்கூடாது என உத்தரவிட்டது.

நியூயோர்க் மேயர் மிக்கேல் ப்ளூம்பெர்க் கூறுகையில், பூங்காவில் இருந்த சூழல், மக்களின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் இருந்தது. அங்கிருந்தவர்கள் ஆர்ப்பாட்டத்துக்காக வந்ததாகத் தெரியவில்லை. அதனால் தான் அவர்களை வெளியேற்றி, பூங்காவைத் தூய்மைப்படுத்த வேண்டியதாகி விட்டது. பாதுகாப்புக் காரணமாக இந்த நடவடிக்கை நள்ளிரவில் மேற்கொண்டது என்றார்.

இதையடுத்து, அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து, 'ஒக்கியூபை வோல்ஸ்ட்ரீட்' இயக்கத்தினர் ஆலோசித்து வருகின்றனர். (ந)




பிலிப்பைன்ஸ் சென்றிருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன், அந்நாட்டு அதிபர் பெனிக்னோ அகினோவை மணிலாவில் சந்தித்து பேசினார். (ந)

## சர்வதேச விண்வெளி நிலையத்துடன் ரஷ்ய விண்கலம் சோயுஸ் இணைவு

மாஸ்கோ, நவ.18

ரஷ்யா விண்ணுக்கு அனுப்பிய சோயுஸ் விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் நேற்றுமுன்தினம் இணைந்தது.

அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட சில முக்கிய நாடுகள் ஒன்றாக இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்து விண்வெளி நிலையம் பல்வேறு ஆராய்ச்சி பணிகளை மேற்கொண்டு வருகிறது. எனவே இந்த நிலையத்துக்குத் தேவையான பொருள்கள் அவ்வப்போது பூமியில் இருந்து விண்கலங்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன.இதன்படி ரஷ்யா சில தினங்களுக்கு முன்பு சோயுஸ் என்ற விண்கலத்தை கஜகஸ்தானில் உள்ள பைகானூர் ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து கடந்த திங்கட்கிழமை விண்ணுக்கு அனுப்பியது.



இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது;இந்த விண்கலத்தில் ரஷ்யாவின் அன்டன் ஸ்காப்லெரோவ், யுவானி சின் ஆகியோரும், அமெரிக்காவின் நாசா விண்வெளி வீரர் டேனியல் புர்பேங் ஆகியோர் சென்றுள்ளனர். திட்டமிட்டபடி நேற்று முன்தினம் இந்த சோயுஸ் விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்தது. இந்த விண்கலத்தில் சென்ற 3 வீரர்களும் விண்வெளி நிலையத்தில் 124 நாள்களுக்கு சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் தங்கி ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள். அதேசமயம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஏற்கனவே தங்கியிருந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவரும் ரஷ்ய விண்வெளி வீரர் செர்ஜி ஓல்கோவ், அமெரிக்காரின் நாசா விண்வெளி வீரர் மைக் போஸும், ஜப்பான் விண்வெளி வீரர் சட்டோஷி புர்காவா ஆகியோர் இந்த சோயுஸ் விண்கலத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி பூமிக்குத் திரும்ப உள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந)

## சீனாவில் கொடூர விபத்து; சிறுவர் உட்பட 19 பேர் சாவு

பீஜிங், நவ. 18



சீனாவின் வடமேற்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த கொடூரமான சாலை விபத்தில், 17 குழந்தைகள் உட்பட 19 பேர் பலியாகினர்.

சீனாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள கிங்யாங் நகரில் உள்ள சிறுவர் பாடசாலை ஒன்றுக்கு, 64 மாணவர்களுடன் சென்று கொண்டிருந்த பாடசாலை வாகனம் எதிரில் வந்து கொண்டிருந்த நிலக்கரி லொறியுடன் நேருக்கு நேராக மோதியது. இதில் சம்பவ இடத்திலேயே நான்கு குழந்தைகளும், வாகன ஓட்டுநரும் பலியாகினர். 14 பேர், மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலும், மருத்துவமனையிலும் பலியாகினர்; 45 குழந்தைகள் காயம் அடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் சீனாவில் பெரும் அதிர்ச்சியையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (ந)

## விமானத் தாக்குதலில் 16 தலிபான்கள் உயிரிழப்பு

இஸ்லாமாபாத், நவ. 18

பாகிஸ்தானில் அமெரிக்க விமானம் நடத்திய தாக்குதலில் தலிபான் தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த 16 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானின் தெற்கு வஜிரிஸ்தான் பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் தங்கியிருப்பதாக அமெரிக்க ராணுவத்துக்கு கிடைத்த தகவலையடுத்து அமெரிக்கா ஆறு விமானங்கள் மூலம் அப்பகுதியில் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் தலிபான் அமைப்பைச்சேர்ந்த 16 பேர் உயிரிழந்தனர். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அந்தப் பகுதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ந)

சர்வதேச கனிஷ்ட மெய்வன்மைப் போட்டியில்

# சர்வதேசப் போட்டிக்கு வடக்கிலிருந்து இருவர்



யாழ்ப்பாணம், நவ.18

2012ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச கனிஷ்ட மெய்வன்மைப் போட்டியில் பங்கு கொள்ளவிருக்கும் இலங்கை மெய்வன்மை குழாமில் வடமாகாணத்தைச் சேர்ந்த இருவர் தெரிவாகியுள்ளனர்.

உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியைச் சேர்ந்த் மாணவன் ஆர்.விமலேந்திரா ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டிக்காகவும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஏ.பவித்திரா பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் போட்டிக்காகவும் இலங்கைக் குழாமில் தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் இருவருக்குமான தேசிய ரீதியிலான பயிற்சிகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் கொழும்பு பியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

2010ஆம் ஆண்டு தேசிய ரீதியாக நடைபெற்ற போட்டி



களின் பெறுபேறுகளின் அடிப்படையில் இவர்கள் தெரிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பயிற்றுநர்களான கே.விஜிதரன் மற்றும் ரி.பாகீஸ்வரனும் இவர்களுக்கான பயிற்சிகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (எ-23)



யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் 14 வயதுப்பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்தைப்பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரர்கள் பயிற்றுநருடன். (எ-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.18

யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவ கழகங்களுக்கு இடையில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**பிற்பகல் 4 மணிக்கு**

பாசையூர் சென்.அன்ரனிஸ் மரூன் அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் வெள்ளை அணி மோதவுள்ளது.

**பிற்பகல் 4.55 மணிக்கு**

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

(எ-23)

# கிளிநொச்சி கிரிடா சக்தி நிகழ்வில் தெரிவான வீர வீராங்கனைகள்

யாழ்ப்பாணம்,நவ.18

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற கிரிடா சக்தி நிகழ்வில் தெரிவான வீரவீராங்கனைகளின் பெயர் விவரங்கள் வருமாறு.

**வலைப்பந்தாட்டம்**
**பெண்கள்**

டினோஷா இராசேந்திரன், டக்சா சிற்சபேசன், நிதர்சினி குணசிங்கம், யூசினா எதிஸ்லாஸ், கஜீபனா கஜேந்திரன்.

**கைப்பந்தாட்டம்**
**ஆண்கள்**

நவரெட்ணராசா கௌதமன், நவநேசன் அபிமன், மோகனதாஸ் விதுஷன், முருகானந்ரவி அருண், ஜெகநாதன் நிரோசன்

**கைப்பந்தாட்டம்**
**பெண்கள்**

ரவிச்சந்திரன் ஜசிந்தா, சேதுராமு சுதர்சினி, பத்மசிறி சதுசிகா, கருணராசா உமைசாந்தி, சகாதேவன் சந்தியா.

**உதைபந்தாட்டம்**
**பெண்கள்**

மேரி அமலினி, எம்.வேணுசியா, எஸ்.சந்திரவதி, ரி.சங்கவி, டி.மேரி டனிஸ்ரலா.

**உதைபந்தாட்டம்**
**ஆண்கள்**

நோவின் பிரகாஸ், ரி.டென்சன், ஆர்.தினேஸ், ஜே.டினிசியஸ், எம்.சாம் வில்சன்

**கபடி ஆண்கள்**

கந்தசாமி நிர்மலன், கமலதாசன் நிரூபன், அல்வினாஸ் ஜோஜ் மயூரன், தர்மகுலசிங்கம் விதுஷன், சுரேஷ்குமார் குயின்ஷன்

**கபடி பெண்கள்**

அலெக்ஸ்சாண்டர் தயாளினி, தில்லையம்பலம் கிருபாலினி, அன்ரனி கார்த்திகா, பாலசிங்கம் சயந்தினி, சுதர்சன் கீதஎஸ்சீபா

**கரப்பந்தாட்டம்**
**ஆண்கள்**

சிறிகரன் அனுசாந், தர்மபாலன் பவித்திரன், தர்மலிங்கன் சசிதரன், நாகராசா தவக்குமார், குகதரன் குவிந்தன்.

**கரப்பந்தாட்டம்**
**பெண்கள்**

ஆனந்தராஜா ஜீவிதா, புஸ்பராஜா தனுஷா, விஜயகுமார் மனு, செல்வநாயகம் கிருசாந்தி. (எ-23)

# சென்.றோக்ஸ் உதைபந்தாட்டம் இளவாலை யங் ஹென்றிஸ் வெற்றி



யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியிலாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் லீக் முறையிலான ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் வதிரிடயமன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

(எ-23)

# டெஸ்ட் தொடர் சம்பியன் இப்போதைக்கு இல்லை

2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் உலக டெஸ்ட் சம்பியன் தொடர் கிரிக்கெட் போட்டியை நடத்த வாய்ப்பு இல்லை என்று ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

உலகக் கிண்ண ஒருநாள் போட்டியைப் போல டெஸ்ட் போட்டியிலும் உலக சம்பியன் தொடர் போட்டியை நடத்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) நடவடிக்கை மேற்கொண்டு வந்தது. முதலாவது உலக டெஸ்ட் சம்பியன் தொடர் போட்டியை 2013 ஆம் ஆண்டில் நடத்தலாம் என்று ஐ.சி.சி.முடிவு செய்து இருந்தது.

இந்த நிலையில் தனது இந்த முடிவில் இருந்து ஐ.சி.சி. திடீரென பின்வாங்கி உள்ளது. 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் உலக டெஸ்ட் சம்பியன் தொடர் போட்டியை நடத்த வாய்ப்பு இல்லை என்று நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

டுபாயில் நடைபெறும் இலங்கை-பாகிஸ்தான் அணிகள் இடையேயான ஒரு நாள் போட்டியை காண வந்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைமை செயல் அதிகாரி ஹாருன் லார்கட் அளித்த ஒரு பேட்டியில்,

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் கடைசி கூட்டத்தில், ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன் தொடர் போட்டியை 2017 ஆம் ஆண்டுக்கு முன்பு நடத்த முடியாது என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம்.

International Cricket Council

இந்தப் போட்டியை விரைவில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டு இருப்பது எனக்கு ஏமாற்றம் அளிக்கிறது. எதிர்கால போட்டி அட்டவணை மற்றும் ஒளிபரப்பு நிறுவனங்களுடன் செய்துள்ள ஒப்பந்தம் உள்ளிட்ட விவகாரங்களால் உலக டெஸ்ட் சம்பியன் போட்டியை தள்ளி வைக்க வேண்டிய நிலை உருவாகி இருக்கிறது.

சம்பியன்ஸ் கிண்ண போட்டியை டெட்ஸ் சம்பியன் தொடர் போட்டியாக மாற்றுவது என்பது முடியாத காரியம். உலக டெஸ்ட் சம்பியன் தொடர் போட்டியை நடத்துவதன் மூலம் டெஸ்ட் அணிகள் இடையேயான போட்டியின் தரம் நிச்சயம் அதிகரிக்கும் என்று கூறினார்.

(15)

# கலைமதி கழகத்தை வீழ்த்தி அல்வாய் மனோகரா சம்பியன்

யாழ்ப்பாணம், நவ.18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்றது. இதில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

மின்ஒளியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணி மோதியது.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவை இல்லையென்பதை நிரூபிக்கும் வரையில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன.

இரண்டு அணியினரும் முதல் பாதி ஆட்டத்தில் கோல் பெற எடுத்த முயற்சிகள் கைகூடாத நிலையில் ஆட்டம் நிறைவு



பெற்றது.

ஆனால் இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரண்டு அணிகளும் கோல் பெறவேண்டும் என்ற துடிப்புடன் களம் இறங்கி மோதிக் கொண்டன. இரு அணிகளும் கோல் பெறும் வாய்ப்பு அற்ற நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் வாய்ப்புகளை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டதைத் தொடர்ந்து 3:1 என்ற கோல்கள் அடிப்படையில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணியை வெற்றிக் கொண்டு சம்பியன் ஆனது.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

(எ-23)

# ஆபிரிக்காவை முதல் இன்னிங்ஸில் அடக்கியது ஆஸி.

முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த தென்னாபிரிக்க அணி தேநீர் இடை வேளை வரை 4 இலக்குகளை மாத்திரம் இழந்திருந்தது. பின்னர் மேலதிகமாக 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்குள் எஞ்சிய 6 இலக்குகளையும் இழந்து 266 ஓட்டங்களுடன் சரணாகதியானது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள ஆஸ்திரேலிய அணி அங்கு விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட்டில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றியைப் பதிவு செய்திருந்தது. இந்த நிலையில் நேற்றைய தினம் இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் ஜொகரனஸ் பேர்க்கில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய தென்னாபிரிக்க அணி சகல இலக்குகளையும் இழந்து 266 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான அடித்தளத்தை தெ.ஆபிரிக்க அணிக்கு அமைத்துக் கொடுத்தனர். டீ வில்லியர்ஸ் 64, கலிஸ் 54, டுமினி 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆபிரிக்காவின் ஆட்டம் தடுமாறத் தொடங்கியது. சந்தர்பத்தை பயன்படுத்திய ஆஸ்திரேலிய அணியும் அதற்கு அமைய களத்தடுப்பு வியூகங்களை மாற்றி ஆபிரிக்காவுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியது.

ஆபிரிக்க அணி 59.6 ஆவது பந்து பரிமாற்றத்தில் 241 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது 5 ஆவது இலக்கை இழந்தது. பின்னர் இறுதியில் 71 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பில் சிடில் 3, நதன் லயோன், மைக்கல் கிளார்க் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக உரிய நேரத்திற்கு முன்பே முடிக்கப்பட்டது. (15)

# இந்தியா இன்னிங்ஸ் வெற்றி



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில், இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட்தொடரை இந்திய அணி 2-0 எனக் கைப் பற்றி முன்னிலை வகிக்கிறது. இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க போராடிய டரன் பிராவோவின் சதம் வீணானது.


இந்தியாவுக்கு பயணம் செய்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் வெற்றி கண்ட இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது டெஸ்ட் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்தது.


முதல் இன்னிங்சில் லக்ஸ்மன் (176 ஆட்டமிழக்காமல்), டோனி (144), டிராவிட் (119) கைகொடுக்க இந்திய அணி 7 இலக்குகளுக்கு 631 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. மேற்கிந்தியத்தீவுகள் அணி, முதல் இன்னிங்சில் 153 ஓட்டங்களுக்கு சுருண்டு 'பலோ-ஒன்' பெற்றது. பின்னர், 478 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்சை தொடக்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 இலக்குக்கு 195 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டரன் பிராவோ (38), சந்தர்போல் (21) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.



நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு சந்தர்போல் (47) பெரிய அளவில் கைகொடுக்கவில்லை. மறு முனையில் அபாரமாக ஆடிய டரன் பிராவோ, டெஸ்ட் அரங்கில் தனது இரண்டாவது சதத்தை பதிவு செய்தார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த சாமுவேல்ஸ், அரைசதம் அடித்தார். ஐந்தாவது இலக்குக்கு 132 ஓட்டங்கள் சேர்த்த போது பிராவோ (136) ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த கோர்ல்டன் போச் (3) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய சாமுவேல்ஸ் (84), அஷ்வின் சுழலில் சிக்கினார். அடுத்து வந்த அணித்தலைவர் டரன் சமி (32) பெரிய அளவில் சோபிக்கவில்லை. தேவேந்திர பிஷூ (0) ஏமாற்றினார். மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்சில் 463 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இதன்மூலம் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பிடல் எட்வேர்ட்ஸ் (15) ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்தியா சார்பில் உமேஷ் யாதவ் 4, இஷாந்த் சர்மா, பிரக்யான் ஓஜா, அஷ்வின் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக இந்தியாவின் லக்ஸ்மன் தெரிவு செய்யப்பட்டார். (15)





## சேகுவரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்தும் விடுதலை பெற வேண்டும் என்று விரும்பியவர். அமெரிக்க சி.ஐ.ஏயின் உதவியுடன் அவர் பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவர் தற்போது இருந்தால் தமிழீழத்துக்கான போராட்டத்தை ஆதரித்திருப்பார் என்றே றொன் றைடினோர் சென்னையில் கடந்தவாரம் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

புரட்சிகர இயக்கம் என்பது புரட்சிகரத்தின் கருத்தியல் ரீதியான உந்துசக்தியாகும். புரட்சிவீரர் ஒருவர் தனது பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதம், தன்னால் தலைமை தாங்கப்படும் புரட்சி போன்றவற்றை மறந்தால், இந்தப் புரட்சிவாதி ஏகாதிபத்தியம் என்ற ஆடம்பரமான வசதி மிக்க மயக்கத்திற்குள் மூழ்கிவிடுவார்.

இதனால் இந்தச் சந்தர்ப்பத்தை எமது எதிரி நன்கு பயன்படுத்துவான். பாட்டாளிவர்க்க அனைத்துலகவாதம் என்பது எமது கடமையாகும், அத்துடன் புரட்சிகர அடிப்படையில் அவசியமானதுமாகும்.

ஆகவே ''நாங்கள் எமது மக்களுக்கு கல்வியை வழங்க வேண்டும்'' என சோசலிசமும் மனிதனும் என்ற நூலில் சேகுவரா குறிப்பிட்டுள்ளார்.

சேகுவேராவின் இந்தக் கோட்பாடுகள் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் மிகப் பொருத்தமானதாது. சேகுவேரா இருந்திருந்தால் நீங்கள் உங்களது சமஉரிமையைப் பெற்றுக் கொள்வதற்காகப் போராடுவதை ஏற்றுக் கொண்டிருப்பார் என்றே நான் நம்புகின்றேன்.

இலங்கையின் ஆதிக்க சக்திகளுடன் போராடி இதனைப் பெற்றுக் கொள்ள முடியாவிட்டால் நீங்கள் உங்களது சொந்த நாட்டைப் பெற்றுக் கொள்வதற்காகப் போராடுவதை சேகுவேரா விளங்கிக் கொண்டிருப்பார்.

ஆனால், தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பல இன்னல்களை எதிர்நோக்கிய தமிழர்கள் அதன் பின்னரே ஆயுதங்களைத் தூக்கினார்கள் என்ற வரலாற்றைக் கியூபர்கள் புரிந்து கொள்ளவில்லை.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்கள் அமைதிவழியில் போராடியிருந்தனர், ஆனால் அமெரிக்காவில் கறுப்பினத்தவர்களுக்கு எதிராகவும், இஸ்ரேலியர்களால் பாலஸ்தீனியர்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகளைவிட இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டனர்.

லத்தீன் அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளிலுள்ள சமூகவாதிகள், பொதுவுடமைவாதிகள், உள்நாட்டு அமைப்புக்கள் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டு ஈழப் போராட்டம் தொடர்பாக அவர்களுக்கு நீங்கள் விளக்கம் கொடுக்க வேண்டும்.

உங்களுடைய வரலாறு தொடர்பாக நீங்கள் அவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும். ஏன் நீங்கள் ஆயுதம் தூக்கினீர்கள், தனிநாட்டுக்காக ஏன் போராடினீர்கள், சுதந்திர தேசம் ஒன்று உங்களுக்கு ஏன் தேவை என்பது தொடர்பாக நீங்கள் அவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

உங்களுடைய துன்பங்களை, கடினங்களை, தமிழீழம் ஏன் அவசியமானது போன்றவை தொடர்பாக அவர்கள் கேட்டறிய வேண்டியவர்களாக உள்ளனர்.

தமது நாட்டில் வாழும் சுதேச மக்களுக்கு சம உரிமையை வழங்கியதன் மூலம் பொலிவியா, வெனிசுலா, ஈக்குவேடார் போன்ற நாடுகளில் தற்போது ஆட்சியிலுள்ள அரசுகள் புதிய அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான வாக்களிப்பில் அறுதிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளன.

புதிய அரசமைப்பின்படி பொலிவியாவில் நான்கு மொழிகள் தேசிய மொழிகளாக்கப்பட்டுள்ளன. இதில் மூன்று மொழிகள் சுதேச மக்களுக்குச் சொந்தமானவை. இதே போன்ற சில மாற்றங்கள் லத்தீன் அமெரிக்க சோசலிச ஆதரவு அரசுகளாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நாட்டு மக்கள் உங்களது பிரச்சினைகள் தொடர்பாக அறிந்து கொள்வார்களானால், நீங்கள் மிக இலகுவாக உங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் நீங்கள் கூறும் கருத்துக்களை செவிமடுத்து இலங்கைக்கு ஆதரவு வழங்குவதை நிறுத்திக் கொள்வார்கள்.

உலகெங்கிலும் வாழும் நாங்கள் ஒன்றாக இணைந்து இலங்கை அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சுதந்திரமான அனைத்துலக விசாரணை ஒன்றை நடத்துவதற்கான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் - என்றார் றொன். (உ) (மூலம்: புதினப்பலகை)

## தெற்காசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்திலுள்ள மற்றைய நாடுகளை முந்திக் கொண்டு நாம் முக்கியமானதொரு இடத்தைப் பிடித்திருக்கிறோம். இதுபற்றி நாம் பெருமைப்பட்டாலும் நாம் செய்ய வேண்டிய எத்தனையோ வேலைத் திட்டங்கள் இன்னும் உள்ளன'' என்றார் அவர்.

நாட்டின் இரண்டாவது சிறுவர் நீதிமன்றம் நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது. பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு நீதிமன்றத்தைத் திறந்து வைத்தார்.

யாழ். குருநகரில் முன்னர் இருந்த உயர் நீதிமன்றக் கட்டடம் புனரமைக்கப்பட்டு அதில் இப்போது சிறுவர் நீதிமன்றம் திறக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோர் நேற்று பருத்தித்துறை நீதிமன்றக் கட்டடத் தொகுதியையும் திறந்து வைத்தனர். அவர்களுக்கு பருத்தித்துறைச் சட்டத்தரணிகள் சங்கம் பெரும் வரவேற்பளித்தது.

குருநகரில் உரையாற்றிய நீதியமைச்சர் ஹக்கீம், நாட்டின் முக்கிய நகரங்களில் இன்னும் சில சிறுவர் நீதிமன்றங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்திய அமைப்பு இங்கு காணப்பட்டதனால் தேவையற்ற வகையில் உலகின் கவனம் இலங்கையின் மீது ஈர்க்கப்பட்டிருந்தது என்றும் அவர் கூறினார்.

நிகழ்வில் உரையாற்றிய ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்ததாவது:-

நிரந்தர சமாதானம் எமக்குக் கிடைத்திருக்கும் நிலையில் எல்லோரும் ஒன்றிணைந்து நாட்டின் நீதித்துறையை வலுப்படுத்த வேண்டும். நீதித்துறை சரியான முறையில் இயங்கினாலேயே வாழ்க்கை உறுதியாக இருக்கும். நீதித்துறை மீது நம்பிக்கை இல்லாவிட்டால் அமைதி இல்லாமல் போய்விடும். அது போன்று குற்றமிழைக்கும் சிறுவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்குப் பதிலாக அவர்களைத் திருத்தி அவர்களது குடும்பங்களுடன் இணைக்க முயற்சிக்க வேண்டும். இதற்கு நீதித்துறையுடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

சிறுவர்கள் சட்ட அறிவற்றவர்கள் என்பதால் அவர்கள் குற்றமிழைத்தார்கள் என்று கருதிக்கொள்ளாமல் சட்டத்துடன் முரண்படுகிறார்கள் என்றே கருதிக் கொள்ளவேண்டும் - என்றார்.

நிகழ்வில் நீதி அமைச்சின் செயலாளர் சுகத ஹம்லத், தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அலுவலர், அமைச்சு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (உ-4, 236, 313)

## உளம் மகிழ வாழ்த்துகின்றோம்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச
செயலக கலாசார பேரவை
நடத்திய கலாசார
விழாவில் சிறந்த ஓவியருக்கான
விருதைப்பெற்றுக் கொண்ட
ஓவியர் –

**தீசன்** ( சி.சிவராமதீசன்)
அவர்களை எங்கள்
மனங்கள் நிறைய
வாழ்த்தி நிற்கின்றோம்.

R.V.சவுண்ஸ் சேவிஸ்
ஆனந்தபுரம், கிளிநொச்சி





## 45ஆம் நாள் நினைவஞ்சலி
### சின்னையா வல்லிபுரம்



எமது நண்பன்
ஜனகனின் தந்தையின்
பிரிவால்
துயருற்றிருக்கும்
அன்னாரின்
குடும்பத்துக்கு ஆறுதல்
கூறுவதோடு
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!!
சாந்தி!!!

(Jamson Street, Wolverhampton)
பல்கலைக்கழக நண்பர்கள்,
ஐக்கிய இராச்சியம்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### தம்பிப்பிள்ளை சுதாகரன்(அரசன்)

மண்ணில்
19.04.1982

விண்ணில்
29.11.2010

எம் அன்பு சகோதரனே!
எமைவிட்டு தொலைவில் இருக்கின்றாய்.
என்றுதான் நினைத்தோம். ஆனால்
எமை விட்டு வெகு தொலைவுக்கு செல்வாய்
என்று எமக்கு தெரியாமல் போய்விட்டது
ஆனாலும் எமது எண்ணத்துள் புகுந்து
எமது உதிரத்துடன் கலந்துள்ளாய்.
உனது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்,

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
கன்னாகம்.

சகோதரர், சகோதரிகள்



## மரண அறிவித்தல்
### திருமதி பத்மநாதன் பூமணி

வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பத்மநாதன் பூமணி கடந்த 16.11.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான Dr.பூலோகசுந்தரம்-கமலாதாச்சி தம்பதியரின் அன்பு ம்ருமகளும் காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை, பாக்கியலச்சுமி, கோபாலகிருஷ்ணன்,(அப்புரை), புஸ்பவேணி ஆகியோரின் அன்புச் சகோதரியும். பத்மலீலா, கமலேஸ்வரி (பிரான்ஸ்), ரஞ்சிதமலர்(பிரான்ஸ்), மனோகரன்(தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை) ஆகியோரின் அன்புத் தாயும். திருஞானசம்பந்தமூர்த்தி, அருந்தவச்செல்வம் (பிரான்ஸ்), சிறிசுகிர்தராஜா(பிரான்ஸ்), யயோதினி ஆகியோரின் அன்பு மாமியும் கிருஸ்ணதாஸ், பத்மஜெயன், உஷாந்தினி, கரன், சுதன், ராஜ், இளவதனன், கயவதனன், ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(17.11.2011) வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்துத்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அற்கின்சன் வீதி,
வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.


## ஜெயலலிதாவின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை - இந்திய மீனவர்கள் எதிர் நோக்கும் பொதுவான பிரச்சினைகள் உடன் தீர்க்கப்படவேண்டுமானால் இரு நாட்டு மத்திய அரசுகளும் பொதுவானதொரு உடன்படிக் கையை இந்த விடயத்தில் கையாளவேண்டும் என்று அந்த இயக்கம் ஆலோசனை வழங்கியுள்ளது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்திய மீனவர்கள் அத்துமீறி எமது கடல் எல்லைக்குள் புகுந்து சட்ட விரோத உபகரணங்களைப் பாவித்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இதனால் எமது நாட்டு கடல் வளங்கள் அழிக்கப்படுவதுடன் எமது நாட்டு மீனவர்களுக்கும் இது பேரிடியாக அமைந்துள்ளது.

ஏனைய நாடுகளின் கடல் எல்லைக்குள் புகுந்து மீன்பிடியில் ஈடுபடுவது சட்ட விரோதம். அந்த வரையறைகளை மீறி மீனவர்கள் செயற்படும்போது கடற்படையினர் நடவடிக்கை எடுக்க நேரிடுமே தவிர, அதனைக் கைகட்டி வேடிக்கை பார்க்கமுடியாத நிலையே உருவாகும்.

எமது நாட்டு மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் சென்றால் அந்நாட்டு கடற்படையினர் கைதுசெய்கின்றனர். கைது செய்வதையோ அல்லது தண்டனை வழங்குவதையோ தாக்குதல் எனக் கூற முடியுமா?

தமிழக முதல்வர் ஜெயலலிதா இலங்கைக்கு எதிரான கடும் போக்குடையவர். எதையும் ஆராயாமல் அர்த்தமற்ற அறிக்கைகளை வெளியிடுகின்றார். இந்திய மத்திய அரசுக்கும் இலங்கை மத்திய அரசுக்கும் இடையில்தான் கொடுக்கல் வாங்கல். நாம் தமிழக அரசுடன் அரசியல் நடத்தவில்லை. ஜெயலலிதாவின் கொக்கரிப்புக்கு இலங்கை அஞ்சாது .அவரின் கொக்கரிப்பு இலங்கையில் செல்லாக்காசாகவே கருதப்படும் - என்றார் அவர். (த-சி)


## ஆசிரியர் பதவி

தரம் 06-09 வரை
கணிதம், ஆங்கிலம்,
சைவசமயம், தமிழ்

ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள்
வேண்டிய சான்றிதழ்களுடன்
நேரில் வரவும். -அதிபர்

The Express Institute
Irupalai Junction Kopay.



## தேவை

K.K.S.வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகம் ஒன்றுக்கு றொட்டி தயாரிக்கத் தெரிந்தவர் தேவை. T.P: 077-4245943,077-4493615



## உடன் விற்பனைக்கு

பேக்கிள்ஸ் - எஞ்சின்
100KV வோல்டேச்
UK சைலண்ட் மொடல் 2007
தொடர்பு கொள்ள
0777300882

(10559)(6-7-8)



யாழ் நகரில் සිංහල පංති

## சிங்கள வகுப்புகள்

(எழுத, பேச, வாசிக்க பூரணபயிற்சி)

புத்தம் புதிய
ஆரம்பம்
நாளை முதல்

சனி, ஞாயிறு
தினங்களில்
7.a.m - 7.p.m

தலைநகர் பிரபல ஆசிரியர்
K.பரமேஸ்வரன்
ஆசிரியரின் தொடர்புக்கு: 0777 624 510
சகல தொடர்புகளுக்கும்:-
CAPSTONE (PVT) LTD.
01, Brown Road, Jaffna
Tel: 021 2220727, 0217200777, 0771250350



## முன்பள்ளி ஆசிரியர் தேவை

முன்பள்ளி பயிற்சி பெற்ற
ஆங்கில அறிவுடன் கூடிய
ஆசிரியர்கள்
உடன் தேவை

உயர்ந்த சம்பளம் வழங்கப்படும்
சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
-அதிபர்

KIDS GARDEN
The Express Institute
Irupalai Junction Kopay.



## மரண அறிவித்தல்கள்

### சின்னையா குணரத்தினம்



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா குணரத்தினம் கடந்த 15.11.2011 செவ்வாய்க் கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா- முத்தாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், மற்றும் நாகேந்திரராசா, கமலாம்பிகை, சீவரத்தினம், அம்பிகைபாகன் ஆகியோரின் சகோதரனும், சுகுமார், உருத்திராதேவி, ஜீவகுமாரன், ரூபகுமார், நேசகுமார், சிவகுமார், காலஞ்சென்ற அஞ்சுராதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சதா, புஸ்பா, மித்திரா, ரஞ்சனா, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற கலாமதி, சிவதேவி ஆகியோரின் மாமனும், சுபத்திரா, யாதவன், சுபோதன், ஷாமிலி, தனுஜா, அஜித்தன், தாரணி, கிஷாணி, கிஷாந்த், கிருஷாந், சஞ்சித், சங்கவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 57/2, ரன்சிவி லேன், பம்பலப்பிட்டியில் நாளை (19.11.2011) சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்றுப்பூதவுடல் பி.ப ஒரு மணியளவில் பொரளை கனத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு 2 மணியளவில் தகனக்கிரியைகள் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### கறுத்தார் செல்லத்துரை



ஆவரங்கால், சிவன்வீதியைச் சேர்ந்த கறுத்தார் செல்லத்துரை நேற்று (17.11.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கறுத்தார்- சாந்தி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான திருநெல்வேலி செல்லர்- இலட்சுமி தம்பதியரின் மருமகனும், இராசேஸ்வரி, இரத்தினேஸ்வரி, யோகபகீரதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமிர்தலிங்கம், ஜமுனா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், மதுரா, அபிரா, மதுரிகா, ஆர்த்திகா, தனு, கனிஸ்ரா, அஸ்வின், ஆகித், ஆகிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2011) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்வீதி,
ஆவரங்கால் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

### ஞானப்பிரகாசம் அருளானந்தம்

சமாதான நீதிவான், முன்னாள் முகாமையாளர்- யாழ்.ஐக்கிய வியாபாரச் சங்கம், நிருடெக் கரித்தாஸ், யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அருளானந்தம் கடந்த (14.11.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் ஞானப்பிரகாசம்- மேரி அக்னஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - எலின் தம்பதியரின் மருமகனும், தொம்மினிக்கம்மா மாகிறேட்டின் கணவரும், நோயல் மனோகரன், ரவீந்திரன், மியூறியல் மாலினி ஆகியோரின் தந்தையும், அகஸ்ரின், காலஞ்சென்றவர்களான விக்ரர், சிறில் மற்றும் பேணாட், பற்றிக், செல்வரட்ணம், நவரட்ணம், தர்மரட்ணம், மரியநாகயம் ஆகியோரின் சகோதரனும், பிலிப் நேரியின் மைத்துனரும், மேளின், வசந்தா ஆகியோரின் மாமனும், மச்சுவல், சுஜீவன், லிபியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (19.11.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

315, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## அதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 30 வருடகால போரின்போது இந்த நாட்டை இரண்டாகக் கூறுபோடுவதற்கு வெளிநாட்டுச் சதிகாரர்கள் பல்வேறு வகைகளில் அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தனர். எனினும், அதற்கு இந்த நாட்டு ஜனாதிபதிகள் இடம்கொடுக்கவில்லை.

போர் நிறைவடைந்தபோதும் ஜனாதிபதி இந்த நாட்டைக் காட்டிக்கொடுப்பதற்கும் பிளவுபடுத்தவும் இடமளியேன் என்பதைத் தெளிவாகக் கூறியிருந்தார்.

இந்த நிலையில், அரசு நிச்சயம் அதிகாரப்பகிர்வுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்காது. கூட்டமைப்பினர் கோருவதைப்போன்று அதிகாரப்பகிர்வு வழங்கப்பட்டால் அதிலும் அவர்கள் திருப்தியடையாமல் புலிகள் கேட்டதைப் போன்று தனிநாட்டுக் கோரிக்கையையே முன்வைப்பார்கள். ஒருவேளை அரசு மனம் இளகி, அதிகாரப்பகிர்வுக்குச் சம்மதித்தால் நிச்சயம் அதனை நாம் எதிர்ப்போம் - என்றார் அவர்.

## ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தக் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகிய பின்னரே உத்தியோகபூர்வமாக கருத்து வெளியிடலாம். அதே போன்று ஆராய்ந்து பார்த்த பின்னர்தான் உள்ளடக்கங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

எது எப்படியிருப்பினும், ஐ.நாவின் கேள்விகளுக்கு தக்கவகையில் பதில் வழங்கப்பட்டிருந்தால்தான் அறிக்கை சாதகமாக அமையும். இல்லையேல், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை சர்ச்சையாகவே அமையும் - என்றார் அவர்.

(த-சி)

## நிதானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் அறிக்கை வெளிவரவுள்ள ஒரு புறச்சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சை ஆரம்பித்திருக்கும் அரசு, இதற்கு அதீத முக்கியத்துவத்தையும் வழங்கி வருகிறது.

ஆணைக்குழு அறிக்கையால் ஏற்படும் சர்வதேச ரீதியிலான தாக்கத்தை ஈடுகட்டும் வகையில் அரசின் போக்குகள் அமைந்துள்ளதால், இது விடயத்தில் தமிழர் தரப்பில் பெரும் அதிருப்தியான நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை குறித்து நாம் கேட்டபோதே நீதியரசர் விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கேள்வி :- தமிழ்க் கூட்டமைப்புடன் அரசு பேச்சை ஆரம்பித்துள்ளது. கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் வெளிவரவிருக்கின்றது. இதனால் ஏதேனும் சுமுகமான தீர்வு காணப்படலாம் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா?

பதில் :- இன்றைய காலகட்டத்தில் வடக்கு - கிழக்குத் தமிழ்ப்பேசும் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். அதனை எந்தவிதத்திலும் ஆட்டங்காண வைக்க இடமளிக்கக்கூடாது. ஆனால், அக்கட்சி மிக்க நிதானத்துடனும், முன்னெச்சரிக்கையுடனும் இன்றைய காலகட்டத்தில் நடந்துகொள்ளாவிட்டால் மக்கள் அதனைப் புறக்கணிக்கத் தொடங்கிவிடுவார்கள். தமிழ் மக்களின் ஒற்றுமை சீர்குலைந்துவிடும்.

நிதானத்துடனும், எச்சரிக்கையுடனும் அக்கட்சி நடந்துகொள்ளவேண்டும் என்று கூறுவதற்குக் காரணம் உள்ளது. சென்ற 60 வருடங்களாக பெரும்பான்மை இன அரசியல்கட்சிகள், ''அதைத் தருகின்றோம்; இதைத் தருகின்றோம்'' என்று கூறிவிட்டு எதையுமே முறைப்படி சட்டரீதியாகக் கொடுக்கவில்லை. 13ஆவது திருத்தச்சட்டம் கூட அமுல்படுத்தப்படவில்லை.

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்பாடு கிழித்தெறியப்பட்டது. டட்லி சேனநாயக்கா - செல்வநாயம் உடன்பாடு கைவிடப்பட்டது. சட்டவலுவுள்ள பிரதேசசபைகள் உருவாக்கித் தரப்படும் என ஜே.ஆர்.ஜெயவர்த்தன கூறிவிட்டுப் பின்னர் அதிலிருந்தும் அவர் நழுவிக்கொண்டார். ஆகவே, கண்ட மிச்சம் தமிழ்பேசும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு எதுவுமே அரசியல் ரீதியாக வழங்கப்படாததுதான்.

ஆயுதமேந்திய பிரபாகரன் காலத்தில் பிரபாகரன் மிஞ்சியமையால் அரசுகள் கெஞ்சின. இன்று நாங்கள் கெஞ்சி அரசு மிஞ்ச இடமளிக்கவேண்டிய அவசியம் எமக்கில்லை. எமது கோரிக்கைகள் தார்மீக அடிப்படையிலானது; சட்டரீதியானவை; சர்வதேச சமூகம் ஏற்கும் தன்மையுடையன.

ஆகவே, எமது அடிப்படைக் கொள்கைகளில் நாங்கள் பற்றுறுதியுடன் இருக்க வேண்டும். ஆனால், அதேநேரத்தில் நிதானத்துடன் செயற்படவேண்டும். ''எதையாவது தாருங்கள் அதையே ஏற்றுக்கொள்வோம்'' என்று நாங்கள் நினைத்தால் எம்மவர் இத்தனை பேர் சித்திரவதைப் பட்டதற்கும், உயிர்களைத் தியாகம் பண்ணியதற்கும் அர்த்தம் இல்லாமற்போய்விடும்.

அதுமட்டுமல்ல, ரயில் பாதைகள் அமைத்துத் தந்துள்ளோம், துறைமுகம் நிர்மாணித்துத் தருவோம்; புதிய பாதைகள் அமைப்போம் என்று கூறி எமக்கு ஏதோ சலுகைகள் தருவதுபோல் அரசுகள் பேசினால் அதில் அர்த்தமில்லை.

இவை யாவும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஒருகாலத்தில் நடைமுறையில் இருந்து அவற்றைச் செப்பனிடாது அரசுகள் செயல்பட்டதினால்தான் போக்குவரத்து வசதியின்மையை எமது மக்கள் இதுவரை சந்தித்து வந்துள்ளார்கள். எமக்கு வழங்கவேண்டியவற்றை வழங்காதிருந்துவிட்டு, இப்பொழுது வழங்குகின்றோம்; நாங்கள் உங்கள் மீது கரிசனை கொண்டுதான் இவ்வாறு செய்கின்றோம் என்றால் அது நகைப்புக்கு இடமானது.

அடிப்படைக் கொள்கைகள் என்று கூறும்போது பாரம்பரியமாகத் தமிழ் பேசி வந்த மக்களின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணையவேண்டும். அதனுள் முஸ்லிம்களுக்கு ஒரு அலகை ஏற்படுத்துவது தமிழ் மக்களும், முஸ்லிம்களும் கிழக்கிலுள்ள மக்களும் சேர்ந்து தமக்குள் எடுக்கவேண்டிய ஒரு தீர்மானம். அதில் மத்திய அரசு தலையீடு செய்ய வேண்டிய அவசியமில்லை.

தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரும் சேர்ந்து தம்மைத் தாமே ஆள்வதற்கு வழிவகுப்பதுதான் மத்திய அரசின் கடமை. பெரும்பான்மையினரான தமது மொழி, மதம், கலாசாரம் என்பவற்றை சிறுபான்மையினரும் பின்பற்றவேண்டும் என்று எதிர்பார்ப்பது சர்வதேச நியமங்களுக்கு முரணான ஒரு எதிர்பார்ப்பு.

வடக்கு, கிழக்கை இணைப்பதால் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்ப்பேசும் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ ஏன் பௌத்த மக்களின் தனித்துவம் கூடப் பாதுகாக்கப்படும்.

இந்தியாவில் சமஷ்டி முறையைப் பின்பற்றியதால் அந்நாடு எத்தனையோ விதமான மொழியுடைய மக்கள் கூட்டங்களை வைத்துக்கொண்டும் இன்றுவரையில் பிரிந்துவிடவில்லை. இலங்கையிலும் சமஷ்டி முறை அனுசரிக்கப்பட்டால் நாடு பிரிந்துவிடாது, ஒற்றுமைக்குத்தான் அது வழிகோலும். தற்போதைய சூழலில் சமஷ்டி ஒன்றே எமக்கு விடிவைத் தரவல்லது. சமஷ்டியே எமது சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தவல்லது. இந்த அடிப்படையை மனதில் வைத்துக்கொண்டுதான் அரசுடனான பேச்சு நடைபெறவேண்டும்.

இந்திய அரசமைப்பைப் போன்று சமஷ்டி என்று கூறாமலே சமஷ்டியின் கீழ் பெறக்கூடிய நல உரித்துகளை நாம் பெற இடமளிக்கலாம். சமஷ்டி என்ற பதத்தைப் பாவிக்காமலேயே மாகாணசபைகளுக்குரிய அதி உச்ச அதிகாரங்களை வழங்கலாம். வடக்கு, கிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமைகளையும் வலியுறுத்தலாம்.

சில அரசியல் கருத்துகள் சிங்கள மக்களுக்குப் பிடிக்கவில்லை என்பதால் எங்கள் பாரம்பரிய உரிமைகளையும், தனித்துவங்களையும் விட்டுக்கொடுக்க முடியாது. சமஷ்டி என்ற பதத்திற்கு பிழையான அர்த்தம் கற்பித்தவர்கள் பெரும்பான்மை அரசியல்வாதிகளே. இப்பொழுது அதனுடைய் உண்மையான அர்த்தத்தை மக்கள் விளங்கிக்கொள்ள சிங்கள அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எந்த அறிக்கையும் வரலாம், போகலாம் எந்தப் பேச்சும் நடைபெறலாம். ஆனால், எங்கள் அடிப்படைக் கொள்கைகளில் பற்றுறுதியுடன் இருந்து ஸ்திரத்தன்மையுடன் கூட்டமைப்பினர் அரசுடன் பேசவேண்டும். அதைத்தான் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்பதுதான் எனது கருத்து.

- இப்படி சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

(த-சி)

**யா/ நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை**
**கரவெட்டி (அரசடி பள்ளிக்கூடம்)**

**பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்**

காலம்:- 2011.11.19 சனிக்கிழமை பி.ப 3 மணி

இடம்:- பாடசாலை மண்டபம்.

*மேற்படி கூட்டத்தில் புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம்பெற இருப்பதால் அனைத்துப் பழைய மாணவர்களும் இதில் பங்குகொண்டு உங்களது ஊறுப்புரிமையினை உறுதிப்படுத்திக்கொள்வதுடன் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

**அதிபர்.**

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராமேஸ்வரத்தில் இருந்து புதன்கிழமை அதிகாலை 650 இற்கும் மேற்பட்ட படகுகளில் 2 ஆயிரம் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். நேற்றுமுன்தினம் நள்ளிரவு கச்சதீவு அருகே அவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர், மீனவர்கள் மீது கற்களையும், கட்டைகளையும் வீசித் தாக்குதல் நடத்தினர். இதில் சகாயம், ஆரோக்கியராஜ் ஆகிய இரு மீனவர்கள் பலத்த காயமடைந்தனர்.

விடிய விடியக் கனமழை கொட்டிய போதும் இலங்கைக் கடற்படையினர் விடாது தாக்குதல் நடத்தினர் என கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

50 இற்கும் மேற்பட்ட படகுகளைச் சேதப்படுத்தியதுடன், வலைகளை அறுத்துவிட்டு மீன்களையும் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர் என இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாநில அரசு கடிதம் எழுதுவதோடு நின்றுவிடாமல் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த 16 நாள்களில் மட்டும் 5 முறை ராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் 4 பேர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-சி)

**மரண அறிவித்தல்**



*இராசரத்தினம் ஸ்ரீகலாதர்*

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயைவசிப்பிடமாகவும்கொண்ட இராசரத்தினம் ஸ்ரீகலாதர் காலமாகிவிட்டார். அன்னார் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுஜீந்தா(யா/வேம்படி மகளிர் கல்லூரி), ஜான்சி(யா/வயவிளான் மத்திய மகா வித்தியாலயம்), ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (18.11.2011) இன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக உரும்பிராய் யோகபுரம் இளங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய்வடக்கு.

தகவல்: (மனைவி, பிள்ளைகள்)

**மரண அறிவித்தல்**



*கிறிஸ்தோப்பர் மேசி டெய்சி (இந்திரா)*

[ஆசிரியை யா/சென் மேரீஸ் வித்தியாலயம் (O.L.R)]

குருநகரைப் பிறப்பிடமாகவும் 6/2 மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ் தோப்பர் மேசி டெய்சி நேற்று(17.11.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

6/2 மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

*திருமதி மாணிக்கம்-கனகம்மா*

இணுவில் கிழக்கு தியேட்டர் லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் கனகம்மா. நேற்று (17.11.2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்பு மனைவியும் இராசமணி, மகேஸ்வரி, ஜெயசிங்கம்,(மின்சார சபை ஊழியர்), யோகம்மா, காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் ரஞ்சினி, புவனேஸ்வரி, ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

*திருமதி திரேசம்மா பொன்னுத்துரை*



அச்சுநகர், அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி திரேசம்மா பொன்னுத்துரை நேற்று (17.11.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், பற்றிமா ஜெயராணி, காலஞ்சென்ற மரியதாஸ், பிரான்சிஸ், செபஸ்ரியன், திரேசாமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற றெஜி பொன்கலன் மற்றும் பிறேமா, கொன்ஸ்ரன்ரைன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், கொட்விறியோசவ், மரியறொய்சி, றெஜினோல்ட் (கனடா), மேரி ஆன் (கனடா), வாகுசன், மெலானி(பிரான்ஸ்),செதறிக் (பிரான்ஸ்) குளோய் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மிரோன், டெவினா, மிரில்டா, அல்வின் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.11.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்க அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியைத் தொடர்ந்து சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுநகர்,
அச்சுவேலி.

தகவல்:
பொ.செபஸ்ரியன் (மகன்)
யோ.ஜீவன் (பேரன்)

யாழ்மண்ணில்
சற்றும் தளராது 5 ஆண்டு
நியாயவிலையில்
சேவையாற்றும் நிறுவனம்

5

சகலவிதமான
பிறிண்டிங் வேலைகளுக்கும்
நியாயமான விலையினை
வழங்கும் நிறுவனம்.

**யாழில் Mகொழும்பு பிறிண்டேர்ஸ்**
555,கே.கே.எஸ் றோட்(யாழ் இந்துக் கல்லூரி அருகாமை)
வடக்கில் நவீன பிறிண்டிங் துறையின் இன்றைய முன்னோடி!!!



**திசைகாட்டி**
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ் இந்து கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)
E.Mail: thisaikaddi@sltnet.lk Web: www.thisaikaddi.lk
T.P.: 0214914527, 0212219016
Tky07
- ஏழு வயதுக்குட்பட்ட மழலைகளுக்கான ஆங்கிலக் கற்கை நெறி
(புறஜெக்ரர் மூலம் நடத்தப்படும் குழந்தைகளுக்கான விசேட ஆங்கில கற்கை நெறி)
- எமது நிறுவனத்தின் வசதிகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளமையால் 5ஆவது பிரிவையும் நாளை 19.11.2011 பி.ப. 4 மணி ஆரம்பிக்கவுள்ளோம். ஒரு பிரிவில் 25 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர். தொலைபேசி மூலம் பதிவுகள் இடம்பெறமாட்டாது.

காரியதரிசி,
திசைகாட்டி.
(10553)(6-7-8)

**மெய்யியல் கருத்தரங்கு**
★ பேராதனை பல்கலைக் கழகத்தின் B.A இறுதியாண்டு 2011 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பரீட்சை எடுப்பவர்களுக்கான கருத்தரங்கு
★ பேராதனை பல்கலைக்கழகத்தின் மெய்யியல் சிரேஸ்ட விரிவுரையாளரினால் நடத்தப்படும்
★ இடம்: புதிய உயர் கல்லூரி வளாகம், ஆரிய குளம் சந்தி.
நாள்: 19.11.2011, 20.11.2011
காலை 9 மணிமுதல் 3 மணிவரை
குறிப்பு: வெளி மாணவர்களும் பங்கேற்கலாம்.
பதிவுகளை முன்கூட்டியே பதிவுசெய்யவும்.
விபரங்களுக்கு: எஸ்.அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி
ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம் தொ.பே: 021 222 8148
(சி 5798)(-,6,25)

# தென்கிழக்கு பல்கலையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,நவ.18

தென் கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞானப் பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள் நான்கு பேரை பகிடிவதை செய்தனர் என்ற குற்றச்சாட்டின்பேரில் 64 மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டமைக்கு எதிராக குறித்த பிரயோக விஞ்ஞான பீட மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது இடைநீக்கம் செய்யப்பட்ட 64 மாணவர்களையும் உடனடியாக கல்வி நடவடிக்கையில் உள்வாங்குமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

புதிதாக முதலாம் வருடத்திற்கு இணைக்கப்பட்டுள்ள மாணவர்கள் தங்கியுள்ள விடுதிகளுக்குச் சென்ற இரண்டாம் வருட மாணவர்கள் சிலர் பகிடிவதையில் ஈடுபட்டுள்ளனர் என்று பல்கலைகழக நிர்வாகத்திற்கு வழங்கிய தகவலையடுத்தே இந்த வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது என மாணவ பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

குறித்த முறைப்பாடு தொடர்பாக எந்தவித விசாரணைகளையும் நடத்தாமலேயே பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களை இடைநிறுத்தியுள்ளனர் என அவர்கள் தெரிவித்தனர். (சி)

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**
இலங்கை திறந்த பல்கலைக்கழக
சட்டமாணி நுழைவுப் பரீட்சை
ஒவ்வொரு சனியும் 1.00 மணிதொடக்கம் 4.00 மணிவரை
இலங்கை நிர்வாக சேவை (SLAS)
ஒவ்வொரு ஞாயிறும் 1.00 மணிதொடக்கம் 5.00 மணிவரை
துறைசார் விரிவுரையாளர்களினால்
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
தொடர்பு: 0754164564

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி
தெரிவுப் பரீட்சைக்கான வகுப்புக்கள்
ஆரம்பம்: 19.11.2011 சனி காலை 9 மணி
ஒவ்வொரு சனிக்கிழமைகளில் 9.00 a.m - 2.00 p.m
(60 மணித்தியாலய வகுப்புக்கள்)
P.ஜ மாசங்கர் வழமையான ஆசிரியர்
(அனுமதிக்கு முன்கூட்டியே பதிவுசெய்யுங்கள்)
**நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பிராசா இராசம்மா



வேலணை 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா இராசம்மா நேற்று (17.11.2011) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற புற்றிடங்கொண்டார் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசபை தம்பதியரின் அன்பு மருமகளும், பூமகள், காலஞ்சென்ற முருகதாஸ் மற்றும் கணேசதாஸ், ஜோகதாசன், சிவமலர் ஆகியோரின் அன்புத் தாயும், சத்தியநாதன், பங்கஜம், சுபாஷினி, குமுதா, நவரட்ணராஜா ஆகியோரின் அன்பு மாமியும், தர்ஷிகா, நந்துஜா, லாவண்யா, சரண்ஜா, எழிலன், மயூரன், பைரவி, வித்தகன், அஜனன், கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/24, சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## சுப்பிரமணியம் பத்மநாதன்

(முன்னாள் நாவலப்பிட்டி பிரபல வர்த்தகர்)



காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும், இல.21, ஈச்சமோட்டை வீதி சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பத்மநாதன் நேற்று (17.11.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இரத்தினம் - அன்னபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மரஞ்சினி, ஸ்ரீகுமரன் காலஞ்சென்ற பத்மமாலினி மற்றும் பத்மலோஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியேந்திரா (சக்தி ஸ்ரோர்ஸ், சுண்டுக்குளி), நகுலேஸ்வரி, சத்தியலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், சாலினி, சாயினி, சாந்தினி, கோகுலன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், கனகம்மா, புவனேஸ்வரி மற்றும் இராசதுரை (நாவலப்பிட்டி) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.21, ஈச்சமோட்டை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சின்னையா பொன்னுத்துரை



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பொன்னுத்துரை நேற்று (17.11.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னம்மாவின் சகோதரனும், விமலராணி (ஜேர்மனி), வரதராசா (டென்மார்க்), பத்மராணி (வலி.கிழக்கு வ.ப.ப.நோ.கூ சங்கம் அச்சுவேலி), காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் யோகசிவம் (கனடா) ஆகியோரின் தந்தையும், நிமலன், சயந்திரி, காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் டினீஸ் ஆகியோரின் மாமனும், நிமாலி, சஞ்சீபன், நவீனா, நிஜன், வித்னிசாயா, விம்லிசாயா, ஜனனி, ஜெகதீபன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), நெல்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், சயானா, ஜெனிலியா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு.

தகவல்:
ஜெ.பத்மராணி(மகள்)

**NALRAVI**
**SPOKEN ENGLISH**
பயிற்சி நெறியைப் பற்றி:
- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்
யாருக்காக:
- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:
BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்




NALBON
INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond
Head Office
527 2nd Floor
Galle Road Colombo 6
Tel 0112 363656 Fax 2360004
Jaffna Branch
62/20 3rd Floor
Stanley Road Jaffna
Tel 021 221 9 221
Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com
(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி பரம்சோதி தேவகுஞ்சரி

16.11.2011 புதன் கிழமை அகால மரணமடைந்த திருமதி பரம்சோதி தேவகுஞ்சரி அவர்களுக்கு எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

(10556)(2-6-7-8)
தலைம் ரெக்ஸ்ரைல், 22 A, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## ஜோர்ஜ் இராஜரட்ணம் கிருபைராஜா

யாழ். விக்டோரியா வீதியைச் சேர்ந்த ஜோர்ஜ் இராஜரட்ணம் கிருபைராஜா கடந்த (16.11.2011) புதன்கிழமை கத்தருக்குள் ஆறுதல் அடைந்து விட்டார்.

அன்னார் அற்புதமணியின் (அற்புதி) அன்புக்கணவரும், ஈவிலின் கிருஷாந்தனாவின் (U.K) பாசமிகு தந்தையும், ஜஸ்டின் இமையகாந்தன் நவரட்ணத்தின் (U.K) பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லையா இராஜரட்ணம்-டெய்சி இராசமலர் இராஜரட்ணம் தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான அருமை நாயகம் தம்பதியரின் அன்பு மருமகனும் எட்வேட் செல்வராஜா இராஜரட்ணம், அல்பிரெட் ஜெயராஜா செல்வரட்ணம் (U.K), கிறேஸ் பத்மினி இராஜரட்ணம், ஜொய்சி-ஷாந்தனி தனபால சிங்கம், றிச்சேட் தேவறாஜா இராஜரட்ணம் (நைஜீரியா), எஸ்தர் காமினி இராஜரட்ணம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சாவித்திரி, சண்முகவடிவு, காலஞ் சென்றவர்களான தனபாலசிங்கம், இன்பமணி, துரைறெட்ணம், Dr.அரியரட்ணம், Dr.செல்வரட்ணம், மனோன்மணி, பொன்மணி, ஜெயரட்ணம், இராசரட்ணம் மற்றும் Dr.ஜீவரட்ணம் (கொழும்பு), Dr.விஜயரட்ணம் (அவுஸ்திரேலியா) ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (19.11.2011) சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு 37/6, மாட்டின் ஒழுங்கையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொட்டடியில் அமைந்துள்ள மெதடிஸ் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

37/ 6, மாட்டின் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(10499)(6-7-8)

தகவல்:
கிருஷாந்தனா
(மகள்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.